# உதயன்


23

www.onlineuthayan.com

30: பக்கங்கள் சுடர் 27 கதிர் 315 வள்ளுவர் ஆண்டு 2043 புரட்டாதி 20 வியாழக்கிழமை (06/10/2012) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா 20.00

## நல்லூர் பிரதேச சபையின்
# காணியை அடாத்தாக பிடித்தனர் படையினர்

### காவலாளியைத் துரத்திவிட்டு இராணுவப் பாதுகாப்பு

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 6

திருநெல்வேலி பாற்பண்ணைக்கு முன்பாகவுள்ள நல்லூர் பிரதேச சபைக்குச் சொந்தமான காணியை நேற்று சபையின் அனுமதி எதுவுமின்றி அத்துமீறி அடாத்தாகக் கையகப்படுத்தினர் படையினர். இந்தக் காணியை படையினருக்கு வழங்குவதில்லை என நல்லூர் பிரதேச சபை அண்மையில் கூடி விசேட தீர்மானம் ஒன்றை நிறைவேற்றிய நிலையில் நேற்றுக்காலை படையினர் இந்தச் செயலில் ஈடுபட்டுள்ளனர்.

**இது தொடர்பான முறைப்பாட்டை ஏற்க மறுத்த பொலிஸார் இந்தக் காணி இராணுவத்தினருக்கு ஒதுக்கப்பட்டுள்ளதாக அரச அதிபரால் அறிவிக்கப்பட்டுள்ளது என்று கூறியுள்ளனர்.**

நேற்றுக்காலை அங்கு சென்ற படையினர் அங்கிருந்த காவலாளியைத் துரத்திவிட்டு காணியின் வாசல் கேற்றை மூடிப் பூட்டுப்போட்டதுடன் அதற்கு இராணுவப் பாதுகாப்பும் வழங்கினர்.

பிரதேச சபையின் காணி என்று ஏற்கனவே அடையாளமிடப்பட்டிருந்த போதும் நேற்றுக்காலை படையினர் அத்துமீறி அங்கு வந்து அதனைக் கையகப்படுத்தியதாக நல்லூர் பிரதேச சபையின் தலைவர் ப.வசந்தகுமார் தெரிவித்தார்.

பாற்பண்ணைக்கு முன்பாக அமைந்துள்ள இந்த 5 1/2 பரப்புக் காணியில் சிறுவர் பூங்கா ஒன்று அமைப்பதற்கு சபை தீர்மானித்தது. இதனையடுத்து அங்கு பூங்கன்று

பார்க்க பக்கம் 4

## காணாமற்போனோர் குறித்து அரசின் நடவடிக்கை என்ன?

### கேள்வி எழுப்புகிறார் நவிப்பிள்ளை

கொழும்பு,ஒக் 6

இலங்கையில் காணாமற்போன சமூக ஆர்வலர்கள் மற்றும் சிவில் சமூகத்தினர் தொடர்பில் அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன என்று ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் நாயகம் நவநீதம்பிள்ளை கேள்வி எழுப்பியுள்ளார் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.



எதிர்வரும் 2013ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள மனித உரிமைகள் சபை அமர்வுக்கு முன்னர் இதற்கான

பார்க்க பக்கம் 4

## பயனுள்ளதாக இருந்ததாம் கூட்டமைப்புடனான பேச்சு

### அமெரிக்காவில் புளுகினார் பீரிஸ்

நியூயோர்க்,ஒக் 6

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இலங்கை அரசு நடத்திய பேச்சுக்கள் பயனுள்ளதாக அமைந்ததாகவும், சில பிரச்சினைகளை இனங்காண்பதற்கும், சாத்தியமான தெரிவுகளைத் தேடுவதற்கு உதவியதாகவும் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில், கொலம்பியா பல்கலைக்கழகத்தின் மனித உரிமைகள் கற்கைகளுக்கான நிலையத்தில் கல்

பார்க்க பக்கம் 4

## இருபாலையில் கோர விபத்து
# மினி பஸ் சாரதி உட்பட 3 பேர் சாவு

### படுகாயமுற்ற 9 பேர் வைத்தியசாலையில்



யாழ்ப்பாணம், ஒக.6

இருபாலை, கற்பகப் பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் பருத்தித்துறை வீதியில் நேற்று நண்பகல் நடைபெற்ற கோர விபத்தில் மினி பஸ் சாரதி ஒருவர் உட்பட மூவர் உயிரிழந்தனர். 9 பேர் காயமடைந்தனர்.

உயிரிழந்தவர்களும் காயமடைந்தவர்களும் உடனடியாக யாழ்.போதனா வைத்திய

பார்க்க பக்கம் 4

## நீதிச்சேவை முரண்பாடு குறித்து நாடாளுமன்றில் விளக்கத் தயார்

### ஜனாதிபதி அறிவிப்பு

கொழும்பு, ஒக்.6

நீதிச் சேவைகள் ஆணைக்குழுவுக்கும் அரசுக்குமிடையில் எழுந்துள்ள கருத்து முரண்பாடுகள் குறித்து தேவைப்படின் நாடாளுமன்றத்துக்கு விளக்கங்களைக் கூறுவதற்கு அரசு தயாராகவே இருப்பதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஊடக நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் வெளியீட்டாளர்களுடன் நேற்று முன்தினம் அலரிமாளிகையில் நடத்திய சந்திப்பின் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறியுள்ளார்.



நீதித்துறையின் தீர்மானங்களிலோ அல்லது நீதிச் சேவைகள் ஆணைக்குழுவின் செயற்பாடுகளில் தலையிடவோ அரசுக்கு எந்தத் தேவையும் ஏற்படவில்லையென சுட்டிக்காட்டிய

பார்க்க பக்கம் 4

8 கூடங்குளம் அணு உலையை மூடும் வரை எங்கள் போராட்டம் தொடரும் என கூடங்குளம் அணு உலை எதிர்ப்புக்குழுவின் ஒருங்கிணைப்பாளர் உதயகுமார் தெரிவித்துள்ளார்.

9 உலகளவில் பிரிட்டன் மற்றும் அமெரிக்கப் பல்கலைக்கழகங்கள் கல்வித் தரத்தில் முதலிடம் வகிக்கின்றன என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

10 சீனாவின் யுன்னான் மாகாணத்தில் யில்லாங் என்ற கிராமத்தில் திடீரென நிலச்சரிவு ஏற்பட்டது. இதில் 18 மாணவர்கள் மண்ணில் புதைந்து பரிதாபகரமாக உயிரிழந்தனர்.

## உலக இளைஞர் மாநாடு 2014 இல் இலங்கையில்

கொழும்பு, ஒக்.6

2014ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள உலக இளைஞர் மாநாட்டை இலங்கையில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் நாயகம் பான் கீ- மூன், இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெருமவிடம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

இதுதொடர்பில், இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சரின்

பார்க்க பக்கம் 4

## வடமாகாணத்தில் 'திவிநெகும': ஜனநாயகத்துக்கு சாவுமணி

கொழும்பு, ஒக்.6

வடமாகாணத்துக்கு ஆளுநராக செயற்படுபவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் கையாள். ஜனாதிபதியினால் நியமனம் பெற்ற அவர் 'திவிநெகும'வுக்கான அங்கீகாரத்தை வழங்குவாராயின் அதனை வட



மாகாண மக்களின் அங்கீகாரமாக எவ்வாறு கருத முடியும்? இவ்வாறானவை ஜனநாயகத்துக்கு அடிக்கப்படும் சாவுமணியாகவே கருத்திற்கொள்ளப்படவேண்டும்.

இவ்வாறு நேற்று 'உதய'னிடம் கருத்து வெளியிட்டார் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா. நாட்டின் தற்போதைய

பார்க்க பக்கம் 4

## இலங்கை அகதிகளுக்கு சார்பாக ஆஸி. உயர்நீதிமன்றத்தில் தீர்ப்பு

கான்பரா,ஒக் 6

பாதுகாப்பு அச்சுறுத்தல் இருக்கலாம் என அடையாளம் காணப்பட்ட புகலிடக் கோரிக்கையாளர்களுக்குப் புகலிடம் வழங்க முடியும் என ஆஸ்திரேலிய உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

ஆஸ்திரேலியாவின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படக் கூடும் என அடையாளப் படுத்தப்பட்டோருக்கு புகலிடம் வழங்க முடியாது என அந்த நாட்டு பாதுகாப்புப் புலனாய்வு நிறுவனம் அறிவித்திருந்தது.

ஆயினும் அந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது என ஆஸ்திரேலிய உயர் நீதிமன்ற நீதிபதிகள் தெரிவித்துள்ளனர்.

எம்-47 என அடையாளப்படுத்தப்பட்ட இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர் ஒருவரைத் திருப்பி அனுப்புவது தொடர்பிலான வழக்கு விசாரணைகளின் போது நீதிபதிகள் இதனைக் குறிப்பிட்டுள்ளனர்.

இந்தத் தீர்ப்பானது இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்களுக்குச் சாதகமாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்படும் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் புகலிடக் கோரிக்கையாளர்களைச் சொந்த நாட்டுக்கு அனுப்பி வைப்பதோ அல்லது வேறு நாட்டுக்கு அனுப்பி வைப்பதோ கூடாது என நீதிபதி

பார்க்க பக்கம் 4

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அனைத்தையும் விமர்சிக்காதீர் அரசுக்கு பேராதரவு தாருங்கள்

## கூட்டமைப்பிடம் கோருகிறார் பஸில்

கொழும்பு,ஒக் 6

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்களுக்கு நன்மை தரும் விடயங்களுக்கு முழு ஆதரவு வழங்க வேண்டும். தவிர அரசின் அனைத்து நடவடிக்கைகளையும் விமர்சிக்கக் கூடாது எனப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை சமுர்த்தி மற்றும் விவசாய ஆராய்ச்சி உதவி உத்தியோகத்தர் சங்கத்தின் 15ஆவது பிரதிநிதிகள் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் பஸில் ராஜபக்ஷ மேற்கண்டவாறு கூறினார்.

பத்தரமுல்லையிலுள்ள அகில இலங்கை சமுர்த்தி மற்றும் விவசாய ஆராய்ச்சி உதவி உத்தியோகத்தர் சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற இந்த மாநாட்டில் தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசு முன்வைத்துள்ள திவிநெகும சட்டவரைவைப் பற்றி பூரண அறிவை பெற்றிராதவர்கள் ஜனாதிபதியையும் அரசையும் இந்தத் திட்டத்தையும் எதிர்த்து வருகின்றனர். இந்த திவிநெகும சட்டவரைவில் சமுர்த்தி அதிகாரசபையும் உள்வாங்கப்பட்டுள்ளது.

திவிநெகும திணைக்களம் அமைப்பதன் மூலம் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஏனைய அரச உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய திணைக்கள உத்தியோகத்தர்கள் பெறும் அனைத்துச் சலுகைகளையும் நன்மைகளையும் பெற்றுக்கொள்வார்கள். இதன் மூலம் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் நிரந்தர ஓய்வூதிய உத்தியோகத்தர்களாக மாறுகின்றனர்.

இந்ததிவிநெகுமதிணைக்களத்தின் மூலம் வறிய மக்கள் நன்மை பெறக் கூடிய அனைத்து விடயங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. 2005, 2010ஆம் ஆண்டுகளினுடைய மஹிந்த சிந்தனை வேலைத்திட்டத்தின் கீழ் சமுர்த்தி திட்டம் பலப்படுத்தப்பட்டுள்ளது.

இதனூடாக மக்கள் சிறந்த பயன்களை அடைந்து வருகின்றனர். ஆனால் இன்று நல்லவற்றையும் தீயவைகளாக எதிர்த்து வரும் சில தீய சக்திகள் இந்த நன்மையளிக்க கூடிய திவிநெகும திட்டத்தினை எதிர்த்ததன் காரணமாக இந்த சட்டவரைவு நிறைவேற்றம் சற்று பின்தள்ளப்பட்டுள்ளது.

எனினும் இந்த திவிநெகும சட்டவரைவை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கையிலுள்ள அனைத்து மாகாண சபைகளும் முழு ஆதரவினை வழங்கியுள்ளன.

இதனால் மிக விரைவில் இந்த சட்ட மூலம் நிறைவேற்றப்பட்டு சமுர்த்தி உத்தியோகத்தர்களும் பொதுமக்களும் நன்மை பெறுவார்கள்-என்றார்.(த)

## சட்டவிரோதத் தேவாலயம்; குப்பிளான் மக்கள் எதிர்ப்பு

யாழ்ப்பாணம், ஒக்.6

குப்பிளானில் சட்டவிரோதமாக வும் அமைக்கப்பட்ட தேவாலயத்தை திறக்கக் கூடாது என்றும் அப்பகுதி மக்கள் போர்க்கொடி தூக்கியுள்ளனர்.

குப்பிளான் பகுதியில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் கிறிஸ்தவ மதத்தின் ஒரு பிரிவைச் சார்ந்த ஒருவர் வழிபாட்டுத்தலம் ஒன்றை அமைக்க முயன்றார். ஆயினும் குப்பிளானில் குறித்த நபரைத் தவிர மற்றைய அனைவரும் இந்துக்கள் என்றும், இவ்வாறு இந்து மக்கள் பரந்து வாழும் பகுதியில் நிறுவப்படும் வேற்று மதத் தலம் ஒன்று மத ரீதியான முரண்பாடுகளுக்கு வழிவகுக்கும் என்று கூறி அந்தப் பகுதி மக்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். இதுகுறித்து அவர்கள் வலி.தெற்குப் பிரதேச சபையிடமும் முறையிட்டனர்.

இதனைத் தொடர்ந்து வலி.தெற்குப் பிரதேச சபைத் தலைவர் எந்தவித அனுமதியின்றி சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்டு வரும் குறித்த வழிபாட்டுத் தலத்தை அமைக்கும் பணிகளை இடைநிறுத்துமாறு உத்தரவிட்டதுடன் இது குறித்து பொலிஸாருக்கும் அறிவித்தார். ஆனால் அவற்றையெல்லாம் கருத்தில் எடுக்காத குறித்த வழிபாட்டுத் தலம் கட்டி முடிக்கப்பட்டு இன்று சனிக்கிழமை திறக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த மதத்தலம் திறக்கப்பட்டால் அதன்மூலம் குப்பிளானில் பெரும் முரண்பாடுகள் தோன்றலாம் எனவும் எனவே அவற்றைத் தவிர்ப்பதற்கு சட்டவிரோதமான முறையில் அமையப்பெற்ற இந்தத் தேவாலயத் திறப்பு விழாவை உரிய அனுமதியின் பின்னர் மேற்கொள்ளுமாறும் வலி.தெற்குப் பிரதேச சபைத் தலைவர் தி.பிரகாஸ் சம்பந்தப்பட்ட தேவாலய அமைப்பாளர்களிடம் கடிதம் மூலம் அறிவுறுத்தியுள்ளார். எனினும் அதனையும் மீறி தேவாலயம் இன்று திறக்கப்படவுள்ளதாகப் பரவிய தகவல்களை அடுத்து குப்பிளானில் பெரும் பதற்ற நிலை தோன்றியுள்ளது. (ந-5)

## தேசிய மாணவர் படையணியின் 'பாண்ட்' வாத்திய அணிவகுப்பு



யாழ்ப்பாணம், ஒக். 6

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் 20ஆவது தேசிய மாணவர் படையணியின் பாடசாலை மாணவர்களுக்கான 'பாண்ட்' வாத்திய இசை அணிவகுப்பு பயிற்சி நேற்று இரண்டாவது நாளாக யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

யாழ். துரையப்பா விளையாட்டரங்களில் இடம்பெற்ற பயிற்சிகளைத் தொடர்ந்து 'பாண்ட்' வாத்திய அணிவகுப்பு ஊர்வலம் நேற்றுக்காலை யாழ். நகர வீதிகளூடாக இடம்பெற்றது.

இந்தப் பயிற்சி ஊர்வலத்தில் வடமாகாணப் பாடசாலைகளைச் சேர்ந்த முன்னணிப் பாடசாலைகளில் 'பாண்ட்' வாத்தியக் குழுவினர் தத்தமது சீருடைகளுடன் கலந்து கொண்டனர்.

இராணுவ அணிவகுப்புப் பிரிவைச் சேர்ந்த ஆண், பெண்கள் ஒவ்வொரு குழுவுக்கும் தலைமை தாங்கி வழிநடத்திச் சென்றனர். (த-5-135)

# எதிரணிக் கூட்டில் இணையுமாறு பொன்சேகாவுக்கு மனோ அழைப்பு

கொழும்பு,ஒக் 6

'ஜனநாயக தேசிய கூட்டமைப்பின் தலைவர் சரத் பொன்சேகாவை, எமது எதிரணிக் கூட்டமைப்பில் இணைந்து கொள்ளுமாறு நாம் அழைத்துள்ளோம். ஐக்கிய தேசிய கட்சி, ஜனநாயக மக்கள் முன்னணி, ஐக்கிய சமவுடைமை கட்சி, நவ சம சமாஜ கட்சி ஆகிய பல்வேறு கட்சிகள் உள்ளடங்கும் எதிரணிக் கூட்டமைப்பில் அவரது கட்சியையும் இணைத்து கொண்டு இந்த அரசாங்கத்தை வீழ்த்தும் பொதுப் போராட்டத்தை முன்னெடுப்போம் என நான் சரத் பொன்சேகாவுக்கு கூறியுள்ளேன்' என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

தாம் அமைக்கவுள்ள எதிர்க்கட்சி கூட்டணியில், ஜனநாயக மக்கள் முன்னணியும் இணையவேண்டுமென மனோ கணேசனுக்கு, ஜெனரல் சரத் பொன்சேகா அழைப்பு விடுத்துள்ளதாக வெளியாகியுள்ள செய்தி தொடர்பில், கருத்து தெரிவித்த ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் மேலும் கூறியதாவது:-

எதிர்வரும் 18ஆம் திகதி கொழும்பு ஹைட்பார்க் திடலில் நடைபெறவுள்ள கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு சரத் பொன்சேகா எனக்கு நேரடியாக அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவருடன் இணைந்து செயற்படும் பல ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்த அழைப்பை எனக்கு விடுத்துள்ளார்கள். ஜனநாயக மக்கள் முன்னணி, தேசிய தளத்தில் விறுவிறுப்பாகச் செயற்படும் ஓர் அரசியல் கட்சி என்பதால் எமக்கு இத்தகைய அழைப்புகள் கிடைப்பது ஆச்சரியம் அல்ல.

18ஆம் திகதி கூட்டம், அரசியல் கட்சி கூட்டமைப்பு ஒன்றின் ஆரம்ப அமைப்பு கூட்டம் அல்ல என்றும், அது அரசு எதிர்ப்புப் பொதுக்கூட்டம் என்றும், பல்வேறு சிங்கள - பௌத்த அரசியல், மத, சமூக தலைவர்கள் கலந்து கொண்டு உரையாற்றவுள்ள இந்த கூட்டத்தில், நானும் கலந்துகொண்டு தமிழ் மக்கள் சார்பாக கருத்துரையாற்றி அந்த நிகழ்வுக்குத் தேசிய அடையாளத்தைத் தரவேண்டும் எனத் தான் விரும்புவதாகவும் சரத் பொன்சேகா என்னிடம் தெரிவித்தார்.

அவரது அழைப்புக்கு நான் நன்றி தெரிவித்துள்ளேன். ஆனால் 18ஆம் திகதி கொழும்பில் நடைபெறும் கூட்டத்தில் நமது கட்சி கலந்துகொள்வது தொடர்பில் நான் இணக்கம் தெரிவிக்கவில்லை.எது எப்படி இருந்தாலும் எதிர்வரும் 11ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெற ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்டுள்ள எமது அரசியற் குழு கூட்டத்தில் இது தொடர்பாகவும் நாம் ஆராய்வோம் என அவருக்கு கூறினேன்.

அதேவேளையில், நமது கட்சி உட்பட ஐக்கிய தேசிய கட்சி, ஐக்கிய சமவுடைமை கட்சி, நவ சமசமாஜ கட்சி ஆகிய பல்வேறு எதிர்கட்சிகள் பங்குகொண்டுள்ள எதிரணி கூட்டமைப்பில், அவரது கட்சியையும் இணைத்துக் கொள்ளுமாறு பொன்சேகாவுக்கு அழைப்பு விடுத்துள்ளேன்-என்றார். (த)

## சபைகளில் முரண்பாடுகளை தீர்க்க உயர்மட்டக் குழு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உள்ளூராட்சி மன்றச் சபைகளுக்குள் ஏற்படும் முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கான உயர் மட்டக் குழு ஒன்றை அமைக்குமாறு பிரதேச சபைகளின் தவிசாளர்களினால் கட்சித் தலைமைப் பீடத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சபையில் கட்சியை கொச்சைப்படுத்தும் கட்சி உறுப்பினர்கள் சிலர் தவறான வழியில் நடந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களை விசாரணை செய்து, தகுந்த நடவடிக்கை எடுத்து ஆரோக்கியமான ஒரு சபையாகக் கொண்டு செல்வதற்கு கட்சியில் உயர் மட்டக் குழு ஒன்றை அமைக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த சபைத் தவிசாளர்கள், கட்சியின் பொதுச் செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

# நோர்வே தூதரகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டம்

கொழும்பு,ஒக் 6

கொழும்பிலுள்ள நோர்வே தூதரகத்துக்கு முன்னால் நேற்று வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டமொன்று நடத்தப்பட்டது.

நோர்வேயில் பிரஜாவுரிமை பெற்றவர்களின் உறவினர்களால் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

நோர்வே அரசின் கீழ் இயங்கி வருகின்ற சிறுவர் காப்பகத்தினால் தமது பிள்ளைகள் பலவந்தமாக அழைத்துச் செல்லப்பட்டதைக் கண்டித்தும், அவர்களை மீட்டுத் தருமாறு வலியுறுத்தியும், ஒஸ்லோவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் உண்ணாவிரதம் மேற்கொண்டுவரும் தாய்மாரைக் காப்பாற்றக் கோரி இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

நோர்வே சட்டத்தின்படி வீடுகளிர் சிறுவர்கள் பெற்றோர்களால் அடித்துத் துன்புறுத்தப்பட்டால் அந்தச் சிறுவர்களை நோர்வே அரசு பொறுப்பேற்று அவர்களை வழிநடத்தும்.

இலங்கையர் உட்பட வெளிநாட்டவர்கள் பலரது பிள்ளைகள் இந்த சிறுவர் காப்பகத்தில் வைக்கப்பட்டுள்ளனர். பிள்ளைகளை ஒழுங்கான முறையில் பராமரிக்காததாலும், கணவன் மனைவிக்கு இடையில் ஏற்படும் சண்டையால் குழந்தைகள் பாதிக்கப்படுவதாலும் அவர்களை பெற்றோரிடமிருந்து பிரித்துத் தாம் பராமரித்து வருவதாக நோர்வே அரச தரப்பினர் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு நோர்வே காப்பகத்தினால் பலவந்தமாக அழைத்துச் செல்லப்பட்ட இலங்கையர்கள் உட்பட சர்வதேச நாடுகளைச் சேர்ந்தவர்களின் பிள்ளைகள் பெரும் துயரங்களை அனுபவித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சிறுவர் காப்பகத்தினால் அழைத்துச் செல்லப்பட்ட சிறுவர்கள் பல வீடுகளில் பணியாள்களாக அமர்த்தப்பட்டுள்ளதாகவும், பாலியல் துன்புறுத்தல்களுக்கு முகம் கொடுப்பதாகவும் பிள்ளைகளைப் பறிகொடுத்த பெற்றோர் குறிப்பிடுகின்றனர். இந்த நிலையில் தமது பிள்ளைகளை மீட்பதற்காக நோர்வே பிரஜாவுரிமை பெற்ற இலங்கை வாழ் தாய்மார் இருவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் ஒஸ்லோவில் அமைந்துள்ள டோம் தேவாலயத்திற்கு முன்னால் சாகும்வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.




அவர்களின் உடல்நிலை மிகவும் மோசமடைந்துள்ள நிலையில் உண்ணாவிரதம் இருப்போரைக் காப்பாற்றக் கோரியும், தடுத்து வைக்கப்பட்டுள்ள தமது உறவுகளை காப்பாற்றக்கோரியும், இலங்கையில் இருக்கும் உறவினர்களினால் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.இந்த ஆர்ப்பாட்டத்தின் பின்னர் நோர்வே தூதுவராலயத்தில் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீளக்குடியமர்ந்த மக்களுக்கு முகமாலையில் தற்காலிக வீடுகள்

கிளிநொச்சி,ஒக்.6

கிளிநொச்சி மாவட்டம் முகமாலை வடக்குப் பகுதியில் மீள்குடியமர்ந்த குடும்பங்களுக்குரிய தற்காலிக வீடுகளை 'சோஆ' நிறுவனம் வழங்கி வருகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட முகமாலை வடக்குப் பகுதியில் கடந்த முதலாம் திகதி மீள்குடியமர்ந்த மக்களுக்கான உடனடித் தேவைகளைப் பல்வேறு நிறுவனங்களும் மேற்கொண்டு வருகின்றன.

இந்த நிலையில் இப்பகுதியில் மீள்குடியமர்ந்த 15 குடும்பங்களுக்கு முதற்கட்டமாக நேற்றுமுன்தினம் 'சோஆ' நிறுவனத்தினால் 75ஆயிரம் ரூபா பெறுமதியான தற்காலிக வீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

மேற்படி வீடுகளுக்கான கம்பி, கூரைத்தகடுகள் என்பன வழங்கும் நிகழ்வு முகமாலை வடக்கு நாச்சிமார் ஆலய முன்றிலில் இடம்பெற்றுள்ளது. மீள்குடியமரும் சகல குடும்பங்களுக்கும் மேற்படி வீடுகளை வழங்குவதற்கு 'சோஆ' நிறுவனம் முன்வந்துள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(க-6)

# புரந்தன் காஞ்சிபுரம் கிராமத்தில் நாளை முக்கிய நிகழ்வுகள்

## வீதி நாடகமும் நடக்கும்

கிளிநொச்சி பரந்தன் காஞ்சிபுரம் கிராமத்தில் சட்டம் தொடர்பான விழிப்புணர்வு வீதி நாடகமும், முக்கிய ஆவணங்களைப் பெற்றுக்கொடுப்பதற்கான நிகழ்வும் நாளை ஞாயிறு பிற்பகல் 2.30 மணிக்கு பொது நோக்கு மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

கிளிநொச்சி பரந்தன் பகுதியின் பின்தங்கிய பகுதிகளில் ஒன்றான காஞ்சிபுரம் கிராமத்தில் தற்போது 62 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. கிளிநொச்சி சர்வோதய நீதிச்சேவை இயக்கத்தின் ஏற்பாட்டில் சட்டம் தொடர்பான விழிப்புணர்வு வீதி நாடகம் இடம்பெறுவதோடு சட்ட ஆவணங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கான ஆலோசனைகளும், சேவைகளும் வழங்கப்படவுள்ளன.

கிராம மக்களின் முக்கிய ஆவணங்களான பிறப்புச் சான்றிதழ், திருமணப்பதிவுச் சான்றிதழ், இறப்பு பதிவுச் சான்றிதழ் என்பன வழங்கப்படுவதோடு இலவசசட்ட ஆலோசனைகளும் சேவைகளும் மேற்கொள்ளப்படவுள்ளன. (க-6)

## கிளிநொச்சியில் பல்வேறு பகுதிகளிலும்

# சட்டவிரோதமான செயற்பாடுகள் தடுப்பதில் அதிகாரிகள் அசமந்தம்

*கிளிநொச்சி, ஒக். 6*

***கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் இடம்பெற்று வரும் சட்டவிரோத செயற்பாடுகளை தடுப்பதற்கு அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுப்பதில்லையென மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.***

கிளிநொச்சியின் பல்வேறு பகுதிகளிலும் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை, மற்றும் சிறுவர்களுக் எதிரான துஷ்பிரயோகங்கள் ஏனைய சமூக விரோதச் செயற்பாடுகள் என்பன அதிகரித்துக் காணப்படுகின்றன.

இதனைக் கட்டுப்படுத்துவதில் உரிய அதிகாரிகள் முழு அளவில் நடவடிக்கை மேற்கொள்வதில்லையெனச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

தருமபுரம், ஊரியான், கண்டாவளை, கல்மடு நகர், வட்டக்கச்சி போன்ற இடங்களில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி என்றுமில்லாதவாறு அதிகரித்துக் காணப்படுகின்றது.

ஆனால் இந்த நடவடிக்கைகள் உரிய வகையில் கட்டுப்படுத்தப்படாத நிலையே இங்கு காணப்படுகின்றது. இதனால் சமூகச் சீரழிவுகள் இங்கு அதிகளவில் காணப்படுகின்றன.

இதனைக் கட்டுப்படுத்துவதில் உரிய அதிகாரிகள் தவறுவதால் குறித்த பகுதிகளில் மிகமோசமான சமூக விரோத செயற்பாடுகள் இடம்பெறுவதைத் தடுக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

இதேவேளை இவ்வாறான செயற்பாடுகள் அதிகரித்துள்ளதால் பல்வேறு திருட்டுச் சம்பவங்களும் இடம்பெறுகின்றன. எனவே இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மேற்படி பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-6)

# அரைகுறை நிலையில் குளப் புனரமைப்பு வேலைகள்

துணுக்காய்,ஒக்.6

துணுக்காய் அம்பலப்பெருமாள்குளத்தின் புனரமைப்புப் பணிகள் நிறைவு பெறாமையினால் கிராம விவசாயிகள் கவலை கொண்டுள்ளனர்.

அம்பலப்பெருமாள்குளத்தின் புனரமைப்புப் பணிகள் இவ்வாண்டின் ஆரம்பத்தில் ஆரம்பிக்கப்பட்டன. குளத்துநீர் திறந்து விடப்பட்ட போது கமநல அமைப்பு எடுத்தபெரும் முயற்சியால் சிறுபோக நெற்செய்கை அவசர கதியில் விவசாயிகளால் மேற்கொள்ளப்பட்டது.

தற்போது காலபோக நெற்செய்கை தொடங்கியுள்ள நிலையில் குளத்தின் புனரமைப்பு வேலைகள் முழுமை பெறாமல் காணப்படுகின்றன.

குளத்தின் புனரமைப்பு வேலைகளைப் பொறுப்பெடுத்தவர்களின் அக்கறையின்மை காரணமாக குளத்தின் புனரமைப்புப் பணிகள் அரைகுறையில் உள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (க-18)

# பாடசாலை தளபாடங்களை புனரமைக்க நிதி ஒதுக்கீடு

நெளுக்குளம்,ஒக்.6

வவுனியா யுனிசெவ் நிறுவனத்தினால் வன்னிப் பாடசாலைகளின் தளபாடங்களைப் புனரமைப்பதற்கென நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மகாவித்தியாலயத்துக்கு 6 லட்சத்து 48ஆயிரத்து 300 ரூபாவும், உடையார்கட்டு மகா வித்தியாலயத்துக்கு 5 லட்சத்து 77ஆயிரத்து 200 ரூபாவும், மாங்குளம் மகா வித்தியாலயத்துக்கு 6 லட்சத்து 47 ஆயிரத்து 900 ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

மேலும் நெளுக்குளம் கலைமகள் வித்தியாலயத்துக்கு 16 லட்சத்து 59 ஆயிரத்து 500 ரூபாவும், தரணிக்குளம் கணேசவித்தியாலயத்துக்கு ஒரு லட்சத்து 91 ஆயிரத்து 800 ரூபாவும், மன்னார் சேவியர் ஆண்கள் மகா வித்தியாலயத்துக்கு 11 லட்சத்து 3ஆயிரத்து 500 ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

மேலும் மடுப் பிரதேசத்தின் அன்ரன்குளம் பாடசாலைக்கு 6 லட்சத்து 67 ஆயிரத்து 500 ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(க-402)

## அரபுக் கல்லூரியில் மாணவர் அனுமதி

நெளுக்குளம்,ஒக்.6

வவுனியா பட்டாணிச்சூரில் அமைந்துள்ள அரபுக் கல்லூரியில் தகுதி வாய்ந்த மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர் என்று கல்லூரி அதிபர் பி.எம் சப்றி தெரிவித்துள்ளார்.

இவர்கள் 11 வயதுக்கும், 13 வயதுக்கும் உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

அத்துடன் தேக ஆரோக்கியம் உடையவர்களாகவும், குர்ஆனைச் சரளமாக ஓதக் கூடியவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் இடம்பெறவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-402)

## புனரமைக்குமாறு வேண்டுகோள்

கற்சிலை மடு ஊடாக முத்துஐயன்கட்டு சென்றடையும் வீதி குன்றும் குழியுமாகவும் பாலங்கள் அபாய நிலையில் உள்ளமையாலும் அவலப்படும் மக்கள் இவற்றைப் புனரமைப்புச் செய்ய வேண்டுமென கேட்டுள்ளனர். கனரக வாகனங்கள் செல்லும் இவ் வீதி புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகிறது.

மேலும் இதில் அமைந்துள்ள சில பாலங்கள் அபாய நிலையில் உள்ளதாலும் மழை நீர் தேங்கி நிற்பதாலும் வீதியில் வாகனங்கள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இவ் வீதி முக்கியமான பஸ்போக்குவரத்துச் செய்யும் வீதி என்பது குறிப்பிடத்தக்கது. (க-500)



டெங்கு நோய் அபாயத்தை எதிர்கொண்டுள்ள வவுனியா நகரை அண்டிய பகுதியில் கவனிப்பாரற்றுக் காணப்படும் குப்பைகள். (க-402)

# மன்னார் பட்டதாரிப் பயிலுநர்களுக்கு நேர்முகப் பரீட்சைக்கான அழைப்பு

மன்னார்,ஒக்.6

மன்னார் மாவட்டத்தில் பட்டதாரிப் பயிலுநர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்களில் ஆசிரிய பதவியில் சேவையாற்றச் சம்மதம் தெரிவித்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை நாளை மறுதினம் 8 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 1 மணியளவில் மன்னார் வலயக் கல்வி அலுவலகத்தில் இடம்பெறுமென மடு வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

மேலும் கீழ்க் குறிப்பிடப்படும் பெயர்களை உடையோர் சகல ஆவணங்களுடனும் சமுகமளிக்குமாறு அவர் மேலும் கேட்டுக் கொண்டுள்ளார்.

செபமாலை பபியன் றோய்- 13 பனங்கட்டுக் கொட்டு கிழக்கு, மன்னார், அருட்சகோதரன் காணிக்கை நாதன் சோசை யோகநாதன்- மன்னார், ஐ.அஜித் லெம்பட்- 8ஆம் வட்டராம், பேசாலை, சாமினி ரகுசங்கர்- உப்புக் குளம் மன்னார், அல்போன்ஸ் மேரி சிபானி குரூஸ்- 4ஆம் வட்டாரம், பேசாலை.

மத்தியூஸ் ஒனேசியா கூஞ்ஞ- 4ஆம் வட்டாரம், பேசாலை, பர்னாந்து மேரி டெல்மிற்ரா- துள்ளுக்குடியிருப்பு பேசாலை, சி.பி.லக்சன்- 8ஆம் வட்டாரம், பேசாலை, சி.பி.ஜெய மரிய நிலானி- முருங்கன் பிட்டி, முருங்கன், மத்தியூஸ் பர்னாந்து- 19 வீட்டுத்திட்ட வீதி சாவற்கட்டு, மன்னார், சுதர்சினி- 8 பனங்கட்டுக் கொட்டு கிழக்கு மன்னார், எம்.தர்சினி லூட்ஸ் குரூஸ்- வசந்தம், புனித யூட்ஸ் வீதி, பேசாலை, கிறிஸ்ரின்- பாலம்பிட்டி, மடுக்கோவில், மன்னார், அகஸ்ரின் தேவராஜ் பிகிறாடோ- 126 பள்ளிமுனை மேற்கு, மன்னார்,

எவ்.அனற் பொப்சி- 8ஆம் வட்டாரம், பேசாலை, எ.குலாஸ் றெஜினோட் சேவியர்- 9ஆம் வட்டாரம் வங்காலை, எஸ்.அலன் மேரி சுபாஜினி குரூஸ்- ஒல்லிமோட்டை, சாவற்கட்டு, மன்னார், ஆரோன் துரம் அன்ரன் செல்வகுமார்- 8ஆம் வட்டாரம், பேசாலை, யோசப் மேர்வினா கோசை- 10ஆம் வட்டாரம், வங்காலை. (க)

# கற்சிலைமடு கிராமத்தில் 136 இந்திய வீடுகள்

## இரண்டாம் கட்டம் விரைவில் ஆரம்பம்

முல்லைத்தீவு,ஒக்.6

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் உள்ள கற்சிலைமடு கிராமத்தில் இந்திய வீட்டுத்திட்டத்தின் கீழ் 136 பயனாளிகளுக்கு நிரந்தர வீடுகள் வழங்கப்பட்டுள்ளன.

யு.என் கபிற்றாற் நிறுவனம், கிராமத்தில் ஒவ்வொரு வீட்டுக்கும் சென்று அவர்களது நிலைமைகளை அவதானித்துப் புள்ளி அடிப்படையில் 285 குடும்பங்களில் 136 குடும்பங்களைத் தெரிவு செய்தது.

மேலும் அவர்களுக்கான அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டு வீட்டுத் திட்டத்தினை ஆரம்பிக்குமாறும் கூறப்பட்டது.

போரினால் வீடுகளை இழந்த மக்களுக்கு இந்தத் திட்டம் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. இரண்டாம் கட்டத்திலும் தெரிவுகள் இடம்பெறவுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

மேலும் நீண்ட காலமாக நிரந்தர வீடுகள் இன்றித் தவித்த கற்சிலைமடு கிராம மக்களுக்கு வீட்டுத்திட்டத்தை வழங்குவதற்கு உதவிய ஒட்டுசுட்டான் உதவி அரச அதிபர் இக்கிராமத்துக்கான மின்சாரத்தையும் பெறுவதற்கு ஆவன செய்ய வேண்டும் எனக் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-500)

## யாழ். நகர் - அக்கராயன்

# அரச பஸ் சேவையால் பலருக்கும் திருப்தி

பூநகரி, ஒக்.6

பூநகரி வழியாக அக்கராயனுக்குக் காலையில் வரும் அரச பஸ் சேவைக்கு அக்கராயன் மக்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் திருப்தி வெளியிட்டுள்ளனர்.

அக்கராயன் பகுதியில் மீள்குடியமர்வு இடம்பெற்ற பின்னர் யாழ்ப்பாணத்திலிருந்து காலை 6.30 மணிக்கு இந்த அரச பஸ் புறப்பட்டு 9 மணியளவில் அக்கராயனை வந்தடைகிறது.

இதில் பயணிக்கும் ஆசிரியர்கள் பாடசாலைக்குப் பிந்திச் செல்லும் நிலையே காணப்பட்டது. இதனால் யாழ். நகரிலிருந்து காலை 6 மணிக்கு இந்த பஸ் புறப்பட வேண்டுமென்ற நீண்டநாள் கோரிக்கை தற்போது நிறைவேறியுள்ளது.

காலையில் யாழ்.நகரிலிருந்து 6 மணிக்குப் புறப்படும் பஸ் 8 மணியளவில் பூநகரி வழியாக அக்கராயன் வந்தடைகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (க-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரச்சினையைத் தீர்க்காவிடில் மிக மோசமான விளைவுகள்

## அரசை எச்சரிக்கிறார் மல்கம் ரஞ்சித்

கொழும்பு, ஒக்.6

தேசியப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் உள்ளகப் பொறிமுறைகள் தோல்வியுறுமானால், வெளிநாட்டுத் தலையீடுகள் ஏற்படும். பிரச்சினையைத் தீர்க்க முடியாது போனால், அது மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என்று இலங்கைக் கத்தோலிக்கத் திருச்சபையின் கர்தினால் மல்கம் ரஞ்சித் எச்சரித்துள்ளார்.

இலங்கையில் உள்ள கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான அவர், நீர்கொழும்பில் கர்தினால் குரே நிலையத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே இவ்வாறு கூறியுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேசியப் பிரச்சினையை கையாளும் விடயத்தில் வளைந்து கொடுப்பது முக்கியமானது.

அடிப்படையில் ஒரு உள்நாட்டு விவகாரமான, இந்தத் தேசியப் பிரச்சினையுடன் தொடர்புடையவர்கள் சரியான நிலைப்பாடுகளை எடுக்கத் தவறினால், அது மிகப்பெரிய தவறாக அமையும். உள்ளக இணக்க முயற்சிகள் மூலம் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது போனால், மோசமான விளைவுகளை ஏற்படுத்தும்.

நாம் நிலைமையைப் புரிந்து கொள்ள வேண்டும். சில வெளிநாட்டு சக்திகள் இலங்கை அரசுக்கு அச்சுறுத்தலாக உள்ளன. வடக்கு, கிழக்கு மாகாணங்களின் நிலைமையைக் காரணம் காட்டி வெளியகச் சக்திகள் தலையிடுவதற்கான சாத்தியங்களை நிராகரிக்க முடியாது. வெளிநாட்டுச் சக்திகளின் தலையீட்டின் மூலம் உலகின் பல் வேறு பகுதிகளிலும் பொம்மை அரசுகள் உருவாக்கப்பட்டுள்ளன.

ஆட்சியாளர்கள் எச்சரிக்கையோடு செயற்படாது போனால், இலங்கை கூட அதுபோன்ற அச்சுறுத்தலை எதிர்கொள்ள நேரிடலாம். உள்ளகப் பொறிமுறை மூலம் தீர்வு காணத் தவறினால், வெளியகத் தலையீடுகள் ஏற்படக் கூடும்-என்றார். (த)

## இருபாலையில்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். இதில் படுகாயமடைந்த மூவருக்கு அங்கு அவசர சிகிச்சை அளிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணிகளை ஏற்றிக் கொண்டுவந்த மினிபஸ்ஸும், யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கிச் சென்றுகொண்டிருந்த தென்னிலங்கை பஸ் ஒன்றும் நேருக்கு நேர் வேகமாக மோதிக் கொண்டதில் இந்தக் கோர விபத்து நிகழ்ந்தது. நேற்று நண்பகல் 12.30 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. இதில் மினிபஸ் சாரதியும் அதிலிருந்த பயணி ஒருவரும் உயிரிழந்தனர். தென்னிலங்கை தனியார் பஸ்ஸின் சாரதி, மற்றும் நடத்துநர் ஆகியோர் படுகாயமடைந்தனர்.

இருபாலை, கற்பகப்பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் பருத்தித்துறை வீதியில் அகலிப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. வீதியின் ஒரு பக்கத்துக்கு மட்டும் காப்பெற் இடப்பட்டுள்ளது.

விபத்தில் சம்பந்தப்பட்ட இரண்டு பஸ்களும் காப்பெற் இடப்பட்ட பக்கமாக மிக வேகமாக வந்துள்ளன. கற்பகப் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் உள்ள வீதி வளைவில் திரும்பியபோது யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கி வந்துகொண்டிருந்த பஸ்ஸைக் கண்ட மினிபஸ் சாரதி விபத்தைத் தவிர்ப்பதற்காக கடுமையாக முயன்றதாகவும், ஆயினும் கணப்பொழுதில் இரு பஸ்களும் நேருக்கு நேர் பெரும் சத்தத்துடன் மோதி உருக்குலைந்ததாகவும் விபத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர். விபத்தை அடுத்து அங்கு கூடிய மக்கள் உடனடியாக விபத்தில் காயமடைந்தவர்களை பெரும் சிரமப்பட்டு மீட்டு வாகனங்களில் வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர். மினிபஸ்ஸின் சாரதியை மீட்பதற்கு கடும் பிரயத்தனம் மேற்கொள்ளப்பட்டது. மினிபஸ்ஸின் முன்பக்கம் முற்றாகச் சிதைந்து சிதலமானது. அத்துடன் தென்னிலங்கை பஸ்ஸின் சாரதி அமரும் இருக்கை உள்ள பக்கம் கடும் சேதத்துக்கு உள்ளானது.

இந்த விபத்தில் மினிபஸ் சாரதியான உடுப்பிட்டி ஆதியமலையைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான அன்னலிங்கம் அமிர்தராஜ் (வயது-34), அந்த பஸ்ஸில் பயணித்தவரான வேலாயுதம் செந்தில்குமார் ஆகிய இருவரும் மீட்கப்பட்டு வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டவேளை உயிரிழந்து விட்டனர். காயப்பட்டவர்களில் சிறுவன் ஒருவன் (வயது-15) வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அங்கு உயிரிழந்தார். எனினும் அவரது சடலம் அடையாளம் காணப்படவில்லை.

இந்த விபத்தில் கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த சின்னையா சுப்பிரமணியம் (வயது-58), கோப்பாயைச் சேர்ந்த குமரேசசர்மா (வயது-29), வடமராட்சி திக்கத்தைச் சேர்ந்த என்.சிவயோகநாதன் (வயது-49), மினிபஸ் நடத்துனரான அல்வாய் வடக்கைச் சேர்ந்த கணேசரத்தினம் திவாகரன் (வயது-20), தொண்டமனாறு, சந்நிதி கோயிலடியைச் சேர்ந்த புஸ்பகுமார் தயாளினி (வயது-28), யாழ்ப்பாணம், 3ஆம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த நாகேஸ்வரி (வயது-35), வல்வெட்டித்துறை இராணுவ முகாமைச் சேர்ந்த ஜயந்தகுமார (வயது-35), தென்னிலங்கை தனியார் பஸ் சாரதியான கே.துஷார (வயது-40), அந்த பஸ்ஸின் நடத்துநர் ஆகியோர் கடும் காயங்களுக்கு உள்ளாகி யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(த-5-4-17)

## காணாமற்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

விளக்கத்தை இலங்கை அரசு முன்வைக்க வேண்டும் என நவநீதம் பிள்ளை கேட்டுள்ளார் என்றும் அந்தத் தகவல்கள் மேலும் கூறுகின்றன.

இந்த விடயம் தொடர்பில் அவர் ஜெனிவாவிலுள்ள இலங்கைப் பிரதிநிதிக்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சமூக ஆர்வலர்கள் மற்றும் சிவில் சமூகத்தினர் காணாமல் போகும் சம்பவங்கள் தொடர்ச்சியாக அதிகரித்துக் காணப்படுகின்றன.

இந்த விடயம் குறித்து இலங்கைக்குப் பயணம் செய்த மனித உரிமைகள் சபை உறுப்பினர்களும் அரசின் கவனத்துக் கொண்டு வந்திருந்தனர்.

இருப்பினும் இலங்கை அரசு இது தொடர்பில் எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாது தொடர்ச்சியான மௌனத்தையே கடைப்பிடிப்பதாகவும் அந்தக் கடிதத்தில் நவநீதம் பிள்ளை இலங்கை அரசைச் சாடியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (த)

## நீதிச்சேவை...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

ஜனாதிபதி, இது தொடர்பில் தவறான புரிந்துணர்வுகள் ஏற்பட்டிருக்குமாயின் அது கவலைக்குரிய விடயமென்றும் குறிப்பிட்டுள்ளார்.

''நாட்டில் நீதித்துறை மீதுள்ள மக்களின் நம்பிக்கை பாதிப்படையும் எந்தச் செயல்களையும் அரசு செய்யாது. இருந்த போதிலும் நீதிச்சேவைகள் ஆணைக்குழு மிகவும் பொறுப்புடன் செயற்படவேண்டும். நீதிச்சேவைகள் ஆணைக் குழுவுடன் நாங்கள் பேச்சு நடத்த முன்வந்தது அவர்களின் பல பிரச்சினைகள் பற்றிப் பேசத்தான். அதை நீதித்துறையில் நாங்கள் தலையீடு செய்ய முனைவதாகக் கூறுவதுதான் கவலைக்குரியது'' - என்றும் குறிப்பிட்டார் ஜனாதிபதி.

## காணியை...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

களும் நாட்டப்பட்டன. அத்துடன் நல்லூர் பிரதேச சபைக்கு இந்தக் காணி சொந்தமானது எனத் தெரிவிக்கும் அடையாளப் பலகையும் போடப்பட்டிருந்தது. சிறுவர் பூங்காவுக்கான விளையாட்டு சாதனங்களும் அடுத்த சில தினங்களில் பொருத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இந்தநிலையில் நேற்றுக் காலை 9.15 மணியளவில் அங்கு சென்ற 5 இராணுவத்தினர் காவலாளியைத் துரத்திவிட்டு தாங்கள் கொண்டு சென்ற பூட்டினால் கேற்றைப் பூட்டி இராணுவப் பாதுகாப்பும் போட்டனர். இதுகுறித்துக் காவலாளி நல்லூர் பிரதேச சபைத் தலைவருக்குத் தெரியப்படுத்தினார். உடனடியாக சம்பவ இடத்துக்குச் சென்ற தலைவரும், உத்தியோகத்தர்களும் அங்கு நின்ற படையினரிடம், இது பிரதேச சபைக்குச் சொந்தமான காணி என்பதை விளங்கப்படுத்தினர். எனினும் படையினர் அதனைக் கேட்கவில்லை. ஊரெழுப் படை முகாமில் இருந்து திருநெல்வேலி முகாம் பொறுப்பதிகாரிக்கு அறிவிக்கப்பட்டதன் அடிப்படையிலேயே தாங்கள் இந்த நடவடிக்கையை மேற்கொண்டதாக அவர்கள் பிரதேச சபைத் தலைவரிடம் தெரிவித்தனர்.

இதனை அடுத்து கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்கு முறைப்பாடு ஒன்றைத் தான் பதிவு செய்யச் சென்றதாகவும் தனது முறைப்பாட்டை ஏற்க மறுத்த பொலிஸார், சம்பந்தப்பட்ட காணி இராணுவத்துக்கு உரியது என அரச அதிபரால் தமக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தாங்கள் எதுவும் செய்ய முடியாது எனவும் இதுகுறித்து அரச அதிபருடன் தொடர்பு கொள்ளுமாறும் கூறியதாக தலைவர் வசந்தகுமார் தெரிவித்தார்.

இந்தக் காணி யாழ்.மாவட்ட அபிவிருத்திச் சபையால் 2003 ஆம் ஆண்டு நல்லூர் பிரதேச சபைக்கு வழங்கப்பட்டதாகவும் தலைவர் குறிப்பிட்டார்.

இராணுவத்தினரின் இந்த நடவடிக்கை குறித்துத் தான் அரச அதிபருக்குத் தெரியப்படுத்தியுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பலாலிப் படைத்தலைமையக ஊடகத் தொடர்பாளர் மேஜர் மல்லவராய்ச்சியுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது,

''அது இராணுவத்துக்கு உரிய காணி. பிரதேச சபைக்குச் சொந்தமானது அல்ல. அதனால்தான் இராணுவத்தினர் நேற்று அங்கு சென்றனர். இந்தக் காணி அரச அதிபரால் இராணுவத்துக்கு வழங்கப்பட்டுவிட்டது. ஆகவே இது தொடர்பில் அரச அதிபருடன்தான் தொடர்பு கொள்ள வேண்டும்''- என்றார்.

இதுதொடர்பாக யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது,

''இது பற்றி எனக்கு எதுவும் தெரியாது. காணியை அவ்வாறு வழங்கும் அதிகாரம் எனக்கு இல்லை.'' - என்று கூறினார். (த-7)

## வடமாகாணத்தில்...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

அரசியல் நிலைமை குறித்து கருத்து வெளியிட்டபோதே மேற்கண்டவாறு குறிப்பிட்ட அவர் மேலும் கூறியவை வருமாறு:-

நாட்டில் ஜனநாயகம் சீர்குலைந்துவிட்டது. இதற்காகத் தான் அரசுக்கு எதிரான ஆள்களை ஒன்றுதிரட்ட நடவடிக்கைகளை எடுத்துவருகிறேன். அரசுக்கு எதிரான மேடையொன்றை உருவாக்கி அதில் ஜனநாயகத்தைப்பற்றிப் பேசவைப்பதுதான் இன்றைய தேவை.

இந்த எனது முயற்சிக்குப் பலரும் ஒத்துழைப்பை வழங்க முன்வந்துள்ளனர். தேவைப்படின் இந்த முயற்சி குறித்து நாங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்தவும் தயாராகத்தான் இருக்கிறோம்.

இப்போது பாருங்கள். 'திவிநெகும'விற்கு அங்கீகாரத்தை வடமாகாண ஆளுநரை வழங்கும்படி இந்த அரசு கேட்கின்றது. அதனை அங்கீகரிக்க அவர் யார்? மக்களால் நியமிக்கப்பட்டவரா? ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட அவர் ஜனாதிபதிக்கு விசுவாசமாக செயற்பட்டு, ஜனாதிபதி சொன்னதைச் செய்பவர். இவரால் எந்தவித அங்கீகாரத்தையும் வழங்க முடியாது. அவ்வாறான அங்கீகாரங்கள் ஜனநாயகத்திற்கு எதிரான முயற்சிகளாகவே கருதப்படும். இவற்றை எவரும் அனுமதிக்கக் கூடாது - என்றும் குறிப்பிட்டார் சரத் பொன்சேகா.

## உலக...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு -

அண்மையில் அமெரிக்காவின் நியூயோர்க்கில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகளின் தலைமையகத்தில் நடைபெற்ற 67ஆவது பொதுச் சபை மாநாட்டின்போதே பான் கீ-மூன் மேற்படி தெரிவித்துள்ளார்.

இந்த இளைஞர் மாநாடானது முதல் தடவையாக ஆசிய நாடொன்றில் நடைபெறவுள்ளதென்பது குறிப்பிடத்தக்க ஒரு விடயம். அத்தோடு, 1976ஆம் ஆண்டு காலகட்ட வரலாற்றில் நமது நாட்டில் நடைபெற்ற அணிசேரா மாநாடு மற்றும் பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசிய சங்கத்தின் மாநாடு போன்ற சர்வதேசரீதியான மாநாடுகள் போன்ற ஒரு மாநாடாக இது அமையும்.

அத்துடன் 2014ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள இவ் இளைஞர் மாநாடென்பது இலங்கையில் வாழும் இளைஞர் சமுதாயத்தை ஊக்குவிக்கும் முகமாகவும் அமையும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பான் கீ மூனை உத்தியோகபூர்வமாக சந்தித்த அமைச்சர் டலஸ் அழகப்பெரும, யுத்தத்திற்கும் முன், யுத்தத்திற்கு பின்னான காலகட்டங்களிலும் மற்றும் தற்போதைய காலகட்டங்களிலும் இலங்கையில் வாழும் இளைஞர் சமுதாயம் பெற்றுள்ள அபிவிருத்தியை பற்றி தெளிவுபடுத்தினார்.

அதன் பின் ஐக்கிய நாடுகளின் இளைஞர் திட்டத்தின் சமூக கொள்கை மற்றும் அபிவிருத்தி பிரிவின் பணிப்பாளர் நாயகம் டனியெலா பாஸையும் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தித் துறையில் நமது நாடு பெற்றுள்ள வெற்றிகளையும் மற்றும் எதிர்பார்ப்புகளையும் அந்த எதிர்பார்ப்புகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக எடுக்கப்பட்டிருக்கும் வழிமுறைகளையும் முஸ்லிம் மற்றும் தமிழ் இளைஞர்களின் பங்குபெறுதலையும் இவ்வேலைத்திட்டங்களில் ஈடுபடுவதற்காக அமைக்கப்படும் விதிமுறைகள் பற்றியும் டனியெலா பாஸ் அவர்களுக்கு தெளிவுபடுத்தினார்.

அமைச்சர் டலஸ் அழகப்பெருமவுடன் நடத்தப்பட்ட பேச்சின் பின்னர் தனது கருத்தை வெளியிட்ட டனியல் பாஸ், இளைஞர் நாடாளுமன்றத்தை உருவாக்குவதன் மூலம் இலங்கையில் இளைஞர் சமுதாயத்தை பலப்படுத்துவதற்காகவும் அவர்களை ஊக்குவிப்பதற்காகவும் எடுக்கப்பட்டுள்ள திட்டங்களைப் பாராட்டியதோடு 2014ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெறவுள்ள உலக இளைஞர் மாநாட்டுக்காக தனது முழு ஒத்துழைப்பை வழங்குவதாகவும் தெரிவித்துள்ளார்.

- இப்படி அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கை...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எம்- 47 என்ற இலங்கையர் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் போராளி எனவும், 2009ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் ஆஸ்திரேலியாவுக்குள் பிரவேசித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

2010ஆம் ஆண்டு ஜூன் மாதம் புகலிடம் கோரி விண்ணப்பம் செய்துள்ள அவரினால் நாட்டுக்குப் பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்படக் கூடுமென ஆஸ்திரேலியப் பாதுகாப்புப் புலனாய்வு நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்நிலையில், நேற்று முன்தினம் கூடிய ஆஸ்திரேலிய உயர் நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளது.

(த)

## பயனுள்ளதாக...

தொடர்ச்சி
முன்பக்கத்திலிருந்து...

வியாளர்கள், இராஜதந்திரிகள் மத்தியில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அண்மையில் கிழக்கு மாகாண சபைக்கு நடத்தப்பட்ட தேர்தலில், 27 வீதமான மக்களே அங்கு சிங்களவர்களாக இருந்த போதிலும், அங்கு ஆளும் கட்சி தனிப்பெரும் கட்சியாக வெற்றிபெற்றது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

போருக்குப் பிந்திய அபிவிருத்தி, மீள்குடியமர்வு, கண்ணிவெடிகளை அகற்றும் பணிகள், முன்னாள் போராளிகளுக்கான புனர்வாழ்வு, முன்னைய மோதல் பிரதேசத்தில் படைக்குறைப்பு, அவசரகாலச்சட்ட விதிமுறைகளின் தளர்வு ஆகியன குறித்தும் வெளிவிவகார அமைச்சர் அங்கு விளக்கமளித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரசு நடத்திய பேச்சுக்கள் பயனுள்ளதாக அமைந்ததாகவும், சில பிரச்சினைகளை இனங்காண்பதற்கும், சாத்தியமான தெரிவுகளைத் தேடுவதற்கு உதவியதாகவும் குறிப்பிட்ட அவர், எனினும் தொடர்ந்தும் அந்தப் பேச்சுக்கள் நடத்தப்படாமைக்கான காரணங்கள் எதையும் குறிப்பிடவில்லை.

வடக்கில் மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு முன்னதாக அங்கு சனத்தொகைக் கணக்கெடுப்பு, வாக்காளர் பட்டியல் சீரமைப்புகளை மேற்கொள்ள வேண்டியிருந்தாகவும், அதனால்தான் தேர்தலை அங்கு இன்னமும் நடத்த முடியாதுள்ளதாகவும் தெரிவித்துள்ள பீரிஸ், தற்போது அந்தப் பணிகள் நிறைவுக் கட்டத்தில் உள்ளதாகவும் கூறியுள்ளார்.

(த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மக்களின் எதிர்பார்ப்பை திசைதிருப்பக் கூடாது அரசு

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் முறையில் மாற்றம் கொண்டு வரவேண்டும், அது அவசியம் என்று அரசாங்கத்துக்குத் திடீர் 'ஞானம்' பிறந்திருக்கிறது!

வேட்பாளர் ஒருவருக்குக் கிடைக்கும் வாக்குகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப மட்டுமே - அதிகப்படியான வாக்குகளை அடிப்படையாகக் கொண்டே - மிக நீண்டகாலமாக உள்ளூராட்சி சபைகளுக்கான உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டு வந்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்கு, ஜே.ஆர். ஜெயவர்த்தன (ஜனாதிபதியாகப் பதவி வகித்த) காலத்தில் புதிதாக விகிதாசாரத் தேர்தல் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. அந்த முறையின் ஊடாக ஐக்கிய தேசியக் கட்சி தொடர்ந்து பதவியில் இருக்க முடியும் என்று அவர் கணக்குப் போட்டிருக்கலாம். ஆனால் அந்த அனுமானம் பொய்த்துப் போனமை தெரிந்ததே.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் தெரிவு, கட்சி ஒன்றுக்குக் கிடைக்கும் வாக்குகளின் எண்ணிக்கை, வேட்பாளர் ஒருவருக்குத் தனிப்பட்ட முறையில் கிடைக்கும் விருப்பு வாக்குகளின் எண்ணிக்கை ஆகிய இரண்டையும் கணக்கில் கொண்டே இப்போது நடைபெறுகிறது.

அதனை அடியொற்றி உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களும், விகிதாசாரம் மற்றும் விருப்புவாக்குகள் என்ற கலப்பு முறையிலேயே நடைபெறுகின்றன.

உள்ளூராட்சி சபைகளுக்கான கலப்பு முறைத் தேர்தலில், அரசு மாற்றத்தைக் கொண்டு வருவதற்கு உத்தேசித்துள்ளதாக மூத்த அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தகவல் வெளியிட்டிருக்கிறார்.

அதேவேளை, மாகாண சபைகள் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களில் முன்னர் நடைமுறையில் இருந்த வேட்பாளர் ரீதியான வாக்குகளுக்கு எழுபது சதவீதமும், விகிதாசார முறை வாக்குகளுக்கு முப்பது சதவீதமும் ஒதுக்கப்படும் என்றும் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன மேலேழுந்தவாரியாகக் கூறியுள்ளார். இதற்கான சட்ட மூலம் விரைவில் (அனேகமாக அடுத்தவாரத்தில்) நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படலாம் என்று அவர் கோடி காட்டியுள்ளார்.

உத்தேச புதிய தேர்தல் முறை முன்னையதை விட மக்கள் விருப்பத்தை துலக்கமாக வெளிப்படுத்தும் என்று அரசாங்கம் நம்புவதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன அறிமுகப்படுத்திய விகிதாசாரத் தேர்தல் முறையால், அரச துறை நிர்வாகத்தில் பல சீர்கேடுகளும் குளறுபடிகளும் பின்னடைவுகளும் உள்ளடங்கி இருந்ததாக அவ்வப்போது சுட்டிக்காட்டப்பட்டு வந்தது.

நாடு சுதந்திரமடைந்த கையோடு நடைமுறைப்படுத்தப்பட்ட, தொகுதிவாரித் தேர்தல் முறையே மிகவும் உகந்தது, நல்லது என்று அவ்வப்போது பல தரப்புகளும் கருத்து வெளியிட்டு வந்தமையும் கவனத்தில் கொள்ளத்தக்கதாகும்.

விகிதாசாரத் தேர்தல்முறை அறிமுகப்படுத்தப்பட்டு தசாப்தங்கள் பல தாண்டிவிட்ட போதிலும், வாக்காளர்கள் மிகப் பலருக்கு அது பாடசாலைச் சோதனையாகவே இன்னமும் உள்ளது.

தனது தேர்வுக்குரிய கட்சிக்குப் புள்ளடி போடுவதற்குச் சிரமப்படாத பலரும், தமது தேர்வுக்குரிய வேட்பாளரை சுட்டிப் புள்ளடி போடுவதில் பெரும் கஷ்டப்படுவதோடு தவறுகளை இழைப்பதும் உண்டு. மிகக் குறிப்பாக வயதானவர்களின் வாக்குகள், ஏதோ ஒரு தவறு காரணமாக செல்லுபடியாகாமற் போவது சகஜமாகிவிட்டது.

எதற்கும், நாடாளுமன்றில் அதீத பெரும்பான்மைப் பலம் கொண்டுள்ள இப்போதைய அரசு, தான் நினைத்ததைச் செய்து முடிக்கும் வல்லமை உள்ளது. அதனால், தான் எடுக்கும் தீர்மானத்தைச் செயலாக்குவதில் தடங்கல் ஏதும் இருக்காது எனக் கருதலாம்.

இதற்கிடையில், உள்ளூராட்சி சபைத் தேர்தல் விதிமுறைகளை மாற்றுவது தொடர்பான 'சிந்தனை' அரசாங்கத் தரப்பில் எழுவதற்கு, அரசின் வாழ்வெழுச்சித் (திவிநெகும) திட்டத்திற்கு மாகாண சபைகளின் ஆதரவு பெறப்பட வேண்டும் என்ற உயர் நீதிமன்றத் தீர்ப்பே மூல விசையாக அமைந்தது என்று கருதப்படுகிறது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டுள்ள வாழ்வெழுச்சித் திட்டம், நாட்டின் பொருளாதார அபிவிருத்தி மேம்பாட்டுக்கான வலுவான விரைவுத் திட்டம் என்று கொள்ளப்படுகிறது. கிராம, பிரதேச, பிராந்திய மட்டத்தில் விசேட குழுக்களை அமைத்து, அந்தத் திட்டத்தை ஒருங்கிணைத்துச் செயற்பட ஏற்பாடுகள் செய்யப்படும் என்று அரச தரப்பு அறிவித்துள்ளது.

வாழ்வெழுச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு மாகாண சபைகளின் ஒப்புதல் பெறப்பட வேண்டும் என்ற உயர் நீதிமன்றத் தீர்ப்பால், அத்திட்டம் தடங்கலுற்றுவிடக் கூடாது என்பதில் அரசு மிகுந்த கரிசனையாக உள்ளது.

அதன் வெளிப்பாடுகளில் ஒன்றாக, மக்களைத் திசைதிருப்பும் மார்க்கமாக, தேர்தல் முறைகளில் மாற்றம் குறித்து அரசு பேசுகிறதோ என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் எழுவது இயல்பே. எதற்கும் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்த தகவல், மேடை ஏறுகிறதா என்பதனை மக்கள் உன்னிப்புடன் அவதானிப்பர்; அவதானிக்க வேண்டும்.

எவ்வாறாயினும் இது மக்களைத் திசைதிருப்பும் உத்தியாக இருக்கக் கூடாது.

# வீதி விபத்துக்களைக் கட்டுப்படுத்த பாடசாலை மட்ட விழிப்புணர்வு தேவை

## சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் யாழ்.மாவட்ட ஆணையாளர்



யாழ்ப்பாணம்,ஒக்.6

அதிகரித்துவரும் விபத்துக்களைக் கட்டுப்படுத்துவதற்கும் வீதி விதிமுறைகளை பாடசாலை மட்டத்தில் கற்றுக் கொடுப்பதுடன், உடனடி முதலுதவி தொடர்பான பயிற்சிகளும் வழங்கப்பட வேண்டும் எனத் தெரிவித்தார் சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் யாழ்.மாவட்ட ஆணையாளர் செ.செல்வரஞ்சன்.

வவுனியா, மன்னார் மாவட்டங்களுக்கான வன்னிப் பிராந்திய பொலிஸாரின் ஏற்பாட்டில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், பாடசாலை மாணவர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான முதலுதவிப் பயிற்சி தொடர்பான 3 நாள் செயலமர்வு அண்மையில் வவுனியா நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது.

250 இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்ட இந்தப் பயிற்சி நிகழ்வில் கருத்துரை வழங்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் உரை நிகழ்த்தும் போது தெரிவித்ததாவது:-

தற்போது சகல பிரதேசங்களிலும் விபத்துகள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. இதன் காரணமாக உடனடி மருத்துவத்தைப் பெற முடியாத நிலையில் பலர் அநாவசியமான உயிரிழப்புகளைச் சந்தித்து வருகின்றார்கள்.

எனவே இது தொடர்பில் பாடசாலை மட்டத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

வீதி விதிமுறைகள், விபத்துக்கள் ஏற்பட்டால் எவ்வாறு முதலுதவி செய்ய வேண்டும் என்பன தொடர்பில் பயிற்சிகள் வழங்க வேண்டும்.

இதன் மூலம் உடனடி மருத்துவ உதவிகள் கிடைக்க வாய்ப்புகள் ஏற்படும்- என்றார்.

இந்தப் பயிற்சிப் பட்டறையில் சென்.ஜோண்ஸ் அம்புலன்ஸ் தேசிய தலைமை அலுவலகத்தைச் சேர்ந்த நந்தகுமார, காமினி, விமலசேன, மாவட்ட உதவி ஆணை யாளர் சே.ஈழநேசன் ஆகியோர் முதலுதவி தொடர்பான பயிற்சிகளை வழங்கினர். அத்துடன் வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜயவீரவும் கருத்துரைகளை வழங்கினார். (ம-14)

# தேசிய சிறுவர் நாடகத்தில் பொஸ்கோ 10 விருதுகளுடன் முதலாம் இடத்தில்



2012 ஆம் ஆண்டுக்கான அரச சிறுவர் நாடக விழாவில் யாழ்ப்பாணம் புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம் தேசிய ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. மூன்று நிலைகளில் நடைபெற்ற போட்டிகளில் ஜோண் டி.சில்வா ஞாபகார்த்த கலையரங்கில் நடைபெற்ற இறுதிப் போட்டிகளிலும் பங்கு கொண்டு பொஸ்கோ பத்து விருதுகளுடன் முதலிடத்தையும் தனதாக்கிக் கொண்டது.

இந்த ஆண்டுக்கான சிறந்த சிறுவர் நடிகர் - செ.கேசிகன், சிறந்த துணை நடிகர்- த.ஆதித்தியன், பாராட்டுக்குரிய நடிகர்-ஜெ.செஜோன், சிறந்த அரங்க முகாமைத்துவம்-வண.சகோதரி எம்.ஜீவந்தி, சிறந்த அரங்க அமைப்பு - திருமதி.கிருபாநிதி சந்திரராசா, சிறந்த ஆடை அலங்காரம்- திருமதி கீதா சத்தியபாலன், சிறந்த ஒப்பனை க.சத்தியசீலன் ஆகியோர் தெரிவாகினர்.

சிறந்த இசை, சிறந்த பிரதியாக்கம், இந்த ஆண்டில் மிகச் சிறந்த சிறுவர் நாடகம் ஆகியவற்றுக்கான விருதை யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி நாடகத்துறை விரிவுரையாளர் க.இ.கமலநாதன் பெற்றுக்கொண்டார்.

இவ்விழா கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சர் ஏக்கநாயக்க தலைமையில் கடந்த 2 ஆம் திகதி கொழும்பு ஜோண் டி.சில்வா ஞாபகார்த்த கலையரங்கில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (த-17)

# நிர்க்கதி நிலையிலுள்ள மக்களுக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்துங்கள்

அம்பாறை,ஒக்.6

செட்டிகுளம் நலன்புரி முகாமிலிருந்து வெளியேற்றப்பட்டு நிர்க்கதி நிலைக்கு ஆளாக்கப்பட்டுள்ள கேப்பாபிலவு, மந்துவில் கிராமங்களைச் சேர்ந்த மக்களுக்கு அரசு உடன் அடிப்படை வசதிகளை ஏற்படுத்த வேண்டும். அத்துடன் அவர்களது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அகில இலங்கை மக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைவர் எஸ்.லோகநாதன் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நலன்புரி முகாம்கள் அனைத்தும் வடக்கில் மூடப்பட்டு மக்கள் மீள் குடியமர்த்தப்பட்டு விட்டனரென உலகை நம்பவைக்கும் போர்வையில் இன்று கேப்பாபிலவு, மந்துவில் கிராம மக்கள் நிர்க்கதியான அவல நிலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். இந்த மக்கள் எவ்வித அடிப்படை வசதிகளுமின்றி நிர்க்கதிக்குள்ளாக்கப்பட்டுள்ளமை மனிதாபிமானமற்ற செயலாகும்.

அத்துடன் இந்த மக்களை அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்த மறுத்து வேறு இடங்களில் மீளக்குடியமர்த்த எடுக்கப்படும் நடவடிக்கைகள் ஏற்றுக்கொள்ளத்தக்கவை அல்ல.

சொந்த மண்ணிலும் மீள்குடியேற்றமில்லை. அடிப்படை வசதிகளுமில்லை, அவல வாழ்க்கைதான் இந்த மக்களுக்குத் தொடர்கதை என்றால் மனிதாபிமானம் கொண்டவர்களால் அதனை ஜீரணிக்க முடியாது.

வாழ்க்கையில்நொந்து, வெந்து வெதும்பி வாழும் இந்த மக்களின் இன்றைய அவல நிலைக்கு துரித விடிவு காணப்பட வேண்டும்.

மக்களைப் பாதுகாக்க வேண்டிய, பொறுப்புக்கூறவேண்டிய அரசே மக்களை அதுவும் அகதிகளை மாட்டு மந்தைகளைப்போல் காட்டில் கொண்டுவந்து இறக்கி விடுவது என்பது கண்டிக்கத்தக்க விடயமாகும்- என்றுள்ளது. (ம-30)

## ஆசிரியர்களுக்கு வாழ்த்துமடல்

உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு மக்கள் வங்கியின் யாழ். மாவட்டக் கிளையினர் தத்தமது பிரிவில் உள்ள பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கு ஆசிரியர் தின வாழ்த்து மடல்களை நேற்று விநியோகித்தனர்.

தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள 54 பாடசாலைகளுக்கும் நேற்று வாழ்த்து மடல்கள் சாவகச்சேரி மக்கள் வங்கியினரால் வழங்கப்பட்டன என்று கிளை முகாமையாளர் க.சண்முகலிங்கம் தெரிவித்தார். (ம-9)

## விஜயதசமியன்று இசை வகுப்புகள்

தென்மராட்சி கலை மன்றத்தினர் எதிர்வரும் விஜயதசமி தினத்தன்று இசை வகுப்புகளை ஆரம்பிக்கவுள்ளனர். மிருதங்கம், ஓகன், நடனம் போன்ற வகுப்புகள் ஆரம்பிக்கவுள்ளதால் பயில விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளுமாறு மன்றத் தலைவர் க.மோகன் ராஜலிங்கம் கோரியுள்ளார். (ம-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவ சோதனை நடவடிக்கை பூநகரியில் மீண்டும் ஆரம்பம்

பூநகரி, ஒக்.6

பூநகரி இராணுவத்தினர் மீண்டும் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கேரதீவு - சங்குப்பிட்டிப் பாலம் கடந்து பூநகரியின் கிராமங்கள் ஆரம்பமாகும் பகுதியில் செல்லும் வாகனங்கள் யாவும் 10 நிமிடங்கள் வரை சோதனை செய்யப்படுகின்றன. இதன் காரணமாகப் போக்குவரத்தில் ஈடுபடும் அரச ஊழியர்கள், பொதுமக்கள் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

**யாழ்ப்பாணத்தின் நுழைவாயிலான ஆனையிறவில் கூட சோதனைகள், பதிவுகள் என்பன நிறுத்தப்பட்டுள்ள நிலையில் பூநகரியில் மட்டும் இராணுவத்தின் சோதனைகள் இடம்பெறுவது குறித்து மக்கள் குழம்பிப்போய் உள்ளனர்.**

யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சியின் மேற்குப் பகுதிக்குப் பணிக்கு வரும் ஆசிரியர்கள் உட்பட சகல அரச ஊழியர்களும் மக்களும் சோதனை இடப்படுகின்றனர்.

யாழ்ப்பாணத்தின் நுழைவாயிலான ஆனையிறவில் கூட சோதனைகள், பதிவுகள் என்பன நிறுத்தப்பட்டுள்ள நிலையில் பூநகரியில் மட்டும் இராணுவத்தின் சோதனைகள் இடம்பெறுவது குறித்து மக்கள் குழம்பியுள்ளதைக் காணமுடிகின்றது.

பூநகரியின் மரங்களும், கௌதாரிமுனையின் மணலும் களவாக யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்படுவதை இந்தச் சோதனை நடவடிக்கைகள் தடுப்பதாகத் தெரியவில்லையெனவும் இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (க-18)

## அக்கராயன் ம.வியின் அபிவிருத்திக்கு முயற்சி

அக்கராயன், ஒக்.6

கிளிநொச்சி அக்கராயன் மகாவித்தியாலயத்துக்கு புதிய கட்டடங்களை அமைக்கும் முயற்சியில் வலயக் கல்விப் பணிமனை ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1970 ஆம் ஆண்டுகளில் அமைக்கப்பட்ட பாடசாலையின் சில கட்டடங்கள் தற்போது இடிந்து விழும் நிலையில் காணப்படுகின்றன. இங்குள்ள பிரதான கட்டடம் எறிகணை வீச்சுகளால் பலத்த சேதங்களை எதிர்கொண்டது. இந்தக் கட்டடம் எந்த வேளையிலும் இடிந்து விழும் நிலையில் காணப்படுகின்றது. இதனால் சில வகுப்புக்களைச் சேர்ந்த மாணவர்கள் மரநிழலுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

தற்போதைய பாடசாலையின் நிலையைக் கருத்தில் கொண்டு புதிய கட்டடங்களை அமைக்கும் முயற்சிகளை வலயக் கல்விப் பணிமனை மேற்கொண்டு வருகின்றது.

அக்கராயன் மகாவித்தியாலயம் தற்போது 750இக்கும் மேற்பட்ட மாணவர்களை கொண்டுள்ளது. மேலும் வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான்குளம், ஆரோக்கியபுரம், ஸ்கந்தபுரம், முக்கொம்பன், கண்ணகைபுரம், கோணாவில் யூனியன்குளம், அமதிபுரம், அம்பலப்பெருமாள் குளம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மாணவர்கள் நம்பியுள்ள ஒரேயொரு உயர்தர வகுப்புகளைக் கொண்ட பாடசாலை இது என்பது குறிப்பிடத்தக்கது. (க-18)

## இந்திய வீட்டுப் பணிகள் ஐயன்கன்குளத்தில் ஆரம்பம்

அக்கராயன், ஒக்.6

அக்கராயன் ஐயன்கன்குளம் கிராமத்தில் இந்தியன் வீடுகளை அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று துணுக்காய்ப் பிரதேச செயலர் சி.குணபாலன் தெரிவித்துள்ளார்.

ஐயன்கன்குளம் கிராமத்தில் 181 குடும்பங்கள் இந்தியன் வீட்டுத்திட்டத்தில் உள்வாங்கப்பட்டிருக்கின்றன என்றும் இதில் 66 வீடுகளின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார்.

ஆரோக்கியபுரம் கிராமத்தில் 24 வீடுகள் யு.என் கபிராற்றின் தெரிவுக்குட்பட்டுள்ளதாகவும் ஏனைய வீடுகள் இந்தியன் வீட்டுத் திட்டத்துக்குள் உள்வாங்கப்பட்டு அமைக்கப்படும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (க-18)

## இது தான் எங்களின்... வசந்தம் பாரீர்....!



துணுக்காய் தென்னியங்குளம் கிராமத்தில் அடிப்படை வசதிகள் எதுவுமே அற்ற நிலையில் மீள்குடியமர்ந்த மக்கள் வசிக்கும் குடிசை ஒன்றின் அவல நிலை. (க-18)

## மீண்டும் பதவியில் அமர்ந்தார் கரைச்சிப் பிரதேச சபை செயலர்

கிளிநொச்சி, ஒக்.6

திடீர் இடமாற்றம் வழங்கப்பட்ட கரைச்சிப் பிரதேச சபைச் செயலாளர் கு.தவசோதி மீண்டும் அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த முதலாம் திகதி தொலைபேசியூடாகவும், இரண்டாம் திகதி எழுத்து மூலமாகவும் அப்போதைய கரைச்சிப் பிரதேச சபையின் செயலாளராக இருந்த கு.தவசோதிக்கு யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்துக்குச் செல்லுமாறு திடீர் இடமாற்ற உத்தரவு வழங்கப்பட்டது.

இந்த நிலையில் நேற்றைய தினம் இந்த இடமாற்ற உத்தரவு ரத்துச் செய்யப்பட்டு அவர் மீண்டும் கரைச்சிப் பிரதேச சபையின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி கிளிநொச்சி வருகை தந்ததன் பின்னணியில் இவருக்கான திடீர் இடமாற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகவும் அப்போது தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

நேற்றைய தினம் இது தொடர்பாக வெளிவந்த பத்திரிகைச் செய்தியில் கரைச்சிப் பிரதேச சபைச் செயலாளர் என்பதற்குப் பதிலாக கரைச்சிப் பிரதேச செயலர் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது தவறானதாகும் (க-6)

## ரயில் பாதை அமைக்கப்பட்டதும் பெருமளவு ஊழியர்கள் பணியில்

ஓமந்தையில் இருந்து காங்கேசன்துறை வரையிலான ரயில் பாதை அமைக்கும் பணிகள் நிறைவு பெற்றதும் பெருமளவு ரயில்வே ஊழியர்கள் பணியில் அமர்த்தப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஓமந்தையில் இருந்து பளை ஊடாக காங்கேசன்துறை வரையிலான ரயில் பாதையை அமைக்கும் வேலைகளில் இந்தியாவைச் சேர்ந்த "இர்கோன்" நிறுவனத்தினர் ஈடுபட்டு வருகின்றனர். போர் முடிவடைந்து மூன்று ஆண்டுகள் கடந்த நிலையில் வவுனியாவில் இருந்து ஓமந்தை வரை அமைக்கப்பட்ட ரயில் பாதை மாங்குளம் வரையும் பின்னர் கிளிநொச்சி, பளை, எனப் படிப்படியாக காங்கேசன்துறை வரை இரண்டரை வருடத்திற்குள் முழுமையாக அமைத்துக் கொடுப்பதில் இந்த நிறுவனம் ஈடுபட்டுள்ளது. ஏற்கனவே இருந்த ரயில்வே பாதைகளிலிருந்த மரங்கள் அகற்றப்பட்டு மண் போடப்பட்டு வருகிறது. இந்த மண் அமைக்கும் இடத்திற்கு அருகில் சல்லிகளும், இரும்புக் கேடர்களும் போடப்பட்டு வருகின்றன. இதற்காகப் பெருமளவு பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர்.

ரயில் பாதை அமைக்கப்படுவதற்கு உதவியாக தண்டவாளங்களுக்கு குறுக்கே அமைந்துள்ள கட்டடங்கள் அகற்றப்படுகின்றன. இக் கட்டடங்களுக்குள் பொது மக்களின் வீடுகள், கடைகள், இராணுவத்தினரின் காவலரண்களும் அடங்குகின்றன. (க-402)

## நீண்ட தூரம் அலையும் மக்கள்

கிளிநொச்சி,ஒக்.6

கிளிநொச்சி கல்மடு நகர்ப் பிரதேச மக்கள் போக்குவரத்து வசதிகளைப் பெறுவதற்குச் சுமார் எட்டு கிலோமீற்றர் தூரத்துக்கு அலைய வேண்டிய நிலையில் உள்ளனர் என்று இங்குள்ள பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்துக்கு உட்பட்ட கல்மடுநகர் கிராமத்துக்குப் போக்குவரத்து வசதிகள் எதுவும் இதுவரை செய்து கொடுக்கப்படவில்லை.

குறிப்பாக இந்தப் பகுதி மக்கள் தமக்கான மருத்துவத் தேவையையோ அல்லது பிரதேச செயலகத் தேவைகள், கல்வித் தேவைகள் மற்றும் ஏனைய அடிப்படைத் தேவைகளையோ நிறைவு செய்து கொள்வதாயின் சுமார் எட்டு கிலோமீற்றர் தொலைவில் உள்ள தருமபுரம் அல்லது ஏனைய இடங்களுக்குச் செல்ல வேண்டிய நிலையில் தற்போதுள்ளனர். இந்தப் பகுதி மக்கள் தாம் தினமும் சிரமப்பட்டு வருவதாகவும் தமக்கான போக்குவரத்து வசதியை ஏற்படுத்தித் தருமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-6)

## சிறுவர் பூங்கா திறந்து வைப்பு

கிளிநொச்சி தருமபுரம் இல 1 அ.த.க. பாடசாலையில் சிறுவர் பூங்கா ஒன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமாரின் தந்தையார் முருகேசு இதனைத் திறந்து வைத்தார். இந்தப் பாடசாலை 5 ஆயிரம் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்டதால் இதன் ஒரு அங்கமாக இந்தச் சிறுவர் பூங்கா திறந்து வைக்கப்பட்டுள்ளது. (க-405)

## டெங்கு நோயை ஒழித்துக்கட்ட அனைவரும் ஒன்றிணைவோம்

### கிளிநொச்சி மேலதிக அரச அதிபர் வேண்டுகோள்

அக்கராயன், ஒக்.6

தேசிய நோயாக உருவெடுத்துள்ள டெங்கு நோயை இல்லாதொழிக்க அனைவரும் இணைந்து செயற்படுவோம் என கிளிநொச்சி மேலதிக அரச அதிபர் செ.ஸ்ரீநிவாஸன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி அரச செயலகத்தில் இடம்பெற்ற டெங்கு ஒழிப்புத் தொடர்பான கலந்துரையாடலின் போது தலைமையுரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மாவட்டச் சுற்றாடல் அதிகாரசபை அதிகாரியினாலும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஏற்பாட்டாலும் இக்கலந்துரையாடல் இடம்பெற்றது.

கிளிநொச்சி டெங்கு ஒழிப்பு வைத்திய அதிகாரி இங்கு கருத்துத் தெரிவிக்கையில்; இந்த மாவட்டத்தில் மலேரியா நோயும், டெங்கு நோயின் தாக்கம் காணப்படுகின்றது. 2009 ஆம் ஆண்டிலிருந்து 2012 ஆம் ஆண்டின் செப்ரெம்பர் மாதம் வரை மலேரியாத் தாக்கம் காணப்பட்டது. 107 மலேரியா நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். 2011 ஆம் ஆண்டில் மலேரியாத் தடை நடவடிக்கைகள் சீராக்கப்பட்டமையினால் 30 பேர் வரை குறைந்துள்ளது. இந்த ஆண்டில் 75இக்கும் மேற்பட்டவர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். இதில் 50 பொது மக்களும், 25 இராணுவத்தினரும் அடங்குவர்.

பொது சுகாதாரப் பரிசோதகர்களினால் மலேரியாத் தடை தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எமது பாவனையிலிருந்து கைவிடப்பட்ட சிறிய பொருள்களினால் (பிளாஸ்ரிக் வாளிகள், சிரட்டைகள், போத்தல்கள்) டெங்கு நோயும், பெரிய பொருள்களினால் (ரயர், பூச்சாடிகள்) மலேரியா நோயும் உருவாகுவதற்கான வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்படுவதாகவும் தெரியவருகின்றது.

எமது சூழலைச் சுத்தமாக வைத்திருப்பதனால் இந்நோய்களிலிருந்து நாம் விடுபடலாம். இந்த நோய்க்கான கிருமிகள் உள்ள இடங்கள் சம்பந்தமாக எமக்கு அறிவிக்கப்பட்டால் உரிய தடை மருந்து உரிய இடத்தில் விசிறப்படும். மலேரியா நுளம்பு 2 கிலோமீற்றர் தூரம் வரை பறந்து செல்லும், டெங்கு நுளம்பு 500 மீற்றர்வரை பறந்து செல்லும் தன்மையுடையது. தண்ணீர் இல்லாத காலங்களிலும் உயிர் வாழும் இக்குடம்பிகள் மழைகாலம் ஆரம்பித்தவுடன் நுளம்பாக மாறுகின்றன. இதனால் டெங்கு நோய் தொற்று ஏற்பட வாய்ப்புண்டு. உரிய இடங்களைச் சரியாக இனங்கண்டு அழிப்பு நடவடிக்கைகள் உரியவாறு மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதி அகலிப்புக்காக வழங்கப்பட்ட வாக்குறுதிகள் மீறப்பட்டுள்ளன

## மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஒக்.6

வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் வீதி அகலிப்பு நடவடிக்கையின்போது, வழங்கப்பட்ட வாக்குறுதிகளை மீறிச் செயற்பட்டுள்ளனர்.

இதனால் தான் பாதிப்படைந்துள்ளதாகவும் அதற்கான நட்டஈட்டைப் பெற்றுத்தருமாறும் கோரி இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.பிராந்தியக் கிளையில் ஆனைப்பந்தியைச் சேர்ந்த ஒருவர் முறையிட்டுள்ளார்.

வீதி அகலிப்பு நடவடிக்கை தொடர்பில் முன்னாயத்தக் கூட்டம் கடந்த வருடம் நல்லூர் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. இதன்போது பிரதேச செயலாளர், வீதி அபிருத்தி அதிகார சபையின் பொறியியலாளர் மற்றும் கிராம சேவையாளர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது வீட்டின் மதில் இடிக்கப்பட்டால் அதே போன்று மீளவும் கட்டித் தரப்படும் என்றும், மேலும் காணியில் 3 அடி தூரம் மாத்திரமே வீதி அகலிப்புக்காகச் சுவீகரிக்கப்படும் என்றும் தெரிவித்திருந்தனர்.

ஆனால், தற்போது வர்ணப் பூச்சு பூசப்பட்டிருந்த எனது மதில் இடித்தழிக்கப்பட்டு பூச்சுப்பூசப்படாத தரமற்ற மதிலே அமைத் துத் தரப்பட்டுள்ளது. அத்து டன் காணியில் 7 அடி தூரம் சுவீகரிக்கப்பட்டுள்ளது.

இதனால் பாதிப்படைந்துள்ள எனக்கு மனித உரிமை ஆணைக்குழு நட்டஈட்டைப் பெற்றுத் தர வேண்டும் என்று குறித்த முறைப்பாட்டாளர் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவிக்கையில்:-

இதுவரையில் வீதி அபிவிருத்தி அதிகாரசபை தொடர்பில் 4 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இவற்றுடன் சேர்த்து இந்த முறைப்பாட்டின் பிரகாரம் உடனடியாக விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளன- என்று தெரிவித்தார்.

(ம-5)

# கெற்பேலியில் நடப்பட்ட மின் கம்பங்கள் அகற்றல்

தென்மராட்சி, ஒக்.6

தென்மராட்சி கிழக்கு கெற்பேலி பகுதியில் நடப்பட்டிருந்த ஐந்து மின்கம்பங்கள் திடீரென அகற்றப்பட்டுள்ளன. இதனால் மின்சாரத்தை எதிர்பார்த்துக் காத்திருந்த மக்கள் ஏமாற்றமடைந்துள்ளனர்.

இந்தப் பகுதிக்கு வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் மின்கம்பங்கள் நடப்பட்டு வயர்களும் பொருத்தப்பட்டன.

இந்த ஒழுங்கையில் வசித்த குடும்பங்கள் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் விண்ணப்பங்கள் பெற்று விண்ணப்பித்திருந்தனர்.

அண்மையில் அங்கு வந்த மின்சார சபையினர் ஒழுங்கையில் நடப்பட்டிருந்த மின்கம்பங்களை அகற்றி எடுத்துச் சென்றுள்ளனர்.

இதனால் மின்சாரத்தை எதிர்பார்த்துக் காத்திருந்த குடும்பங்கள் ஏமாற்றமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. இந்த விடயம் தொடர்பாக இலங்கை மின்சார சபையின் சாவகச்சேரிக் கிளையுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது;

இந்தப் பகுதியில் வடக்கின் வசந்தம் திட்டத்தின்கீழ் அனைத்து வீதிகளுக்கும் மின் விநியோகத்துக்கான கம்பங்கள் நடப்பட்டு வயர்களும் பொருத்தப்பட்டன. குறித்த ஒழுங்கையில் உள்ள குடியிருப்பாளர் ஒருவர் ஒழுங்கைக்கு மின்சாரம் வழங்க வேண்டாம் என்று அடம்பிடித்தபோதிலும் அவரைச் சமாதானப்படுத்தி ஏனைய குடியிருப்பாளர்களுக்கு மின் விநியோகம் வழங்கும் நோக்குடன் செயற்படுமாறு அறிவுரை கூறியபோதிலும் அவர் விடாப்பிடியாக நின்று சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினருக்கும் ஒழுங்கைக்கு மின்சாரம் விநியோகிக்க வேண்டாம். மின்கம்பங்களை அகற்று மாறு கடிதங்கள் அனுப்பியுள்ளார். இதனையடுத்து வடக்கின் வசந்தம் திட்டப் பிரிவினரால் அவை அகற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மின்சாரம் பெற மக்கள் அலைகின்றபோதிலும் கிடைக்கும் மின்சாரத்தை வேண்டாமெனத் தடுக்கும் விசித்திர நபர் குறித்து அதிகாரிகள் வியப்புத் தெரிவித்தனர்.

(ம-9)

# அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு

வலி வடக்கு, ஒக். 6

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவின் பன்முகப்படுத்திய நிதி ஒதுக்கீட்டின் கீழ் பருத்தித்துறை அல்வாய் கிழக்கு பாரதி சனசமூக நிலையத்துக்கு மலசல கூடம் அமைப்பதற்கு 50 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

சனசமூக நிலையத்தில் இயங்கும் முன்பள்ளிச் சிறார்களின் பயன்பாட்டுக்கான மலசல கூடம் அமைப்பதற்கு நிதி உதவி செய்யுமாறு சனசமூக நிலையத்தினர் விடுத்த கோரிக்கையை அடுத்து இந்த நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

தற்போது குறிப்பிட்ட முன்பள்ளியில் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட சிறார்கள் கல்வி கற்று வருகின்றனர். இந்த நிலையில் போதிய எவு மலசல கூடம் இன்மையால் பாதிக்கப்படுவதாகவும் தற்போது கிடைக்கப் பெறும் நிதி உதவி மூலம் சிறார்கள் கூடிய பயனைப் பெற முடியும் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

(ம-86)

# செம்பிறைச் சங்க நிதியில் காரைநகரில் 75 வீடுகள்

## இலங்கை செஞ்சிலுவைச் சங்க தேசிய தலைவர் பார்வையிட்டார்

யாழ்ப்பாணம்,ஒக.6

யாழ். செஞ்சிலுவைச் சங்கம், செம்பிறைச் சங்க அனுசரணையுடன் காரைநகரில் 75 வீடுகளை அமைக்கவுள்ளது.

சயம்பு வீதியில் 22 வீடுகளும் தோப்புக்காட்டில் 53 வீடுகளுமாக மொத்த 75 வீடுகள் அமைக்கப்படவுள்ளன. வறுமைக்கோட்டின் கீழ் உள்ள மீளக்குடியமர்ந்த மக்களுக்கு தலா ஐந்து லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. இந்த வீடுகளின் கட்டடப்பணிகள் இரண்டு மாதங்களில் பூர்த்தியாகிவிடும் என்று கூறப்பட்டது.



பருத்தித்துறையில் ஒன்பது கிராம அலுவலர் பிரிவுகளில் பொதுமக்களின் வசதி கருதி வீடுகளில் 136 மலசல கூடங்கள் 12 மில்லியன் ரூபா செலவிலும் 14 பாடசாலைகளுக்கு 9 மில்லியன் ரூபா செலவில் மல சலகூடங்களும் யாழ்.செஞ்சிலுவைச் சங்கம் அமைத்து வருகின்றது.

இந்த இரண்டு இடங்களிலும் இடம்பெற்றுவரும் கட்டடவேலைகளை இலங்கை செஞ்சிலுவைச் சங்கத் தேசியத் தலைவர் ஜகத் அபயசிங்க, பணிப்பாளர் நாயகம் திஸ்ஸ அபயவிக்கிரம, செஞ்சிலுவை மற்றும் செம்பிறைச் சங்கங்களுக்கான இலங்கை வதிவிடப் பிரதிநிதி பொப் மாற்றும் யாழ். செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் பார்வையிட்டுள்ளனர்.

(ம-7)

# இந்து மகளிர் கல்லூரியின் அதிபர் நியமனம் திடீர் ரத்து

## அது தேசிய பாடசாலையும் இல்லை

யாழ்ப்பாணம்,ஒக.5

யாழ். இந்து மகளிர் கல்லூரியின் அதிபராக திருமதி வேதநாயகி பேரின்பநாதன் நியமிக்கப்பட்டமை தவறுதலான ஒன்று என்று கல்வி அமைச்சு திடீரென அறிவித்துள்ளது. அத்துடன் அதன்அடிப்படையில் கல்லூரி தேசிய பாடசாலையாகத் தரம் உயர்த்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டமையும் தவறு என்று கூறப்படுகின்றது.

இலங்கை கல்வி நிர்வாக சேவையில் சித்தியடைந்தவர்களுக்கான நியமனக் கடிதம் வழங்கும் நிகழ்வு கடந்த 2 ஆம் திகதி நடைபெற்றது. இதன் போது யாழ். இந்து மகளிர் கல்லூரியில் அதிபராக நியமிக்கப்படுவதாக தெரிவித்து திருமதி வேதநாயகிக்கு கடிதம் வழங்கப்பட்டது.

கடந்த புதன்கிழமை வழங்கப்பட்ட அந்தக் கடிதத்துக்கு அமைவாக மறுநாள் வியாழக்கிழமை திருமதி வேதநாயகி பேரின்பநாதன், யாழ். இந்து மகளிர் கல்லூரிக்குச் சென்று அதிபராகத் தனது பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டார். இந்த நிலையில் வியாழக்கிழமை மதியமே கல்வி அமைச்சிலிருந்து அவருக்கு மீண்டும்ஒரு கடிதம் வழங்கப்பட்டது. புதன் கிழமை வழங்கப்பட்ட நியமனம் ரத்துச் செய்யப்படுகின்றது என்றும் மாகாண கல்விப்பணிப்பாளருடன்தொடர்பு கொண்டு பணியிடத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு அந்தக் கடிதத்தில் திருமதி வேதநாயகிக்குத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த விடயம் தொடர்பாக வடமாகாண கல்விப் பணிப்பாளர் எஸ். செல்வராஜாவிடம் கேட்டபோது" கல்வி அமைச்சிலிருந்து நேற்று முன்தினம் தவறான கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. யாழ். இந்து மகளிர் கல்லூரி தேசியப்பாடசாலை என்றுநினைத்து தவறாக கடிதம் அனுப்பியுள்ளனர்"-என்றார்.

இதேவேளை தகைமை சார் அதிகாரி ஒருவரை இவ்வாறு மன உளைச்சலுக்கு உள்ளாக்கும் விதத்தில் நடந்து கொண்ட கல்வி அமைச்சுக்கு எதிராக திருமதி வேதநாயகி உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்து நிவாரணம் பெற்றுக் கொள்ளலாம் என்று சட்ட நிபுணர்கள் உதயனிடம் தெரிவித்தனர்.

(உ-5)

# உதயதாரகைக்கு 'உயிரூட்ட' அடுத்த வாரம் வருகிறது இயந்திரம்

யாழ்ப்பாணம், ஒக்.6

நெடுந்தீவு பலநோ.கூ.சங்கத்தின் உதயதாரகை படகுக்கான இயந்திரம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பொருத்தப்படவுள்ளது. கடந்த நான்கு வருடங்களுக்கு முன் யாழ். செயலகத்தால் 70 லட்சம் ரூபா வரையான நிதியில் பலநோ. கூ.சங்கத்துக்கு வழங்கப்பட்ட இந்தப் படகு பொருள்களுடன் வந்த சமயம் நெடுந்தீவு துறைமுகத்தில் சேதத்துக்குள்ளானது.

இந்தப் படகைக் கட்டிய நீர்கொழும்பு நிறுவனம் படகு பழுதடைந்ததை அடுத்து நெடுந்தீவுக்கு வந்து அதனைப் பார்வையிட்டு புதிய இயந்திரம் பொருத்தித் தருவதாகக் கூறிச் சென்றது. சுமார் இரண்டு வருடங்களின் பின் தற்போது அதற்கான புதிய இயந்திரத்தை நாளை மறுதினம் திங்கட்கிழமை குறிகாட்டுவானுக்கு எடுத்து வரவுள்ளது.

இயந்திரம் வந்து சேர்ந்ததும் உடனடியாகவே அது பொருத்தப்படும் என்று சங்க வட்டாரங்கள்தெரிவித்தன.

இந்தப் படகு பயணிகளை ஏற்றிச் செல்லக்கூடியதாக இல்லை எனவும் பொருள்களை எடுத்துச் செல்ல மட்டுமே பயன்படும் என்றும் குறிப்பிடத்தக்கது.

(ம-7)

# ஓட்டோக்களுக்கு இனி கட்டண மீற்றர் சாரதிகள் சீருடை அணிவது கட்டாயம்

யாழ்ப்பாணம்.ஒக்.06

யாழ். குடாநாட்டில் வாடகைச் சேவையில் ஈடுபடும் சகல ஓட்டோக்களுக்கும் கட்டண அறவீட்டு மீற்றர் பொருத்துதல் மற்றும் சாரதிகள் சீருடை அணிதல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக வாடகைச் சேவையில் ஈடுபடும் சகல ஓட்டோ உரிமையாளர்களும் தமது பகுதி கிளைச் சங்கத்துடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு யாழ்.மாவட்ட ஓட்டோ உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

பேர்ச் நிறுவனத்துடன் கைச்சாத்திடப்பட்டுள்ள ஒப்பந்தத்தின் அடிப்படையில் இன்று சனிக்கிழமை தலைமைச்சங்க உறுப்பினர்கள் மற்றும் கிளைச் சங்க உறுப்பினர்கள் ஓட்டோ மீற்றர் பொருத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

கடந்த மாதம் 12 ஆம் திகதி இடம்பெற்ற ஓட்டோ உரிமையாளர்களுக்கான கலந்துரையாடலில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதால் ஓட்டோ உரிமையாளர்கள் ரொக்கப் பணம் மற்றும் இலகு கடன் அடிப்படையிலும் மீற்றர் பொருத்த முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஓட்டோக்களுக்கு மீற்றர் பொருத்தப்பட்ட பின்னர் தீவகம் தவிர்ந்த ஏனைய இடங்களில் சேவையில் ஈடுபடும் ஓட்டோக்கள் ஆரம்பிக்கும் முதலாவது ஒரு கிலோ மீற்றருக்கு 70 ரூபாவும் அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு கிலோ மீற்றருக்கும் 40 ரூபாவும் கட்டணமாக அறவிட வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(ம-18)

# கொல்களத்துக்கு மாடுகளை வழங்குவோர் அனுமதிப்பத்திரப் பிரதியும் வழங்கவேண்டும்

## மாநகர சபைக் கூட்டத்தில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.5

கொல்களத்துக்கு மாடுகளைக் கொண்டுவந்து வழங்குவோர் அதற்கான அனுமதிப்பத்திரத்தின் பிரதி ஒன்றையும் கொல்களத்தில் வழங்க வேண்டும்.

இறைச்சிக்கடை உரிமையாளர்கள் மற்றும் மாடுகள் வழங்குவோரிடையே யாழ். மாநகர சுகாதாரப் பரிசோதகர்கள் நேற்று நடத்திய கலந்துரையாடலின்போதே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.

[illegible]வெளி குடும்ப நல சுகாதார வைத்தியசாலையில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்குக்குத் தலைமை வகித்த யாழ்.மாநகர பிரதம பொது சுகாதாரப் பரிசோதகர் கே.ஜீவநாதன் இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டினார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மாடுகள் கொண்டு வருவதற்கான அனுமதி பூரணப்படுத்தப்பட்டு கிராம அலுவலர், பிரதேச செயலர்களின் ஒப்பமிடப்பட்டதாக இருக்க வேண்டும்.

மிருக வைத்தியரினால் பரிந்துரை செய்யப்பட்ட 12 வயதுக்கு உட்பட்ட மாடுகளும் பால்எடுக்க முடியாத பசு மாடுகளும் இறைச்சிக்கு உகந்தவை. மிருக வைத்தியர் பரிந்துரை செய்யும் பட்சத்தில் பசு மாடுகளையும் இறைச்சிக்காக வெட்ட சட்டத்தில் இடமுண்டு என்று அவர் மேலும் தெரிவித்தார்.

(ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருப்புச்சட்டைப் போராட்டம் தொடக்கி வைத்தார் கருணாநிதி



அ.தி.மு.க. அரசின் அட்டூழியத்தை எதிர்த்து தி.மு.க. சார்பில் கருப்புச்சட்டை அணிந்து துண்டுப் பிரசுரம் செய்யும் போராட்டம் நேற்று தொடங்கியது. திமுக செயற்குழுக் கூட்டத்தில் தமிழ்நாட்டில் நிலவும் கடும் மின்வெட்டு, விலையுயர்வு மற்றும் திமுக வினர்கள் மீது நடத்தப்படும் கைது நடவடிக்கைகளைக் கண்டித்து மனிதச் சங்கிலிப் போராட்டம் நடக்கும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

இந்த நிலையில் தி.மு.க தலைவர் கருணாநிதி சென்னை ஆயிரம் விளக்கு தொகுதியில் துண்டுப் பிரசுரங்கள் வழங்கி போராட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

நடிகை குஷ்பு, மு.க.ஸ்டாலின், கருணா நிதி மனைவி தயாளு அம்மாள் உட்பட பலர் போராட்டத்தில் கலந்து கொண்டுள்ளனர்.

நேற்று முன்தினம் பேட்டியளித்த கருணாநிதி, பொலிஸ் அனுமதி கிடைக்காமல் போனால் கருப்புசட்டை அணிந்து துண்டு பிரசுரம் வழங்கிப் போராட்டம் நடக்கும் என அறிவித்தார். மேலும் தமிழகத்தின் இழிவு நீங்கும் வரை கருப்புச் சட்டையைக் கழற்ற மாட்டேன் என்றும் கடைசி வரை கருப்புச்சட்டையுடனேயே இருப்பேன் என்று கருணாநிதி தெரிவித்தார். (3)

# வைகோவுக்கு கடவுச் சீட்டு வழங்க நீதிமன்றம் உத்தரவு

## லண்டன் செல்வதற்கு வசதியாக

லண்டன் செல்ல ம.தி.மு.க பொதுச் செயலர் வைகோவுக்கு அவருடைய கடவுச்சீட்டை வழங்க சென்னை செஷன்ஸ் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2003ம் ஆண்டு பொடா சட்டத்தின்கீழ் வைகோ கைதுசெய்யப்பட்டார். அப்போது சென்னை செஷன்ஸ் நீதிமன்றம் அவருக்கு நிபந்தனையின் அடிப்படையில் பிணை வழங்கியது.

கடவுச்சீட்டை பொடா நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும் என நிபந்தனை விதிக்கப்பட்டிருந்ததன்படி தனது கடவுச்சீட்டை நீதிமன்றத்தில் வைகோ ஒப்படைத்தார். பின்னர் நீதிமன்றத்தின்



அனுமதியுடன் வெளி நாடுகளுக்குச் சென்று வந்தார்.

சென்னை திரும்பிய பின்னர் நீதிமன்றத்தில் கடவுச்சீட்டை ஒப்படைப்பார்.

தற்போது, லண்டனில் நடக்கும் நிகழ்ச்சிக்காக வரும் 10ஆம் திகதி செல்வதாகவும் மூன்று வாரங்களில் சென்னை திரும்புவதாகவும் அதற்காக கடவுச்சீட்டை வழங்க வேண்டும் எனக் கோரி சென்னை செஷன்ஸ் நீதிமன்றத்தில் வைகோ மனுத் தாக்கல் செய்தார். இந்த மனுவை நீதிபதி கலியமூர்த்தி விசாரித்தார். கடவுச்சீட்டு வழங்க பொலிஸ் தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்படவில்லை. இதையடுத்து வைகோவுக்கு கடவுச் சீட்டை வழங்க நீதிபதி கலியமூர்த்தி உத்தரவிட்டுள்ளார். (3)

# திட்டமிட்டபடி கூடங்குளத்தில் முற்றுகைப் போராட்டம்



கூடங்குளம் அணு உலையை மூடும் வரை எங்கள் போராட்டம் தொடரும். திட்டமிட்டபடி நாளை மறுதினம் 8ஆம் திகதி முற்றுகைப் போராட்டம் நடைபெறும் எனக்கூடங்குளம் அணு உலை எதிர்ப்புக்குழு வின் ஒருங்கிணைப்பாளர் உதயகுமார் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கூடங்குளம் அணு உலையில் எரிபொருள் நிரப்பும் பணி முடிய 2 மாதங்கள் ஆகும் என்றும், மின் உற்பத்தி அடுத்த ஆண்டுக்கு தள்ளி வைக்கப்பட்டுள்ளதாகவும் அணுசக்தித் துறைத் தலைவர் சின்ஹா கடந்த சில தினங்களுக்கு முன் தெரிவித்தார்.

இந்த நிலையில் யுரேனியம் நிரப்பும் பணி முடிந்து விட்டதாக தகவல்களை பரப்பி வருகிறார்கள். அணு சக்தி துறை மிகப் பெரிய துறை, ஆனால் அத்துறையில் இருந்து முரண்பட்ட தகவல்கள் தெரிவிக்கப் பட்டு வருகின்றன. உளவுத் துறை இவ்வாறு தகவல்களைத் திட்டமிட்டு பரப்புகிறதா? என்று தெரியவில்லை.

எவ்வாறு இருந்தாலும் கூடங்குளம் அணு உலையை மூடும் வரை எங்கள் போராட்டம் தொடரும். ஜப்பானில் 52 அணுமின் நிலையங்களை மூடிவிட்டு, 2 அணு உலைகளை மட்டுமே செயற்படுத்தி வருகிறார்கள்.

இதற்கும் அந்த நாட்டு மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகிறார்கள். கூடங்குளம் அணுஉலையை மூட வலியுறுத்தி நாளை மறுதினம் திங்கட்கிழமை கடல் வழியாக படகுகளில் சென்று முற்றுகை யிடும் போராட்டம் திட்ட மிட்டபடி நடைபெறும். அணு உலையில் இருந்து 500 மீற்றர் தொலைவில் மீனவர்கள் முற்றுகைப் போராட்டத்தை அறவழியில் நடத்துவார்கள்.

இதில் நெல்லை, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்ட மீனவர்களும், கேரள மீனவர்களும் கலந்து கொள்கின்றனர். நானும் இப்போராட்டத்தில் பங்கேற்க உள்ளேன். மீனவர்கள் கடலுக்குள் முற்றுகைப் போராட்டம் நடத்தும் வேளையில், பெண்கள் கடற்கரையில் திரண்டு அறவழிப் போராட்டத்தில் ஈடுபடுவார்கள் என்றார். (3)

# சச்சின் மீதான வழக்கை விசாரிக்கக் கோரி மனு



கிரிக்கெட் வீரர் சச்சினுக்கு ராஜ்யசபா உறுப்பினர் பதவி வழங்கப்பட்டதை எதிர்த்து தொடரப்பட்டுள்ள வழக்குகளை உச்ச நீதிமன்றம் விசாரிக்க வேண்டுமென டெல்லி முன்னாள் எம்.எல்.ஏ. ஒருவர் மனு தாக்கல் செய்துள்ளார்.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி கலை, அறிவியல், சமூக அறிவியல் மற்றும் இலக்கியம் ஆகிய துறைகளில் சிறந்து விளங்குபவர்களுக்கு ராஜ்யசபா எம்.பி. பதவி வழங்கலாம் எனக் கூறப்படுகிறது.

ஆனால் இதில் விளையாட்டுத்துறை பற்றி அரசமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப்படவில்லை.

இந்த நிலையில் கடந்த மே மாதம் கிரிக்கெட் வீரர் சச்சினுக்கு மத்திய அரசு எம்பி பதவி வழங்கியதை எதிர்த்து டெல்லி மற்றும் அலகாபாத் உயர் நீதிமன்றங்களில் வழக்குத் தொடரப்பட்டது.

இதில் சச்சின் எம்.பி. பதவி ஏற்க தடை விதிக்க வேண்டும் எனவும் மனுவில் கோரப்பட்டது.

இவ்வழக்கை விசாரணைக்கு எடுத்து கொண்ட டெல்லி உயர்நீதிமன்றம், இது தொடர்பாக மத்திய அரசு பதில் மனு தாக்கல் செய்ய உத்தரவிட்டது. அதன்பின்னர், சச்சினுக்கு தடை விதிக்க நீதிமன்றம் மறுத்துவிட்டது. அதைத் தொடர்ந்து, சச்சின் எம்.பி. பதவியை ஏற்றுகொண்டார்.

துணை ஜனாதிபதி தேர்தல் வாக்கெடுப்பிலும் கலந்து கொண்டார். இந்த நிலையில் சச்சினுக்கு எதிரான 2 வழக்குகளையும் உச்ச நீதிமன்றம் விசாரிக்க வேண்டுமென டெல்லியைச் சேர்ந்த முன்னாள் எம்எல்ஏ ராம் கோபால் சிங் சிசோதியா என்பவர் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்.

இரண்டு உயர் நீதிமன்றங்களிலும் மாறுபட்ட தீர்ப்புகள் வருவதற்கான வாய்ப்புகள் இருப்பதால் இந்த வழக்கை உச்ச நீதிமன்றம் விசாரிப்பதே பொருத்தமாக இருக்கும் என மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (3)

# அதிகளவு ஏற்றுமதி செய்யக்கூடிய நாடுகளின் பட்டியலில் இந்தியாவும்

உலக அளவில் அதிகமாக ஏற்றுமதி செய்யக்கூடிய நாடுகளின் பட்டியலில் இந்தியா இடம்பெற்றுள்ளது.

இந்தியா, உலக அளவில் அதிகமாக ஏற்றுமதி செய்யக்கூடிய நாடுகளின் பட்டியலில் இடம்பெற்றுள்ள விடயத்தை உலக வர்த்தக மையத்தின் தலைவர் லேமி தெரிவித்தார்.

இதேபோல் பிரேஸில், மெக்சிகோ, மலேசியா போன்ற நடுகளும் 'ரொப்- 25' நாடுகள் பட்டியலில் இடம்பெற்றுள்ளன.

சீனா, இந்தியா, மலேசியா ஆகிய நாடுகளின் வளர்ச்சி 2011ம் ஆண்டைக் காட்டிலும் 15 சதவீதம் அதிகமாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.,

மேலும் உலக அளவில் 2008ம் ஆண்டில் 33 சதவீதமாக இருந்த ஏற்றுமதி வளர்ச்சி தற்போது 50 சதவீதமாக வளர்ச்சி பெற்றுள்ளது.

உலக அளவில் ஒட்டு மொத்த உற்பத்தி 1980ம் ஆண்டில் 40 சதவீதமாக இருந்தது தற்போது அது 60 சதவீதத்தை எட்டியுள்ளது.

இதற்கிடையே ஒவ்வொரு நாடுகளிலும் பல்வேறு முறையான ஏற்றுமதி-இறக்குமதி சட்டம் இருப்பதால் சில பாதிப்புகள் உள்ளன என லேமி கூறினார்.(3)



மழை ஏமாற்றி வருவதால், தேனி மாவட்ட விவசாயிகள் சமீபகாலமாக சொட்டு நீர் பாசனத்திற்கு மாறி வருகின்றனர். தேனி நாகலாபுரம் அருகே சொட்டுநீர் பாசனத்தில் விவசாயம் செய்ய குழாய்கள் பதிக்கப் பட்டுள்ளன.

# முன்னாள் இராணுவத் தளபதி பிரார் தாக்கப்பட்டமை தொடர்பில் 4 பேர் கைது

இந்தியாவின் முன்னாள் இராணுவத் தலைமை தளபதியை தாக்கியது தொடர்பாக லண்டனில் 4 பேர் கைது செய்யப்பட்டனர்.

கடந்த 28ம் திகதி லண்டன் சென்றிருந்த இந்திய முன்னாள் இராணுவ லெப்டினன்ட் ஜெனரல் குல்தீப்சிங் பிராரை காலிஸ்தான் இயக்க சீக்கிய பயங்கரவாதிகள் கத்தியால் குத்தித் தாக்கினர்.

இதில் படுகாயமடைந்த குல்தீப் சிங், இந்தியா திரும்பி சிகிச்சை பெற்று வருகின்றார்.

கடந்த 1984ம் ஆண்டு சீக்கியர்களுக்கு எதிரான 'ஒபரேஷன் புளூஸ்டார்', நடவடிக்கையை மேற்கொண்டதற்கு பழிவாங்கவே இந்தத் தாக்குதல் நடந்ததாகக் கூறப்படுகிறது.

இந்தநிலையில் லண்டன் மெட்ரோ பொலிஸார் இந்தத் தாக்குதல் தொடர்பாக 40 வயது பெண் உட்பட 4 பேரை பல்வேறு நகரங்களில் கைதுசெய்து விசாரித்து வருகின்றனர். (3)

# ஜெயக்குமாரின் ஆதரவாளர்கள் அ.தி.மு.க.விலிருந்து அதிரடி நீக்கம்

தமிழகச் சட்டபேரவை சபாநாயகராக இருந்து ராஜினாமா செய்த ஜெயக்குமாரின் ஆதரவாளர்கள் 59 பேர் அதிமுக விலிருந்து அதிரடியாக நீக்கப்பட்டுள்ளனர்.

கடந்த சனிக்கிழமை சபாநாயகராக இருந்த டி.ஜெயக்குமார் தனது பதவியை ராஜினாமாச் செய்தார்.

அதைத் தொடர்ந்து அதிமுக தலைமையினால் பல்வேறு அதிரடி நடவடிக்கைகள் தொடர்ந்து வந்தநிலையில் நேற்று வடசென்னை, வடக்கு மாவட்ட செயலாளரும், ஜெயக்குமாரின் தீவிர ஆதரவாளருமாக கருதப்பட்ட வெற்றிவேலிடமிருந்த வட சென்னை செயலாளர் பதவி பறிக்கப்பட்டதுடன், 59 நிர்வாகிகளும் அதிமுகவிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிர்வாகிகள் மீனவர் பிரிவு, எம்.ஜி.ஆர் பிரிவு, இளைஞர் அணி, இளம் பாசறை பிரிவு, ஜெயலலிதா பேரவை என பல்வேறு பிரிவுகளில் [illegible] இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலிடத்தை தட்டிக் கொண்டன அமெரிக்க பல்கலைக் கழகங்கள்

வொஷிங்டன்,ஒக்.6
உலகளவில் பிரிட்டன் மற்றும் அமெரிக்கப் பல்கலைக்கழகங்கள் கல்வித் தரத்தில் முதலிடம் வகிக்கின்றன என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

2012 - 2013ஆம் ஆண்டுக்கான இந்தப் பட்டியலில் அமெரிக்காவில் உள்ள கலிஃபோர்னியா தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் முதலிடத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.

கடந்தாண்டு நான்காவது இடத்தில் இருந்த லண்டன் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் 2ஆம் இடத்தையும், 2ஆம் இடத்தில் இருந்த ஸ்டாண் போர்ட் பல்கலைக்கழகம் (அமெரிக்கா) மூன்றாம் இடத்தையும் தக்க வைத்துக் கொண்டுள்ளன.

அதேநேரம் 2ஆம் இடத்தில் இருந்த அமெரிக்காவின் ஹார்வார்ட் பல்கலைக் கழகம் 4ஆம் இடத்துக்கு பின்தங்கியுள்ளது.

ஆறாவது இடத்தில் இருந்த கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் ஓர் இடம் பின்தங்கி 7ஆம் இடத்துக்கு வந்துள்ளது. லண்டன் இம்பீரியல் கல்லூரி 8 ஆவது இடத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.


இதுபற்றிப் பொருளாதாரக் கூட்டுறவு மேம்பாட்டு அமைப்பின்புத்தாக்கம் மற்றும் அளவீடு பிரிவின் தலைவர் டிர்க் வேன் டேமி தெரிவித்ததாவது:- உலகளவில் கல்வித் தரத்தில் அமெரிக்கா மற்றும் பிரிட்டன் பல்கலைக்கழகங்கள் தொடர்ந்து முதலிடம் வகிக்கின்றன.

அதேநேரம் முதல் 200 இடங்கள் பட்டியலுக்குள் இந்த முறை கடுமையாக இறக்கத்தையும் சந்தித்துள்ளன.

உலகளவில் கல்விக்கு ஏற்பட்டுள்ள போட்டியும், அதிக கல்விக் கட்டணம் வசூலிப்பதும், கல்விக்கான ஒதுக்கீடு குறைந்து வருவதுமே இதற்குக் காரணமாகும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

ரைம்ஸ் உயர் கல்வி அமைப்பு உலகளவில் 700-க்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்களின் கல்வித் தரம், கற்பிக்கும் முறை உள்ளிட்டவற்றை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டு இந்தப் பட்டியலை வெளியிட்டுள்ளது. (3)

## அதி அறிவுத்திறன் மிகுந்த 12 வயது லண்டன் சிறுமி



இங்கிலாந்தைச் சேர்ந்த 12 வயதுச் சிறுமிக்கு அறிவியல் அறிஞர்கள் ஐன்ஸ்டீன், ஸ்டீபன் ஹாக்கிங் போன்றோரை விட அதிகளவு அறிவுத்திறன் இருப்பது தெரியவந்துள்ளது.

லண்டனின் லிவர்பூல் பகுதியைச் சேர்ந்தவர் ஆலிவியா மேனிங்(வயது 12). அறிவுத்திறன் போட்டியில் கலந்து கொண்ட ஆலிவியா 162 மதிப்பெண்கள் எடுத்துள்ளார்.

இந்த வெற்றியின் மூலம் உலகின் மிகவும் பழைமையானதும், பெரியதுமான அதிக அறிவுத்திறன் பெற்ற சமூகமான மென்சாவில் இணையும் வாய்ப்பையும் ஆலிவியா பெற்றுள்ளார்.

ஐன்ஸ்டீன், ஹாக்கிங் ஆகியோரை விட இவர் 2 மதிப்பெண்கள் அதிகம் பெற்றுள்ளார். இதனால் உலகில் அதிக நுண்ணறிவு கொண்டவர்களில் முதலிடத்தையும் இவர் பிடித்துள்ளார். இது குறித்து ஆலிவியா தெரிவிக்கையில்என்னுடன் படிக்கும் மாணவ, மாணவிகளில் நிறையப் பேர் என்னிடம் வந்து அவர்களது வீட்டுப்பாடங்களைச் செய்து தரும்படி கேட்பர். இதை ஒரு சவாலாக எடுத்து என்னுடைய ஞாபகத் திறனை வளர்த்துக் கொண்டேன் என்று தெரிவித்தார். (3)

## துபாயில் தயாராகிறது 'தாஜ் அரேபியா'

360 ஆண்டுகளுக்கு முன்பு பேரரசர் மொகாலய மன்னர் ஷாஜஹான், அவரது மனைவி மும்தாஜ் நினைவாக கல்லறை காதல் ஓவியமான தாஜ்மஹாலைக் கட்டினான். இதைக் கட்ட 22 வருடங்கள் ஆயின. காதலர்களின்நினைவுச் சின்னமாக விளங்கும் இந்த உலகப் புகழ்பெற்ற வெள்ளை மாளிகை 'தாஜ்மஹால்' கட்டடத்தைப்போல் நான்கு மடங்கு பெரிய 'தாஜ் அரேபியா' என்ற ஒரு மாதிரி தாஜ்மஹாலை கட்ட துபாய் கட்டுமானக் கம்பெனி முடிவு செய்துள்ளது.

அதற்குரிய வரைபடங்கள் வரையும் வேலைகளிலும் அவர்கள் இறங்கியுள்ளனர். துபாய் நாட்டின் எமிரேட்ஸ் சாலையில் உள்ள 4 கோடியே 10 லட்சம் சதுர அடிகொண்ட பால்கன் அதிசய நகரத்தின் மையப்பகுதியில் அது அமையவுள்ளது. இரண்டு வருடங்களில் கட்டி முடிக்க முடிவு செய்துள்ள இந்த தாஜ் அரேபியா கட்டடத்திற்கு 100 கோடி டொலர் செலவிட திட்டமிட்டிருக்கிறார்கள்.

தாஜ் அரேபியா என்ற கட்டடம் காதல் மற்றும் காதல் லீலைகளின் நினைவு அடையாளமாக விளங்கும். மேலும் உலகின் மிகப்பெரிய கல்யாண மண்டபமும் அதில் இடம்பெறும். 7 கட்டடங்களை எல்லைகளாகக் கொண்டு கட்டப்படவுள்ள இந்த தாஜ் அரேபியாவில், சேவை ஆள்களுடன் கூடிய 200 குடியிருப்புகளும், 300 அறைகளுடன் கூடிய ஐந்து நட்சத்திர ஹோட்டலும் இருக்கும். (3)



பிரான்ஸ் நாட்டுக்கு வந்த ஏமன் அதிபர் அபெத் ராப்பு மன்சூர் ஹதியை பிரான்ஸ் அதிபர் பிரான்கோயிஸ் ஹோலண்ட், பரிஸில் உள்ள அதிபர் மாளிகையில் வரவேற்றார்.

## செப்ரெம்பர் 11 தாக்குதல் சம்பவம்: ஈரான், அல்குவைதா அமைப்பு நட்டஈடு வழங்க வேண்டும்

**அமெரிக்க நீதிமன்றம் உத்தரவு**



ஈரான்மற்றும்அல்குவைதா அமைப்பினர் 35 ஆயிரம் கோடி ரூபா நஷ்டஈடு வழங்க வேண்டும் என அமெரிக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அமெரிக்காவில் கடந்த 2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11ஆம் திகதி இராணுவத் தலைமையகமான பென்டகன், நியூயோர்க்கில் உள்ள உலக வர்த்தக மையமான இரட்டை கோபுரம் போன்ற இடங்களில் அல்குவைதா அமைப்பினர் விமானத்தை மோதச் செய்து தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் மட்டும் மொத்தம் 3,000 பேர் கொல்லப்பட்டனர். இந்த சம்பவத்தில் ஈரான் தலைவர் ஆயதுல்லா கொமெனி, லெபனான் நாட்டின் ஹிஸ்புல்லா தீவிரவாதிகள், ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் மற்றும் அல்குவைதா தரப்பினருக்குத் தொடர்பு இருப்பதாகக் குற்றம் சாட்டப்பட்டது.

இந்த நிலையில் உயிரிழந்தவர்களின் உறவினர்கள் 47 பேர் நஷ்டஈடு கோரி அமெரிக்க நீதிமன்றத்தில் கடந்தாண்டு வழக்குத் தொடர்ந்தனர்.

வழக்கை விசாரித்த நீதிபதி ஜோர்ஜ் டேனியல், 2001ஆம் ஆண்டு நடந்த சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களுக்கு நஷ்டஈடாக 35 ஆயிரம் கோடி ரூபா வழங்க வேண்டும்எனஈரான்தலைவர் மற்றும்அல்குவைதா அமைப்பினருக்கு உத்தரவிட்டார். (3)

## அமைதிக்கான நோபல் பரிசு இம்முறை எகிப்து நாட்டின் மேகி கோப்ரானுக்கு

2012ஆம் ஆண்டுக்கான நோபல் பரிசுகள் விரைவில் அறிவிக்கப்பட உள்ளன. நோபல் பரிசு உலகின் மிக உயரிய கௌரவமாக கருதப்படுகிறது.

அமைதி, இலக்கியம், இயற்பியல், வேதியியல், மருத்துவம் மற்றும் பொருளாதாரம் ஆகிய துறைகளில் புதிய கண்டுபிடிப்பு மற்றும் சாதனைகளை நிகழ்த்தியவர்களுக்கு ஆண்டுதோறும் இப்பரிசு வழங்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் இம்முறை அமைதிக்கான நோபல் பரிசு எகிப்து நாட்டைச் சேர்ந்த மேகி கோப்ரானுக்கு கிடைக்கும் என்று தெரிவிக்கப்பட்டு வருகின்றது.

இவர் கெய்ரோவில் உள்ள ஏழ்மையான மக்களின் வாழ்க்கைத் தரம் உயர பல சேவைகளைப் புரிந்துள்ளார்.

இவர் கெய்ரோவின் மதர் தெரேசா என்று அழைக்கப்படுகிறார்.

அதே போன்று இலக்கியத்துக்கான நோபல் பரிசைப் பெறுவதில் சீன எழுத்தாளர் மோ யான் மற்றும் ஜப்பானைச் சேர்ந்த ஹருகி முரகாமி ஆகியோரின் பெயர்கள் முன்னணியில் உள்ளன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (3)

## ஈரான் நாணயத்தின் பெறுமதி வீழ்ச்சி

தெஹ்ரான், ஒக்.6
அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின், பொருளாதாரத் தடை காரணமாக, ஈரான் நாட்டின், நாணயத்தின் மதிப்பு 40 சதவீதம் சரிந்துள்ளது. ஈரான் நாடு, அணு ஆயுதம் தயாரிப்பதாகக் கூறப்படும் தகவல்களை அடுத்து அந்த நாட்டின் மீது, அமெரிக்கா, உள்ளிட்ட நாடுகள், பொருளாதாரத் தடை விதித்துள்ளன. இதன் காரணமாக அந்த நாட்டிலிருந்து, கச்சா எண்ணெய் வாங்க மற்ற நாடுகளுக்கு, தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதனால், ஈரான் நாட்டு வருவாய் கணிசமாக குறைந்துள்ளது. இதற்கிடையே அந்நாட்டின் நாணயமான ரியாலின் மதிப்பு 40 சதவீதம் சரிந்துள்ளது. நாணயத்தின் மதிப்பு சரிந்து வருவதால், ஈரான் மக்கள், தங்களிடம் உள்ள ரியாலை, டொலர்களாக மாற்றி வருகின்றனர். இந்த சூழ்நிலையால், ஈரான் அரசிடம் அந்நிய செலாவணி கையிருப்பு குறைந்து விட்டது. டொலர் பரிமாற்றம் செய்யும் வர்த்தகர்கள் மீது, ஈரான் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. (3)

## ஒபாமாவைத் தோற்கடித்த ரோம்னி

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் பிரசாரம் தொடர்பாக ஒரே மேடையில் ஜனாதிபதி பராக் ஒபாமாவும், மிட் ரோம்னியும் விவாதித்தனர்.

அமெரிக்காவில் எதிர்வரும் நவம்பர் மாதம் 6ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல் நடக்க உள்ளது. இந்த நிலையில் ஜனநாயகக் கட்சி சார்பில் ஜனாதிபதி ஒபாமா மீண்டும் போட்டியிடுகிறார். குடியரசுக் கட்சி சார்பில் மிட் ரோம்னி போட்டியிடுகிறார்.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் [illegible] அமெரிக்காவில் நடைமுறையில் உள்ளது. மூன்று முறை இவர்கள் பல்வேறு இடங்களில் ஒரே மேடையில் விவாதித்து மக்களிடம் வாக்கு கேட்பார்கள்.



இந்நிலையில் கடந்த புதன்கிழமை டென்வர் நகரில் இருவரும் ஒரே மேடையில் விவாதித்தனர். ஒன்றரை மணி நேரம் நடந்த இவர்களது விவாதத்தில் பொருளாதாரப் பிரச்சினைகள் தான் அதிகம் இடம்பெற்றன.

குடியரசு கட்சி வேட்பாளர் ரோம்னியின் ஆணித்தரமான பேச்சுக்கு முன், ஒபாமா சில இடங்களில் அடங்கிப் போனார். ஒபாமா ஆட்சியில் நடந்த பொருளாதாரக் குளறுபடிகளை ரோம்னி பட்டியலிட்டது மக்களிடையே பெருத்த வரவேற்பை பெற்றுள்ளது.

இந்த விவாதம் தொடர்பாக ரோம்னியின் கருத்தை 67 சதவீதத்தினரும், ஒபாமாவின் கருத்தை 25 சதவீதத் தினரும் ஆதரித்துள்ளனர். (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆடைக்காக அதிக அளவில் செலவிடும் பெண்கள்

லண்டன், ஒக் 6

பெண்கள் தங்கள் சம்பளத்தில் 18 சதவீதத்தை, ஆடைகள் வாங்குவதற்காக செலவு செய்கின்றனர் எனக் கருத்துக் கணிப்பு ஒன்று தெரிவித்துள்ளது. அலுவலகப் பொருள்கள் வழங்கி வரும் நிறுவனமான, ''ப்ரதர் யூ.கே.'' என்ற நிறுவனம், சமீபத்தில் வேலைக்குச் செல்லும் பெண்கள் குறித்து, கருத்துக் கணிப்பு நடத்தியது. அதன்படி உடன் பணிபுரிபவர்களை போல, தாங்களும் புதிதாக உடை அணிந்து செல்ல வேண்டும் என்ற மனப்பான்மை, அலுவலகத்திற்குச் செல்லும் பெண்களிடம் அதிகரித்து வருகிறது.

இதற்காக, பெண்கள், 30 ஆயிரம் ரூபாய் அளவுக்கு ஒவ்வொரு ஆண்டும் செலவழிக்கின்றனர். நான்கில் ஒருவர், உடன் பணிபுரியும் சக ஊழியரைப் போல், உடை அணிய வேண்டுமென்பதற்காக தங்களின் உடை அலங்காரப் பாணியை மாற்றிக் கொண்டுள்ளதாகக் கூறுகின்றனர். அறுபது சதவீதம் பேர், தங்கள் தொழில் முன்னேற்றத்திற்காக புதிய ஆடைகள் வாங்குவதாக தெரிவித்துள்ளனர்.

## உயிருடன் புதையுண்டனர் சீனாவில் 18 மாணவர்கள்



பெய்கிங், ஒக்.6

சீனாவின் யுன்னான் மாகாணத்தில் யில்லாங் என்ற கிராமத்தில் புதன்கிழமை காலை திடீரென நிலச்சரிவு ஏற்பட்டது. இதில் ஒரு தொடக்கப்பள்ளி இடிந்து விழுந்தது. அப்போது பள்ளியில் இருந்த 18 மாணவர்கள் மண்ணில் புதைந்து பரிதாபகரமாக உயிரிழந்தனர். மேலும் அந்த கிராமத்தில் உள்ள பல வீடுகளும் நிலச்சரிவில் சேதம் அடைந்தன.

நிலச்சரிவில் இருந்து தப்பியவர்கள் மற்றும் வீடுகளை இழந்தவர்களை பாதுகாப்பான இடத்திற்கு அழைத்துச் சென்றனர். விபத்து நடந்த இடம் கிராமத்தில் ஒதுக்குப்புறமாக இருந்ததால் மீட்புப் பணியில் தாமதம் ஏற்பட்டது எனத் தெரியவருகின்றது.

## பிரான்ஸ் ஜனாதிபதியின் காதலி தொடர்ந்து பத்திரிகைப் பணியில்

பத்திரிகைத் துறையில் தன் பணியைத் தொடரப் போவதாக பிரான்ஸ் ஜனாதிபதி பிராங்கோய்ஸ் ஹோலண்டேவின் காதலி தெரிவித்துள்ளார்.

பிரான்ஸ் ஜனாதிபதி பிராங்கோய்ஸ் ஹோலண்டேவைத் திருமணம் செய்யாமலே அவருடன் சேர்ந்து வாழ்ந்து வருகிறார் ஏற்கனவே இருமுறை விவாகரத்தான வலேரி ட்ரையர் வெய்லர்(வயது 47).

தொலைக்காட்சி நிலையம் ஒன்றில் பணியாற்றி வந்த வலேரி, கடந்த மே மாதம் நடந்த ஜனாதிபதி தேர்தலின் போது வேலையை விட்டு விலகினார்.

தற்போது ஹோலண்டே ஜனாதிபதியாக இருப்பதால், தொலைக்காட்சி நிறுவனத்தில் வேலை பார்ப்பது ஏதேனும் சர்ச்சைகளை ஏற்படுத்தும் என்பதால், அந்த வேலையில் சேரப்போவதில்லை எனக் கூறியுள்ளார்.

மேலும் கடந்த 22 ஆண்டுகளாக 'பரிஸ் மாட்ச்' என்ற புத்திரிகையில் பணிபுரிந்து வந்த வலேரி, அந்தப் பணியைத் தொடரப் போவதாக அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் தெரிவிக்கையில், சம்பளம் இல்லாமல் என் குழந்தைகளை எப்படி பார்த்துக் கொள்வேன் என்று தெரியவில்லை.

எனவே பத்திரிகைத் துறையில் என் பணியைத் தொடர முடிவு செய்துள்ளேன். பிள்ளைகளை வளர்க்க ஹோலண்டேவை நம்பியிருக்க நான் விரும்பவில்லை என்று தெரிவித்துள்ளார்.

## புயல் காற்றுக்கும் அசையாத குடை

கடும் சூறாவளி காற்று வீசும் பொழுதும், மேல் பக்கம் மடங்காத வகையில், உறுதியான குடை நெதர்லாந்து நாட்டில் வடிவமைக்கப்பட்டுள்ளது. பொதுவாக, சாதாரண குடைகள், 20 கி.மீ., வேகத்தில் காற்று வீசினாலே மேல் பக்கம் மடங்கி, பிடித்து கொள்ள முடியாமல் சிரமத்தை ஏற்படுத்தும்.

ஆனால், புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இந்தக் குடை 113 கி.மீ., வேகத்தில் சூறாவளி காற்று வீசினாலும் மடங்காது.

நெதர்லாந்தை சேர்ந்த, ஜெர்வின் ஹூகென்டூன், என்ற இன்ஜினியரிங் கல்லூரி மாணவர், இந்தக் குடையை வடிவமைத்துள்ளார். சைக்கிள் ''ஹெல்மெட்' போன்று இதன் வடிவம், அமைந்துள்ளது.

## சீனப் பெருஞ்சுவருக்குப் படையெடுக்கும் மக்கள்

*சீனாவில் ஒக்ரோபர் மாதம் இலையுதிர் காலம் என்பதால் பாடசாலைகளில் தேர்வுகள் முடிந்து ஒரு வார கால விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.*

*இந்த நிலையில் இந்த விடுமுறையைக் கொண்டாட சீனர்கள் அனைவரும் பெருஞ்சுவருக்குப் படையெடுத்துள்ளனர். 5,500 வருடங்கள் மிகவும் பழமையான சீனப்பெருஞ்சுவரைக் காண அந்த நாட்டு மக்கள் மட்டுமல்லாது வெளிநாட்டவர்களும் படையெடுக்கத் தொடங்கியுள்ளனர்.*

*சீனர்களில் சுமார் 1.35 பில்லியன் மக்கள் சீனப்பெருஞ்சுவருக்கு வருகை தருவதாக அந்த நாட்டு அரசு தெரிவித்துள்ளது. வெளிநாட்டு சுற்றுலாப்பயணிகள் மட்டும் 362 மில்லியன் பேர் வருவதாக சீன சுற்றுலாத்துறை தெரிவிக்கிறது. வருடத்துக்கு ஒருமுறையாவது பெருஞ்சுவருக்கு வராதவர் சீனரே இல்லை என்று அந்த நாட்டு தலைவர் மா-சே-துங் தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.*







**யாழ்ப்பாணக் கல்வி நிலையம்**
**The Jaffna Education Center**
(சீயோன் தேவாலயத்துக்கு அருகில்)
Spoken English with Grammar
'சிங்களம்'
Shorthand Typing
E.sol பரீட்சைக்குத் தயார்படுத்தல் ஆகிய வகுப்புக்கள் நடைபெறுகின்றன. புதிய பிரிவு ஆரம்பம் இன்று (06.10.2012) சனிக்கிழமை கற்கை நெறி முடிவில் 'சான்றிதழ்' வழங்கப்படும்.
ஆசிரியை: இ.லோகநாயகி
தொ.பே.: 077 677 9340
(23679)(5-6-7)

**காணி விற்பனைக்கு**
மருதனார்மடம் சந்தியிலிருந்து 200 மீற்றர் தூரத்தில் உடுவில் மானிப்பாய் வீதியில் 7¾ பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 075 043 3771,021 224 0973
(23520)(5-6-7)

**TV மலிவு விற்பனை**
யாழ். நகரில் எங்குமில்லாத மலிவு விலையில் Sony (Japan)
Wega Flat T-Vகள் 21"-13,000/=, 29" - 15000/=
குளிர்சாதனப்பெட்டி - 29,000/=, Box DVD (L.S) 4000/=,
National Rx46 றேடியோ கசெற் (Japan)
தொடர்புகளுக்கு: 077 044 0570
சோனி றேட்றசென்றர் (கொமர்சல் வங்கி முன்பாக)
56, K.K.S. வீதி, சுன்னாகம். (23772) (5.6.7)

**வயது ஒரு தடையா!**
65 வயதிற்குட்பட்ட ஆர்வமுள்ள வேலை வாய்ப்பை நாடி நிற்போருக்கு, அரச காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் காப்புறுதி ஆலோசகராகப் பணியாற்றி நல்ல வருமானத்தை ஈட்ட ஓர் அரிய வாய்ப்பு.
குறிப்பு: முழுநேரமாகவோ, பகுதி நேரமாகவோ பணியாற்றலாம்.
* 2 வார பயிற்சிக் காலமுடையது.
* பயிற்சி முடிவில் தொழில் தகைமை தொடர்பான அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.
* பணி நிலையங்கள் வடபகுதிக் கிளைகளில்.
அடிப்படைத் தகைமைகள்:
★ G.C.E(O/L) பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி
★ 18- 65 வயதிற்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயவிவரக் கோவையுடன் (BIO DATA) விண்ணப்பங்களை 20.10.2012 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
விளம்பர இல. 4404
C/O உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(23714)(5-6-7)

**Diploma in English**
ஆங்கிலம் இனிமேல் தடையில்லை
★ இக் கற்கை நெறியானது மிகக் குறுகிய காலத்திற்குள் சரளமாக ஆங்கிலத்தில் பேச, எழுத, வாசிக்க உங்களை தயார்படுத்துகிறது.
★ அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்கள்.
★ குறைந்த கட்டணம் மற்றும் இலகு தவணை கொடுப்பனவு வசதி.
★ நவீன வகுப்பறைகள்.
★ உலகத் தரம் வாய்ந்த சான்றிதழ்

பதிவுகள் ஆரம்பம்
PRINCE CITY CAMPUS
No. 275, Clock Tower Road, Jaffna.
Tel: 021 492 3855, Hotline: 0775 949 272

**வேலை வாய்ப்பு**
அலுவலக சிற்றூழியர்
(ஆண் - 01 )
வயதெல்லை : 25 - 45
யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் எமது கல்வி நிறுவனத்திற்கு மேற்படி பணி நிலைக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.
நேரடி நேர்முகத் தேர்வு
திகதி : 06.10.2012
நேரம் :1.00 pm - 4 .00 pm
இடம் : Prince City Campus
இல . 275, மணிக்கூட்டு கோபுர வீதி ,
யாழ்ப்பாணம்.
(ஞானம் ஹோட்டலுக்கு அருகில்)
தொ.பே : 021 492 3855,
0775 949 272

**LL.B ( UK) கற்கை நெறி**
யாழில் சட்டக் கல்வியை வழங்கும் ஒரே கல்வி நிறுவனம்
Prince City Campus இன்
EdHat IHD in Law leading to LL.B (UK)
புதிய பிரிவுகளுக்கான பதிவுகள் நடைபெறுகிறது

★ உலக தரம் வாய்ந்த கற்கை நெறி.
★ இலங்கை மற்றும் UK பாட விதானங்களை உள்ளடக்கியது.
★ யாழ்ப்பாணத்தில் 3 வருடங்களையும் பூர்த்தி செய்யலாம்.
★ இலகு தவணை கொடுப்பனவு முறை
★ இலவசமான ஆங்கிலம் , மற்றும் தகவல் தொழில் நுட்ப கற்கை திட்டங்கள்.
Prince City Campus
இல. 275,மணிக்கூட்டு கோபுர வீதி (Clock Tower Road), யாழ்ப்பாணம்.
தொ . பே .- 021 492 3855 Hotline: 0775 949 272 (சி/3910)(6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோயாளரைப் பார்வையிட வருவோர் வீதியில் காத்திருக்கும் அவலம்

## மட்டு. வைத்தியசாலையிலும் இதே நிலை

மட்டக்கப்பு,ஒக்.6

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் நோயாளர்களை பார்வையிட தூர இடங்களிலிருந்து வரும் பார்வையாளர்களை, வைத்தியசாலையில் தங்குவதற்கு அமைக்கப்பட்டிருக்கும் தங்குமிடத்துக்குச் செல்வதற்கு கடந்த சில வாரங்களாக அனுமதிக்கப்படவில்லை என்று பார்வையாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.



கடந்த சில மாதங்களாக வெளிநோயாளர் பிரிவுக்கு அண்மையில் நின்றுகொண்டிருந்த மக்கள், தற்போது வைத்தியசாலைக்கு வெளியில் வீதி ஓரங்களில் கொட்டும் வெயிலில் சிறுவர்கள், முதியவர்கள், வயோதிபர்கள், கை குழந்தையோடு வருகின்ற தாய்மார்கள் எனப் பலரும் நிற்கின்றனர்.

வைத்தியசாலையில் நோயாளர்களைப் பார்வையிட தினமும் மட்டக்களப்பு, கல்முனை, பொத்துவில், நிந்தவூர், ஏறாவூர், செங்கலடி, வாழைச்சேனை, காத்தான்குடி, அக்கரைப்பற்று, திருக்கோவில் போன்ற தூரப் பிரதேசங்களிலிருந்து பார்வையாளர்கள் வருகின்றனர்.

குறித்த நேரத்துக்கு முன்னர் தூர இடங்களில் இருந்து வரும் பார்வையாளர்கள் அவர்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் தங்குமிடத்தில் அனுமதிக்கப்படவில்லை என்று பார்வையாளர்கள் கூறுகின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட வைத்தியசாலை அதிகாரிகள் கவனமெடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

இதேவேளை, யாழ். போதனா வைத்தியசாலைக்கு நோயாளர்களைப் பார்வையிட வருபவர்களும் உச்சி வெயிலில் வீதியோரத்தில் காத்து நிற்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ஒ-ச)

## இரண்டு வருடங்களுக்கு முன் காணாமற்போன சிறுமி மீட்பு

நுவரெலியா,ஒக்.6

பதுரளிய பிரதேசத்திலிருந்து கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் காணாமற் போன 10 வயதுச் சிறுமியொருவர் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மீட்கப்பட்டுள்ளார்.

குருவிட்ட பிரதேசத்தில் சந்தேகநபர் ஒருவரால் சட்டவிரோதமாக தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் குறித்த சிறுமி மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த சிறுமி வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளாரா என்பது தொடர்பில் சட்ட வைத்திய அதிகாரியிடம் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு இரத்தினபுரி நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, குறித்த சிறுமியை மறைத்து வைத்திருந்த சந்தேகநபர் அந்தப் பிரதேசத்திலிருந்து தப்பிச் சென்றுள்ள நிலையில் அவரைத் தேடிக் கைதுசெய்யும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர். (ச)

## போலி வைத்தியர் விளக்கமறியலில்

தலவாக்கலை,ஒக்.6

போலி ஆவணங்களைக் கொண்டு தன்னை வைத்தியர் என்று அடையாளப்படுத்தி வைத்திய மத்திய நிலையங்களை செயற்படுத்தி வந்த ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

நாரம்மல மற்றும் திரிகபொல ஆகிய பகுதிகளில் சுமார் 12 வருடங்களாக குறித்த நபர் வைத்திய மத்திய நிலையங்களை இயக்கி வந்துள்ளார். எனினும் இவர் போலி வைத்தியர் என்று நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை அறிந்து கொண்ட பொலிஸார் அவரைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் தலவாக்கலை

நாரம்மல மற்றும் திரிகபொல ஆகிய பகுதிகளில் சுமார் 12 வருடங்களாக குறித்த நபர் போலி வைத்திய மத்திய நிலையங்களை இயக்கி வந்துள்ளார்.

தோட்டப் பகுதியைச் சேர்ந்தவராவார். இந்த நபரை குளியாப்பிட்டி நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியபோது எதிர்வரும் 17 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ச)

## இரு பெண்களின் சடலங்கள் மீட்பு

மட்டக்களப்பு மாவட்டத்தின் வெல்லாவெளி மற்றும் வாழைச்சேனை ஆகிய பகுதிகளில் இருந்து இரு பெண்களின் சடலங்களை நேற்று முன்தினம் வியாழக்கிழமை பொலிஸார் மீட்டுள்ளனர்.

வெல்லாவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாலையடி வட்டை, அலியார்வட்டைப் பகுதியில் உள்ள கிணறு ஒன்றிலிருந்து கோவில்போரதீவு பகுதியைச் சேர்ந்த பி.சுரேசினி (வயது 18) என்ற யுவதி சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று வெல்லாவெளிப் பொலிஸார் தெரிவித்தனர். சடலம் மீட்கப்பட்டு களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வாழைச்சேனை, மீராவோடை பகுதியில் உள்ள வளவொன்றினுள் இளம்பெண் ஒருவரின் சடலம் புதைக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச-31)



நுவரெலியா பொது வைத்தியசாலையில் நிலவும் குறைபாடுகளை ஆராய்வதற்காக நுவரெலியா மாநகர முதல்வர் மகிந்த குமார தொடம்பே கமகே நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை வைத்தியசாலைக்குச் சென்று பார்வையிட்டார். அருகில் நுவரெலியா பொது வைத்தியசாலையின் பதில் இயக்குநர் ரவீந்திர பதிரட்ண, வைத்தியசாலை அபிவிருத்திக் குழு தலைவர் அஜித் ஜயசிங்க உட்பட பொலிஸ் அதிகாரிகளும் காணப்படுகின்றனர்.

## லஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டில் தம்புள்ள பிரதி முதல்வர் கைது

கொழும்பு,ஒக்.6

ஒரு லட்சம் ரூபா லஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டின் பேரில் தம்புள்ள மாநகர சபையின் பிரதி முதல்வர் லஞ்ச ஒழிப்பு ஆணைக் குழுவால் நேற்று வெள்ளிக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் லஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு அதிகாரிகள் அவரிடம் தற்போது விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

இவர் எதற்காக லஞ்சம் வாங்கினார் என்பது குறித்து இதுவரையில் தெரியவரவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (ச)

## சமயங்களுக்கு இடையே முறுகல்: புரிந்துணர்வைப் பாதிக்கும் செயல்

### சமாதானத்துக்கான சமயங்களின் சபை தெரிவிப்பு

அம்பாறை,ஒக்.6

அண்மைக் காலமாக சமயங்களுக்கு இடையேயான சமாதானம், புரிந்துணர்வுகளைப் பாதிக்கும் வகையில் பல அசம்பாவிதங்கள் நடைபெற்று வருவது வேதனை அளிக்கின்றது என்று சமாதானத்துக்கான சமயங்களின் இலங்கைச் சபையின் அம்பாறை மாவட்டக் கிளை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் குறித்த சபை மேலும் தெரிவித்திருப்பதாவது:-

சில நாள்களுக்கு முன்னர் பங்களாதேஷில் பௌத்த சமயத் தலங்களும், குடியிருப்புகளும் எரியூட்டப்பட்டுள்ளன. இது பௌத்த இளைஞன் ஒருவர் பேஸ்புக்கில் எரிக்கப்பட்ட புனித குர்ஆனின் படத்தை காட்சிப்படுத்திய பின்னணியிலும் இறை தூதரை இழிவுபடுத்திய திரைப்படத்துக்கு எதிரான பின்னணியிலும் நடந்துள்ளது.

இந்த நிகழ்வுகளை எமது சபை கண்டிக்கின்றது. இந்தநிகழ்வுகள் மூலம் சமய உணர்வுகளைத் தூண்டி கலகம் ஏற்படுத்த விரும்பும் தீய சக்திகளின் வலையில் மக்கள் சிக்காது பொறுமை காத்து சமயங்களுக்கு இடையேயான ஒற்றுமையைப் பாதுகாக்க வேண்டும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## தமிழரின் அடிப்படை உரிமையை 'திவிநெகும' சட்ட வரைபு மீறாது

### மஹிந்தவின் ஆலோசகர் பிள்ளையான் சொல்கிறார்

மட்டக்களப்பு,ஒக்.6

தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளையும், அம்மக்களின் இருப்பையும் கேள்விக்குறியாக்குகின்ற ஒரு சட்டவரைவு 'திவிநெகும' அல்ல என்று கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும், ஜனாதிபதியின் ஆலோசகருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணசபையின் ஒப்புதலுக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட 'திவிநெகும' சட்ட வரைபு தொடர்பிலான விவாதத்தின்போது கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

[illegible] பிக்கப்பட்ட 'திவிநெகும' சட்டவரைவானது, முழுக்க முழுக்க அபிவிருத்தித் திட்டங்களை மேம்படுத்துவதற்கான ஒரு திட்டமே தவிர, 13ஆவது திருத்தச் சட்டத்தில் விதந்துரைக்கப்பட்டுள்ள அதிகாரங்களை மீளப்பெறுகின்ற அல்லது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தெரிவிப்பதைப் போன்று தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதிக்கின்ற ஒரு சட்ட வரைவு அல்ல. அதாவது இன்னும் ஆழமாகச் சொல்லப்போனால் கிராமிய மட்டத்திலான மனைப் பொருளாதாரத்தை உயர்த்தி அவர்களின் தனிநபர் வருமானங்களை [illegible]க்குவிப் [illegible] திட்டங்கள்




அதிலே உள்ளடக்கப்பட்டிருக்கின்றன.

சமுர்த்தி நலன் திட்டத்தின் வாயிலாகப் பயன்பெறுகின்ற சுமார் 27 ஆயிரம் பேருக்கு கூடுதலானோர் இதனால் அதிகம் பயனடைகின்றார்கள். அதிலும் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் சமுர்த்தி அதிகார சபையானது திணைக்களமாக மாறுகின்ற பட்சத்தில் சுயகௌரவம் மிக்க ஓர் அரச அலுவலர்போல் அவர்களும் திகழ்வார்கள். இதனால் அவர்களுக்கான சம்பள உயர்வு, பதவி உயர்வு மற்றும் படிகள் மேலதிகக் கொடுப்பனவுகளும் வழங்குவதற்கு ஏற்பாடாகும்.

சிறுபான்மை மக்களின் உரிமைகளையோ அல்லது அவர்களது அபிலாஷைகளையோ இல்லாது செய்கின்ற எந்த சரத்துகளும் திவிநெகும சட்டவரைவில் இல்லை. எனவே, இது உண்மையில் ஆதரிக்கவேண்டிய ஒரு சட்ட வரைவுதான் - என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்ணுலக வாழ்விற்காக விடைகொடுத்து 31 நாள்கள்



அமரர் உயர்திரு.

## சின்னத்தம்பி தர்மராஜன்

(ஓய்வுபெற்ற அஞ்சல் அத்தியட்சகர், யாழ்ப்பாணம்)

மண்ணுலகை சேவைக்காய்
29.12.1939

விண்ணுலகை வாழ்வுக்காய்
06.09.2012

“ தோன்றிற் புகழொடு தோன்றுக – அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று”

அன்பின் இலக்கணமாய்
பாசத்தின் இருப்பிடமாய்
பண்பின் உறைவிடமாய்
பணியின் அணிகலனாய்
வாழ்ந்த அப்பாவே!

தனக்கென வாழாப்
பிறர்க்கென வாழ்ந்து
வாழ்நாள் முழுவதும்
மற்றவர்களுக்கு அர்ப்பணித்து
வாழ்ந்த அப்பாவே!
உங்கள் பிரிவு எங்களுக்கு தீராத
துயரளித்தாலும்
விண்ணுலகில் இருந்து எம்மையெல்லாம்
வாழ்த்தி வழிநடத்துவீர்கள் என்ற
நம்பிக்கையுடன் விண்ணுலக வாழ்வுக்காய்
தங்களுக்கு விடையளிக்கின்றோம்.

கடந்த 06.09.2012 எம்மை விட்டுப் பிரிந்த எமது குடும்பத்தின் கலங்கரை விளக்காகத் திகழ்ந்த அமரர் உயர்திரு. சின்னத்தம்பி தர்மராஜனின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் வந்து துயர் பகிர்ந்தோர், மலர்வளையம் சார்த்தி அஞ்சலி செய்தோர், அஞ்சலிப் பிரசுரங்களை வெளியிட்டோர், தொலைபேசி, தந்தி, திருமுகங்கள் ஊடாக ஆறுதல் கூறியோர் ஆகியோரை நன்றியுடன் நினைவு கூர்வதோடு இன்று (06.10.2012) சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் இடம்பெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தனிப்பட்ட அழைப்புக் கிடைக்கப்பெறாதோர் இவ்வழைப்பைத் தயவு செய்து ஏற்று இந்நிகழ்வில் கலந்துகொள்ளவும்

“பாக்கியவிலா”
கோயில் வீதி, கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் 67 ஆவது மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்றிருக்கும் இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ-மூனைச் சந்தித்த போது...

# தீர்வு கிடைத்த பின்பே விடைத்தாள் மதிப்பீடு

## ஆசிரியர் சங்கத் தலைவர் அறிவிப்பு

கொழும்பு,ஒக்.6

உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகளில் பங்கேற்கப் போவதில்லை என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

பல்கலைக்கழக பேராசிரியர்களின் தொழிற்சங்கப் போராட்டம் தொடர்பில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கொழும்பு தேசிய நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பல்கலைக்கழகப் பேராசிரியர்களின் தொழிற்சங்கப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும்வரை விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போவதில்லை.

ஒரு சில பாடங்களுக்கு மட்டும் விடைத்தாள் மதிப்பீடு செய்வதை ஏற்றுக் கொள்ள முடியாது. சகல பாடங்களுக்குமான விடைத்தாள் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

விடைத்தாள் மதிப்பீடுகளில் ஈடுபடுவதாக ஒரு சில பேராசிரியர்கள் அறிவித்துள்ளனர். எனினும், முழுமையான அளவில் விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.- என்றார்.

பல்கலைக்கழக பேராசிரியர் சங்கத்தின் துணைத் தலைவர் தம்பர அமிலதேரர் தெரிவித்ததாவது:-

2011 ஆம் ஆண்டில் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் 2013 ஆம் ஆண்டு ஜூன் மாத மளவிலேயே பல்கலைக் கழக அனுமதியை பெற்றுக் கொள்வர்.

தொழிற்சங்கப் போராட்டம் நீடித்தால் இது மேலும் காலதாமதமாகக் கூடும். புதிதாக மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு முன்பு, இறுதியாண்டு மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளைப் பூர்த்திசெய்ய வேண்டும்.



பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டிருக்கும் காலத்துக்கு சமமான காலம் கல்வி நடவடிக்கைகள் தொடரப்பட வேண்டும்.

கோரிக்கைகளுக்காக அர்ப்பணிப்புடன் போராடப்படும். அதற்காக உயிரையும் தியாகம் செய்யத் தயார்.- என்றார். (ச)

# அமைச்சர் பஸிலுடன் இன்று விரிவுரையாளர்கள் சந்திப்பு

கொழும்பு,ஒக்.6

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தொழிற்சங்க சம்மேளனப் பிரதிநிதிகள் இன்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவை சந்திக்கவுள்ளனர் என்று பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தொழிற்சங்க சம்மேளன ஊடகப் பேச்சாளர் மஹிம் மெண்டிஸ் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை உயர்கல்வி அமைச்சுடன் சந்திப்பு இடம் பெறும் என்று தகவல்கள் வெளியானபோதும் தமக்கு அறிவிக்கப்படவில்லை என்று அவர் மேலும் கூறினார்.

# அர்த்தமுள்ள பேச்சில் ஈடுபட்டால் வேலை நிறுத்தம் கைவிடப்படும்

## பல்கலை ஆசிரியர் சங்க சம்மேளனம் அறிவிப்பு

கொழும்பு,ஒக்.6

அரசு அர்த்தமுள்ள பேச்சில் ஈடுபடுமாயின் தற்போது நடைபெறும் வேலை நிறுத்தத்தை மூன்று நாள்களில் விலக்கிக்கொள்ள தயாராக இருப்பதாக பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் அறிவித்திருக்கிறது.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை பல்கலைக் கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனத்துடன் அரசு பேச்சு நடத்தவுள்ளதாகக் கூறப்பட்டபோதும் அவ்வாறு பேச்சு நடக்கவில்லை என்று குறித்த சம்மேளனத்தின் தலைவர் தேவசிறி தெரிவித்தார்.

இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உதவ பல பழைய மாணவர் சங்கங்களும், வர்த்தகப் பிரமுகர்களும் முன்வந்துள்ளனர்.

மகாநாயக்கர்கள் மத்தியஸ்தம் வகித்தும் சிறந்த ஆலோசனைகளை வழங்கியும் கணிசமான பங்களிப்பைச் செய்துள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

### கிருமிநாசினிகளின் தாக்கம் சிறுநீரக நோயால் பலர் பாதிப்பு

கொழும்பு,ஒக்.6

இலங்கையில் விவசாய நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படும் கிருமிநாசினிகள் காரணமாக பலர் சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

விவசாய நடவடிக்கைகளுக்கு பூச்சிகொல்லிகள் மற்றும் உரங்கள் பயன்படுத்துவதைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர உலக சுகாதார மையம் நடவடிக்கை எடுத்துள்ளது. (ச)

# வறட்சிப் பாதிப்பை ஆராய அமைச்சரவை உப குழு

கொழும்பு,ஒக்.6

வறட்சியால் பாதிக்கப்பட்ட இடங்கள் தொடர்பாக ஆராய்வதற்காக நீர்ப்பாசன மற்றும் நீர்முகாமைத்துவ அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தலைமையில் அமைச்சரவை உப குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது நிலவும் கடும் வறட்சி தொடர்பாக ஆராய்வதற்கே இந்த அமைச்சரவை உப குழு நியமிக்கப்பட்டுள் ளது.

அமைச்சருக்கு உதவி வழங்க உத்தியோகத்தர்கள் குழுவொன்றை நியமித்து மக்களின் அன்றாட வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் தொடர்பாக அமைச்சரவைக்கு பரிந்துரைகளை அமைச்சரவை உப குழு வழங்கும்.

தற்போது ஏற்பட்டுள்ள வறட்சி நிலை தொடர்ந்தும் இருக்கும் என்று அறிகுறிகள் தென்படுவதால் வறட்சிக்கு எவ்வாறு முகம் கொடுப்பது என்று அமைச்சரவை கவனத்தில் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# தங்க பிஸ்கட்டுகளை கடத்த முயன்றவர் கைது

சட்டவிரோதமாக தங்க பிஸ்கட்டுகளை சென்னைக்குக் கொண்டுசெல்ல முயற்சித்த ஒருவர் கட்டுநாயக்க விமான நிலைய சுங்கப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் சூட்சுமமான முறையில் நான்கு தங்க பிஸ்கட்டுகளை உடலுக்குள் மறைத்து வைத்திருந்ததாக விமான நிலைய சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

கைப்பற்றப்பட்ட தங்கம் 35 லட்சம் ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியைக் கொண்டுள்ளது என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. பறிமுதல் செய்யப்பட்ட தங்க பிஸ்கட்டுகள் அரசுடைமையாக்கப்பட்டுள்ளன.

சந்தேகநபர் அக்குறணைப் பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். (ச)

# அரசுக்கு எதிராக விரைவில் ஐக்கிய கூட்டணிக் கட்சி

## சரத் பொன்சேகா கூறுகிறார்

கொழும்பு,ஒக்.6

அரசுக்கு எதிராக மிக விரைவில் ஒன்றுபட்ட ஐக்கிய எதிர்க் கூட்டணி ஒன்று உருவாக்கப்படும் என்று முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்தார்.

இந்த கூட்டணிக் கட்சியின் தொடக்கப் பேரணி எதிர்வரும் 18 ஆம் திகதி கொழும்பில் இடம்பெறும் என்று அவர் குறிப்பிட்டார். ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான பாலித்த ரங்கே பண்டார, பாலித்த தேவப்பெரும, தயாசிறி ஜயசேகர, மாகாணசபை உறுப்பினர் சிறிலால் லக்திலக்க மற்றும் மைத்திரி குணரத்ன ஆகியோர் இந்தக் கூட்டணியில் இணைந்துள்ளனர் என்று அவர் தெரிவித்தார். (ச)

### வெளிநாட்டு நாணயத்தாள்களுடன் இருவர் கைது

வெளிநாட்டு நாணயத் தாள்களை சட்டவிரோதமாக எடுத்துச் செல்ல முயற்சித்த இருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் நேற்று வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து சுமார் 16 லட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு நாணயத்தாள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று விமான நிலைய சுங்கப் பிரிவு தெரிவித்துள்ளது. கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களிடம் அதிகாரிகள் விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

### சந்திரசேன பிரதி அமைச்சராக பதவியேற்பு

முன்னாள் அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன வன ஜீவராசிகள் மற்றும் கமநல சேவைகள் பிரதி அமைச்சராக பதவிப் பிரமாணம் செய்து கொண்டுள்ளார்.

ஜீவராசிகள் மற்றும் கமநலசேவைகள் அமைச்சராக இருந்த அவர் கடந்த வட மத்திய மாகாண சபைத் தேர்தல் முடிவின்பின்தனது பதவியை [illegible] (ச)

# கூடங்குளம் அணு உலை பற்றி ஆராய இலங்கைக் குழு அடுத்த வாரம் டில்லிக்கு

## புரிந்துணர்வு ஒப்பந்தம் குறித்தும் ஆராயப்படும் என்கிறார் சம்பிக்க

கொழும்பு,ஒக்.6

கூடங்குளம் அணு உலையினால் இலங்கைக்கு ஏற்படும் பாதிப்புகளைத் தடுப்பது குறித்து இலங்கை மற்றும் இந்திய அணுசக்தி அதிகாரசபை அதிகாரிகளுக்கு இடையில் நடைபெறும் முதலாவது கூட்டம் எதிர்வரும் 12 ஆம் திகதி இந்தியாவில் நடைபெறவுள்ளது என்று மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

இலங்கையில் இருந்து ஆறுபேர் உள்ளடங்கிய குழுவொன்று அங்கு செல்லவுள்ளதோடு, கூடங்குளம் தொடர்பில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடுவது குறித்தும் இங்கு ஆராயப்பட உள்ளது என்று அவர் கூறினார்.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கூடங்குளம் அணு உலை தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டது. இதற்குப் பதிலளித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

> கூடங்குளம் அணு உலையினால் இலங்கைக்கு பாதிப்பு ஏற்படும் பட்சத்தில் இலங்கை மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியது எமது பொறுப்பாகும்.



அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

### அணுக்கசிவு ஏற்பட்டால் யாழ்.குடா பாதிக்கப்படும்

கூடங்குளம் அணு உலையினால் இலங்கைக்கு பாதிப்பு ஏற்படும் பட்சத்தில் இலங்கை மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியது எமது பொறுப்பாகும். சுற்றியுள்ள நாடுகளின் பாதுகாப்பைப் பலப்படுத்த இந்தியா நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த அணு உலையினூடாக அணுக்கசிவு ஏற்பட்டால், அதனால் மன்னார், யாழ்குடா ஆகிய பகுதிகளுக்கு பாதிப்பு ஏற்படும்.

எனவே, சர்வதேச அணுசக்தி உடன்பாட்டின் பிரகாரம் இந்தியா செயற்பட வேண்டும். இது தொடர்பில் குறித்த சந்திப்பில் ஆராயப்படும்.

அணுக்கசிவு நிகழும் பட்சத்தில், அதனால் ஏற்படும் பாதிப்புகளைத் தடுக்க இடர் முகாமைத்துவ நிலையத்துடன் இணைந்து முன்னேற்பாடு மேற்கொள்ளப்பட்டு வருகிறது- என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தருவது வித்தியா
# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேஷம்:** உங்கள் நண்பர்கள் சிலரின் பேச்சும், செயலும் தொந்தரவை உருவாக்கும். அவர்களிடம் நிதானமாக நடந்து கொள்வதால் அவப்பெயர் வராமல் தவிர்க்கலாம். தொழில் வியாபாரம் வளர்ச்சி பெற அதிக அக்கறையுடன் பணிபுரிவீர்கள். பணவரவை விட செலவு கூடும்.

**இடபம்:** உங்கள் நண்பரிடம் சொந்த விஷயம் பேசுவீர்கள். வாழ்வில் முன்னேறத் தடையாக உள்ள சூழ்நிலையைச் சரி செய்ய புதிய வழி பிறக்கும். தொழில், வியாபாரம் சிறக்க அதிக அக்கறை யுடன் பணிபுரிவீர்கள். இயன்ற அளவில் அறப் பணி செய்வீர்கள். எதிர்பார்த்த சுப செய்தி வந்து சேரும்.

**மிதுனம்:** உங்களிடம் தாழ்வு மனப்பான்மை ஏற்படலாம். வேண்டாத நபரை முக்கிய வேளைங்களில் சந்திக்கச் சூழ்நிலை உருவாகும். தொழிலில் உரிய கவனம் செலுத்தத் தேவையான சூழ்நிலையை உருவாக்குவீர்கள். அளவான பணவரவு கிடைக்கும். நம்பகத்தன்மை குறைவான எவருக்கும் சிபாரிசு செய்யக்கூடாது. வாகனப் பராமரிப்புச் செலவு ஏற்படலாம்.

**கடகம்:** உங்களின் எதிர்கால வாழ்க்கையை எப்படி உருவாக்குவது என்று யோசிப்பீர்கள். நண்பரின் வழிகாட்டுதல் புதிய நம்பிக்கையை ஏற்படுத்தும். தொழில் வியாபாரம் சிறக்க புதிய யுக்தியைப் பின்பற்றுவீர்கள். குடும்ப உறுப்பினர்களின் முக்கிய தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். மகிழ்ச்சி எண்ணம் செயல்களுக்கு புதிய உத்வேகம்

**சிங்கம்:** உங்களுக்கு அனுசரணையாகச் செயல்படுபவர்களின் உதவி எளிதில் கிடைக்கும். திட்டமிட்ட செயல் அத்தனையும் சிறப்பாக நிறைவேறும். தொழில் வியாபாரத் தொடர்பு பலம் பெறும். கூடுதல் லாப விகிதம் கிடைக்கும். குடும்பத்தில் மங்கள நிகழ்வு ஏற்படும்.

**கன்னி:** உங்கள் பணியில் நிதானமும், விவேகமும் அதிகம் கடைப்பிடிப்பது அவசியம். திட்டமிட்ட செயல் நிறைவேற கூடுதல் அவகாசம் தேவைப்படும். தொழில் நிலை சராசரிஅளவில் இருக்கும். முக்கிய பணத்தேவைகளை ஓரளவு சரி செய்வீர்கள். எதிர்பார்த்த செய்தி வர தாமதம் ஆகும்.

**நாளை**

புரட்டாதி - 21 ஞாயிற்றுக்கிழமை 07.10.2012
திதி: ஸப்தமி மு.இ 09.07 வரை
நட்சத்திரம்: மிருகசிரிடம்காலை 06.07
சுபநேரம்: 09.02- 10.32 வரை
ராகுகாலம்: 04.32- 06.02 வரை

**துலாம்:** உங்கள் செயல்களில் மாறுபட்ட தன்மை ஏற்படலாம். நம்பகமானவர்களிடம் கூட பேசுவதில் தயக்கம் இருக்கும். தொழில், வியாபாரத்தில் உருவாகிற குறைகளைச் சரி செய்வதில் கூடுதல் நேரம் செலவாகும். பணவரவுக்கு மீறிய புதிய செலவினம் ஏற்படும்.

**விருச்சிகம்:** உங்கள் செயல்களில் கூடுதல் பரிமளிப்பு ஏற்படும். நிறைவேற வேண்டிய பணிகளை நினைவு படுத்தி பூர்த்தி செய்வீர்கள். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சி அதிகரிக்கும். பணப்பரிவர்த்தனையில் திருப்திகரமான அளவில் முன்னேற்றம் உண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். விரும்பிய உணவு வகை உண்டு மகிழ்வீர்கள்.

**தனுசு:** உங்கள் வாழ்வு நலம் சிறக்க வழிகாட்டுபவர்களின் அன்பு, ஆசி கிடைக்கும். தொழில் சிறக்க உத்வேகமுடன் பணிபுரிவீர்கள். நீண்ட நாள் தீர்வு பெறாத ஒரு விஷயம் நன்மையைப் பெற்றுத்தரும். உடல்நலமும், மனவளமும் பலம் பெறும். ஆன்மிக சுற்றுலா சென்று வரத் திட்டமிடுவீர்கள்.

**மகரம்:** உங்களைச் சுற்றி நடக்கும் செயல்களை உணர்ந்து பேசுவது நல்லது. திட்டமிட்ட பணியை நிறைவேற்றுவதில் தாமதம் இருக்கும். தொழில் வியாபாரம் கூடுதல் உழைப்பால் சராசரி நிலையை எட்டும். குறைந்த அளவில் கிடைக்கிற பணவரவை முக்கிய செலவுகளுக்குப் மட்டும் பயன்படுத்துவீர்கள். குடும்ப உறுப்பினர்கள் பாசத்துடன் நடந்து கொள்வர்.

**கும்பம்:** உங்கள் நண்பர்களில் சிலர் எதிர்பார்ப்பு மனதுடன் செயல்படுவர். இயன்ற அளவில் அவர்களுக்குத் தேவையானவற்றை உதவிபுரிவீர்கள். தொழில் வளர கூடுதல் பணி புரிவது அவசியம். குறைந்த அளவில் பணவரவு இருக்கும். சேமிப்புப் பணம் செலவுக்குப் பயன்படும்.

**மீனம்:** உங்கள் பேச்சில் கலகலப்பு நிறைந்திருக்கும். சமூகத்தின் பார்வையில் கூடுதல் அந்தஸ்துக் கிடைக்கும். சுயமுயற்சியினால் தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெறுவீர்கள். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். அழகு சாதனப் பொருள்களை விரும்பிப் பயன்படுத்துவீர்கள்.

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 5 | | 4 | 7 | 6 | | 2 | |
| | | 3 | 5 | | | 6 | | |
| | | | | 9 | | | 8 | |
| 4 | 2 | | 7 | 5 | | 3 | 9 | |
| 7 | | | | 1 | | | | 8 |
| | 3 | 6 | | 4 | 9 | | 5 | 7 |
| | 1 | | | 6 | | | | |
| | | 9 | | | 7 | 5 | | |
| | 6 | | 9 | 3 | 4 | | 1 | |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 5 | 3 | 1 | 7 | 9 | 4 | 2 | 8 |
| 9 | 1 | 2 | 4 | 8 | 6 | 7 | 5 | 3 |
| 4 | 7 | 8 | 2 | 3 | 5 | 6 | 9 | 1 |
| 5 | 4 | 9 | 8 | 6 | 3 | 1 | 7 | 2 |
| 3 | 6 | 1 | 7 | 2 | 4 | 5 | 8 | 9 |
| 2 | 8 | 7 | 5 | 9 | 1 | 3 | 6 | 4 |
| 8 | 9 | 6 | 3 | 1 | 7 | 2 | 4 | 5 |
| 1 | 2 | 5 | 6 | 4 | 8 | 9 | 3 | 7 |
| 7 | 3 | 4 | 9 | 5 | 2 | 8 | 1 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1—9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1—9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1—9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


**விற்பனைக்கு**

கடைக்கு தேவையான அலுமாரிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம். **077 923 5858** (23776)(5-6-7)


# இலவச சிகிச்சை முகாம்

யாழ்ப்பாணம்,ஒக.6

இலங்கை வங்கி சுன்னாகம் மேற்தரக் கிளை விளையாட்டுக்கழகம், மானிப்பாய் லயன்ஸ் கழகத்துடன் இணைந்து நடத்தும் நீரிழிவு, டெங்கு பற்றிய விழிப்புணர்வும், இலவச சிகிச்சை முகாமும் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு மத்தாளோடை, புன்னாலைக் கட்டுவன் தெற்கு பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மத்தாளோடை, பூலசிட்டி ஆகிய பிரதேச மக்கள் இடையேயும், வறுமை ஒழிப்புக்கான சிறு கடன் பயனாளிகளுக்கு இடையேயும் சுகாதார விழிப்புணர்வு ஏற்படுத்தும் முகமாகவே இந்த சிகிச்சை முகாம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சிகிச்சை முகாமில் மக்கள் கலந்துகொண்டு பயன்பெறுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (3)









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




5 மாவட்டங்களிலும்பெரும் பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

## ஆசிரியர் கௌரவிப்பு

தென்மராட்சி, ஒக்.6

ஆசிரியர் தினத்தை முன்னிட்டு தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் நேற்று ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

காலையில் பாடசாலைகளுக்கு வருகை தந்த மாணவர்களாலும் பெற்றோராலும் வாசலில் வைத்து ஆசிரியர்கள் மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்று அழைத்துச் செல்லப்பட்டனர். (ம-9)

# ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள்

யாழ்ப்பாணம், ஒக்.6

அண்மையில் வெளியான ஐந்தாம்தர புலமைப் பரிசில் பரீட்சைப்பெறுபேறுகள் வருமாறு:-

**சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை**

சுப்பிரமணியம் லோஜிதன்-184, புனிதநாதன் வைசாலி-180, ஜெயகணேசன் ஜெயமிதுரா-175, சியாம்சுந்தர் நிவேதா-169, பரமநாதன் செந்தூரி-167, ரட்ணபேன் சதுஸ்ணவி-167, சுந்தரலிங்கம் குகபரன்-164, சிவராஜா காதம்பவி-164, பாலசிங்கம் பானுஜா-163, சந்திரசேகரம் பிரின்ஸிகா-162, உதயகுணசிங்கம் வினோஜன்-160, சற்குணராஜா சுபாங்கி-160, முகுந்தன் தர்மியா-159, சத்தியானந்தன் லதுஷிகன்-158, ஜீவா சினேகா-152, கமலேஸ்வரன் டிலக்ஸ்ணவி-151, உசானந்தன் ஜசிந்தன்-149, முருகானந்தம் அபிஷேக்-149.

**சாவகச்சேரி மகளிர் கல்லூரி**

மனோரஞ்சிதன் கோபிதன்-188, சிவரஞ்சன் அபிஷன்-179, நடராஜா சரண்யா-17, உருத்திரமூர்த்தி மிதுலா-165, ஸ்ரீகந்தராஜா ஆதிரை-162, கமலநாதன் தனஞ்சயன்-161, பிரபாகரன் துஷாந்த்-156, அன்பரசன் கபிலன்-150, சுகந்தன் ஜெசீபன்-148.

**வரணி ம.வி**

பாலேந்திரன் சிந்துஜன்-178, நந்தகுமார் ஜருஷா-155, யசோம்சன் கிரியா-148.

**மீசாலை வீரசிங்கம் ம.வி**

சாய்பவான் துலாஞ்சலி-172, சிவசோதிலிங்கம் டிலக்ஸனா-171, சொக்கலிங்கம் சுலக்ஸிகா-171, சுஜிந்தன் சங்கீதன்-163, சிவகணநாதன் சிவநயா-160, பேரின்பநாதன் மதுஷிகா-156, நாகராஜா லக்சினி-154.

**கொடிகாமம் திருநாவுக்கரசு ஆரம்ப பாடசாலை**

உதயகரன் சிந்துஜன்-171.

**மட்டுவில் தெற்கு சாந்தநாயகி வித்தியாலயம்**

சிவபாலன் திலக்ஸன்-169, பாலமுரளி கிருஷ்ணன் சந்துஜன்-149

**மட்டுவில் கமலாசனி வித்தியாலயம்**

ராஜேஸ்வரன் அபிராமி-166, விக்னேஸ்வரன் கம்சாஜினி-159, ராஜகுமார் சினேகா-148,

**கைதடி முத்துக்குமாரசாமி ம.வி**

பாலசிங்கம் சங்கவி-156, மனோகரன் கஜவதனன்-154, ரகுநாதன் தலைநிலவன்- 149, தயானேஸ்வரன் கபிலஷா-148,

**கச்சாய் அ.த.க. பாடசாலை**

இராஜேந்திரன் பிரணவி-162, ரொஷான் ரேணுஜன்-155, ஜமகேந்திரன் கஜனி-149, புஷ்பநேசன் பவிதன்-148,

**கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலை**

மயூரன் ஆரணி- 164, சுபாஸ்கரன் அன்சிகன்-159.

**உசன் இராமநாதன் ம.வி**

கணேசபதி செந்தாளன்-167, மதுராகரன் திருவரங்கன்-156,

**மட்டுவில் சந்திர மௌலீச வித்தி**

பாலகுமார் பிரியங்கா-152, மயில்வாகனம் மதுஷியா-151, சச்சிதானந்தம் சுவர்ணா-151.

**மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி**

பத்மநாதன் சுகுணதாஸ்-168,

**மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தி**

பத்மகாந்தன் சுகிர்தா-162.

**சாவகச்சேரி றோ.க.த.க. பாடசாலை**

மரிய அன்ரனி மரிய யூட் நிக்ஸன்-161.

**கைதடி சேதுகாவலர் வித்தி**

அரிச்சந்திரன் அபிஷாந்-160

**கைதடி குருசாமி வித்தி**

கந்தசாமி பரணிதரன் -158

**மட்டுவில் தெற்கு அ.மி.த.க பாடசாலை**

ரவீந்திரன் மதுஷனா-158

**சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி**

தனலிங்கம் ஜெவிட்சன்-157

**மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தி**

ஜெகநாதன் ஜெகதீஸ்வரன்-157.

**இயற்றாலை அ.மி.த.க. பாடசாலை**

இராஜரத்தினம் நிதர்சன்-156. (3-9)

## சிறுவர் முதியோர்தின நிகழ்வுகள்



நல்லூர் பிரதேச செயலக சர்வதேச சிறுவர் முதியோர் தினம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நல்லூர் பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராகத் தாய்சேய் நல வைத்திய அதிகாரி திருமகள் சிவசங்கர் மற்றும் யாழ். பல்கலைக்கழக மக்கள் வங்கி முகாமையாளர் எஸ். சத்தியமூர்த்தி, கோட்டக் கல்விப் பணிப்பாளர் வி.மாணிக்கராஜா, வடபிராந்திய போக்குவரத்துச் சங்க ஒன்றியத் தலைவர் பொ.கெங்காதரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

சிறுவர்முதியோர்தினத்தையொட்டி பிரதேச செயலகத்தால் நடத்தப்பட்ட கவிதை மற்றும் கட்டுரைகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்களை நல்லூர் பிரதேச உதவிச் செயலாளர் திருமதி சுபாஜினி மதியழகன், பிரதேச செயலர் செந்தில்நந்தனன் ஆகியோர் வழங்கிக் கௌரவித்தனர். நிகழ்வில் சிறுவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (3-7)

*

யாழ்ப்பாணம் , ஒக்.6

நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவின் சர்வதேச சிறுவர் முதியோர் தினவிழா நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு நெடுந்தீவு பிரதேச செயலர் ஆ.சிறி தலைமையில் தேவா கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின், கௌரவ விருந்தினராக நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் தானியல் றெக்சியன், கோட்டக் கல்விப் பணிப்பாளர் க.அரசரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டனர். இதன்போது கலை நிகழ்வுகள், கௌரவிப்பு என்பனவும் இடம்பெற்றன. (ம-7)

## மந்துவிலில் நாளை நீரிழிவு மருத்துவ முகாம்

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை நீரிழிவு நிலையத்தினர் பிரதேசத்தில் நீரிழிவு நோயாளர்களை இனங்காணும் வகையில்இல வசமருத்துவப் பரிசோதனை முகாம்களை நடத்தவுள்ளனர். இதன் அங்கமாக மந்துவில் பிரதேச மக்களுக்கான இலவச மருத்துவமுகாமை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை7 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயத்தில் நடத்தவுள்ளனர்.

வைத்திய சாலை பொது வைத்தியநிபுணர், வைத்திய அதிகாரிகள் கலந்துகொள்ளவுள்ளதால் பிரதேச மக்களைசிகிச்சை முகாமில்கலந்து பயன்பெறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (3)

யா/பன்னாலை சேர் கனகசபை வித்தியாலயத்தின் தலைமைத்துவத்தைப் பாராட்டி ஆசிரியர் தினத்தில்
வாழ்த்துகின்றோம்
Best Wishes



திரு.சிதம்பரப்பிள்ளை சிவராஜன் - அதிபர்
Dip in Agri (Kundasale), Dip in Agri (J.C.A.I) Sp.Tr.Primary Edu, Counsellor Kalavithagar - Drama, Asst Scout District Commissioner K.K.S.
எமது வித்தியாலயத்தின் முதல்வராகக் கடமையாற்றிவரும் திரு.சிதம்பரப்பிள்ளை சிவராஜன் அவர்கள் வலிகாமம் கல்வி வலயத்தின் அதிபர் தெரிவில் முதலாம் இடம் பெற்று சிறந்த அதிபராகக் கணிக்கப்பட்டு (09.10.2012 ஆம் திகதி ஜனாதிபதி விருதுக்குத் தெரிவு செய்யப்பட்டு விருது பெற உள்ளமையை ப் பாராட்டுகின்றோம்.
அதிபர் அவர்கள் மேலும் பல உயர்வுகளைப் பெற்று நற்சேவையாற்ற வாழ்த்துகின்றோம்.
Best Wishes
உப அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்,
பாடசாலை அபிவிருத்திக் குழு.
யா/பன்னாலை
சேர் கனகசபை வீதி,
தெல்லிப்பழை. (23773) (2-6-7)

மனமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்




செல்வி யசோதிகா கருணாகரன்
ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த யா/கரணவாய் வேதாரணியேஸ்வர வித்தியாலய மாணவியும் திரு. திருமதி கருணாகரன் - செல்வமலர் தம்பதியரின் கனிஷ்ட புத்திரியுமாகிய செல்வி யசோதிகா கருணாகரன் எதிர் காலத்திலும் சிறப்பான பெறுபேறுகள் பெற்று உயர்ச்சியடைய மனமார வாழ்த்துகிறோம்.
இவருடன் சித்தியடைந்த சக மாணவிகளான சி.கானநிலா. வி.புஸ்பதா. ஸ்ரீ.லோகாசினி ஆகியோரை வாழ்த்துவதுடன் இவர்களுக்குச் சிறந்த முறையில் ஊக்கமுடன் கல்வி கற்பித்த ஆசிரியர்கள்,அதிபர், அனைவரையும் இன்றைய ஆசிரியர் தினத்தில் மனமுவந்து வாழ்த்துகிறோம்.
கிதுசனா(அக்கா),
இராசகோபால்
மங்களாம்பிகை குடும்பத்தினர்.
பெரியதோட்டம்
கரவெட்டி மத்தி, கரவெட்டி.

மின்சாரம் இல்லையா? மின்வெட்டினால் தொழில் பாதிப்படைகின்றதா?
24 மணிநேரமும் சூரிய ஒளியில் இருந்து இலவசமாக மின்சாரத்தை பெற்றுக்கொள்ளலாம்.




5W முதல் 200 W வரை
12 Am 200 Am
100 w முதல் 2000 w வரை
இதில் இருந்து பெறப்படும் மின்சாரத்தில்
மின்குமிழ் Dise Antenna ரெலிவிசன்
அயன் பொக்ஸ் வோசிங் மெசின் ஏயர் கொண்டிசன்
தெருவிளக்கு குளிர்சாதனம் Computer என்பன பயன் படுத்தலாம்
சகல மின் இணைப்புக்களும், திருத்த வேலைகள் வந்து செய்துகொடுக்கப்படும்
விபரங்களுக்கு
SRI RAM ELECTRONICS
No. 105, ஸ்ரான்லி வீதி,
(மக்கள் வங்கி அருகில் யாழ்ப்பாணம்)
தொ.பே. 077 6048 646
NEW ASIAN CENTER
56/15, ஸ்ரான்லி வீதி,
(சம்பத் வங்கி அருகில்),யாழ்ப்பாணம்.
071 8561 654, 077 8249 949
எமது நிறுவனத்தில்



பொருத்துதல்
திருத்த வேலைகள் யாவும் செய்து கொடுக்கப்படும்.
திருத்திக்கொடுக்கப்படும் எம்மிடம்
Digital Camera பற்றிகள்,Charger,Memory Card விற்பனைக்குண்டு. 077 6510 134
(சி/3849)(45.6.7)

அக மகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்



திரு.சம்பந்த சரணாலயம் சிவநேஸ்வரன்
(SLPS -I-B. com (Hons),Dip in Edu, PGDE, M. Ed.




திருமதி சூரியகுமாரி ஜெயவீரசிங்கம்
(SLPS -I-B.A,Dip in Edu (Merit), M. Phil (Ed), SLEAS-III)
இலங்கை கல்வி நிர்வாக சேவை வகுப்பு III இற்கு(SLEAS- III) பதவி உயர்வு பெற்ற எம் சிரேஷ்ட அதிபர்களை வாழ்த்துவதுடன் மேலும் பல கீர்த்திகள் பெற்று பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றோம்.
கோட்டக் கல்விப் பணிப்பாளர்,
அதிபர்கள், ஆசிரியர்கள், கோட்ட அலுவலர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விடும் காணியும் விற்பனைக்கு**

நல்லூர் முருகன் ஆலயத்திற்கு அண்மையில் பண்டாரக்குள ஒழுங்கையில் 3½ பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்குண்டு.
தொ.பே.: 077 601 6357




## பிரதியமைச்சரின் சாரதிக்கு எதிராக சட்ட நடவடிக்கை

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் வேகக்கட்டுப்பாட்டை மீறி வாகனம் செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் பிரதியமைச்சர் துலிப் விஜேசேகரவின் சாரதிக்கு எதிராக வழக்குத் தாக்கல்செய்யவுள்ளதாகப் பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

அமைச்சர் பயணித்த இந்த வாகனம் அதிக வேகத்தில் சென்றபோது, பொலிஸார் வாகனத்தை நிறுத்தி நடவடிக்கை எடுக்கமுற்பட்டபோது, பிரதியமைச்சர் 1,500 ரூபாவை பொலிஸார் மீது வீசியதுடன், வாகனத்தை விடுவிக்குமாறும் வலியுறுத்தியுள்ளார்.

தான் விரைவாகச் செல்லவேண்டியிருந்ததாக பொலிஸாருக்குப் பிரதியமைச்சர் துலிப் விஜேசேகர கூறியுள்ளார். இருப்பினும் கடமையிலிருக்கும் பொலிஸார் சில விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டுமென பொலிஸார் கூறினர். இதனையடுத்துப் பொலிஸாருக்கும் பிரதியமைச்சருக்குமிடையில் வாக்குவாதம் இடம்பெற்றது. வீடியோ பதிவின்படி வாக்குவாதத்தின்போது தாக்குதலோ, அச்சுறுத்தலோ இடம்பெறவில்லையெனவும் பொலிஸ் பேச்சாளர் குறிப்பிட்டார். (த)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



உயர்திரு
பாலகிருஷ்ணன்
இரகுநாதன் (SLPS -I)
இளைப்பாறிய கோட்டக் கல்வி அதிகாரி

02.10.2012 இல் அலரிமாளிகையில் அதிமேதகு ஜனாதிபதி அவர்களிடமிருந்து திறமை சேவைமுப்பின் அடிப்படையில் இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III இற்கான பதவி உயர்வினைப் பெற்றுக் கொண்டமையை மகிழ்ச்சியுடன் பாராட்டி வாழ்த்துவதில் பெருமிதம் அடைகின்றோம்

**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்**
யா/ வட இந்து ஆரம்பப் பாடசாலை, பருத்தித்துறை.
(23630)(2-6-7)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்


தி.ஜோண் குயின்ரஸ்
வலயக் கல்விப் பணிப்பாளர்.


பொ.அருணகிரிநாதன்
இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III


ச.பாஸ்கரன்
இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III

24.09.2012 தொடக்கம் எமது வலயக் கல்விப் பணிப்பாளராக பதவியுயர்வு பெற்ற தி.ஜோண் குயின்ரஸ் அவர்களை வருக வருகவென வரவேற்பதுடன் 02.10.2012 முதல் இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III இற்கு பதவியுயர்வு பெற்ற பொ.அருணகிரிநாதன், ச.பாஸ்கரன் ஆகியோரை அகமகிழ்ந்து பாராட்டுவதுடன் சீரும் சிறப்பும் பெற்று வாழ்வாங்கு வாழ வாழ்த்துகின்றோம்.

நலன்புரி கழகம்,
[சி/3839][5.67] வலயக் கல்வி அலுவலகம், தீவகம், வேலணை.

**பணியாளர் தேவை**

01. கணக்குப் பதிவாளர்
02. கணினி இயக்குநர்

ஆகிய பணி நிலைகளுக்கு முன்னனுபவமுடைய ஆண் பணியாளர் தேவை.
தகைமையுடையோர் 08.10.2012, 09.10.2012 ஆகிய நாள்களில் (முற்பகல் 10.00 - பிற்பகல் 5.00 மணி) நேரில் வருகை தரவும்
குறிப்பு:- கிளிநொச்சியில் வசிப்பவர் விரும்பத்தக்கது.
அஸ்வினி மல்ரி பிளாசா
எலிபென்ட் ஹவுஸ் முகவர்,
இரத்தினபுரம் வீதி, கிளிநொச்சி. (19346) (2.6.7)

**வீடு வாடகைக்கு**

யாழ்ப்பாணத்தில் பழைய பூங்கா வீதியில் 4 முன்னிலை பாடசாலைகள், கச்சேரி, வைத்தியசாலைக்கு அண்மையில் 3 அறைகள், யுசி நீர், மின்சாரம், வாகனத் தரிப்பிட வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு.
தொடர்பு:
077 376 2771

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/ புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தின் அதிபர், ஆசிரியர்களை ஆசிரியர் தினத்தில் வாழ்த்துகின்றோம்.
மேலும் வருடா வருடம் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் பெருந்தொகையான மாணவர்களை சித்தியடைச் செய்யும் ஆசிரியர் திலகங்களை பாராட்டுவதில் பெருமையடைகின்றோம். இந்த வருடம் 56 வீதமான சித்தியை அடையச் செய்து பாடசாலைக்கு பெருமையைத் தேடிக் கொடுத்துள்ள அதிபர், ஆசிரியர்களை மகிழ்ச்சி பொங்க வாழ்த்துகின்றோம்.

Best Wishes

வாழ்த்துவோர்:
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பெற்றோர்கள், மாணவர்கள்.

# ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
05.09.1927

மறைவு
12.10.2006

அமரர்
**இராசரத்தினம் இரத்தினவேல்**
(ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர், கச்சேரி, யாழ்ப்பாணம்)
திதி:-அபரபக்கசஷ்டி (06.10.2012)

கற்பகப் பிள்ளையார் காலடியே சரணென்று
பொற்புதனை மறந்தே புகழுடலில் வாழ்பவரே
ஆண்டு பல கடந்தாலும் நீங்காது நும் நினைவு
நேசமுடன் எமை வளர்த்த அப்பாவே, எம் உயிரே!
உங்கள் ஆன்மா சாந்திபெற ஐங்கரன்தாள் பணிகின்றோம்

அரச வீதி, உரும்பிராய். குடும்பத்தினர்.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

Kn/St.Theresa's Girls College, Kilinochchi



கிளி/ புனித திரேசா பெண்கள் கல்லூரி முதல்வர்
திருமதி ஜெயந்தி தனபாலசிங்கம்
அவர்கள் அதி மேதகு ஜனாதிபதி அவர்களிடம் 2012.10.09 அன்று ஆசிரியர் 'பிரதீபா பிரபா' விருது பெறுவதை முன்னிட்டு பாராட்டி வாழ்த்துவதோடு, எமது கல்லூரி சக ஆசிரியர்களையும் உலக ஆசிரியர் தினமான இன்றைய நாளில் மனமார வாழ்த்துகின்றோம்.



வாழ்த்துவோர்:
கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரி
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
பாடசாலை அபிவிருத்திக் குழு.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது சக அதிபரான செல்வி
அ.சா.மரியாம்பிள்ளை
அவர்கள்
(S.L.P.S 2 -I )
B.A, Dip.in Edu, M.Ed
சங்கானைக் கோட்டக் கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றமையை நாம் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டம். (23637)(45-6-7)
கோட்டக் கல்விப் பணிப்பாளர், அதிபர்கள், கோட்ட அலுவலர்கள்.

**ஆங்கிலம் கற்பிக்க விரும்புவோருக்கான கற்கைநெறி**

| | |
|---|---|
| இடம் | : இல. 155, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் |
| தகுதி | : O/L இல் ஆங்கிலத்தில் குறைந்தது 'S' சித்தியுடன் A/L இல் 3 பாடம் சித்தி |
| தகுதிக்கான பரீட்சை | : 12.10.2012 |
| நேர்முகப் பரீட்சை | : 14.10.2012 |
| கற்கை நெறி ஆரம்பம் | : 15.10.2012 |

குறிப்பு: 8 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை நேரில் மேலதிக விவரங்களை தெரிந்த பின்னர் ரூ.200/= செலுத்தி விண்ணப்பப்படிவங்களை பெற்றுச்செல்லலாம். 11 ஆம் திகதி மாலை 5 மணிவரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். சிறந்த முறையில் சித்தியடைந்து நிறைவு செய்கின்ற 10 பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படும். ஏனையோருக்கு சுய தொழிலாக கற்பிக்கக் கூடிய ஆலோசனைகளும் ஒத்துழைப்பும் வழங்கப்படும்.

Madonn's School of Education
MMBL Cyber Skills (pvt) Ltd. (23715) (45.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## வேலுப்பிள்ளை பாலசுப்பிரமணியம்

B.A(Hons),Dip in Ed., PGDEM, M.Ed.SLPS -I,SLEAS -III)



ஆசிரியராக, அதிபராக, கோட்டக்கல்விப் பணிப்பாளராக, சிறந்த கல்விப் பணியாற்றிய எமது கோட்டக் கல்விப் பணிப்பாளர்

உயர்திரு

**வே.பாலசுப்பிரமணியம்**

அவர்கள் இலங்கை கல்வி நிர்வாக சேவை அதிகாரியாக (SLEAS) நியமனம் பெற்றதை உளமார பாராட்டுவதுடன், மேலும் பல பதவியுயர்வுகள் பெற்று சிறந்த கல்விப் பணியாற்ற வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை வேண்டி இந்த ஆசிரியர் தின நன்னாளில் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**அதிபர்கள் சங்கம்**
**கோப்பாய் கல்விக்கோட்டம்.**

(சி/3852)(2-6-7)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்
1937.04.10

மறைவு
2012.09.06

## அமரர் இளையதம்பி மகேசன்

கடந்த 2012.09.06 ஆம் திகதி வியாழக்கிழமை இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் இளையதம்பி மகேசன் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (06.10.2012) சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறவுள்ளன. அத்தருணம் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் மரணச்சடங்கில் பங்கு கொண்டோருக்கும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**கோப்பாய் மத்தி,**
**கிறைவான் ஒழுங்கை,கோப்பாய்.** **குடும்பத்தினர்.**

(23781)(2-6-7)

# கிராம அலுவலர் போட்டி பரீட்சைக்கு விண்ணப்பம்

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் கிராம அலுவலர் தரம் iii இற்கான போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மூன்று மொழிகளில் நடத்தப்படவுள்ளன. இந்தப் போட்டிப் பரீட்சைக்கு 21 வயது தொடக்கம் 30 வயதுக்குட்பட்ட, ஜீ.சீ.ஈ. சாதார பரீட்சையில் ஆறுபாடங்களில் சித்திபெற்று ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

இதற்கான விண்ணப்பங்களை அடுத்த மாதம் 2 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

இந்தப் பரீட்சை தொடர்பான மேலதிக விவரங்களை நேற்றைய வர்த்தமானிப் பத்திரிகையில் பார்வையிட முடியும்.

மாதிரி வர்த்தமானிப் பத்திரிகையை இலக்கம் 12, சிவகுருநாதர் வீதியிலுள்ள உதயன் விருந்தினர் விடுதி கிளிநொச்சி புனித திரேசா மகளிர் கல்லூரிக்கு அருகிலுள்ள உதயன் உபபணிமனையிலும் பார்வையிட முடியும்.

அத்துடன் எதிர்வரும் 10 ஆம் திகதியிலிருந்து காலை 9 மணி முதல் பிற்பகல் 4 மணி வரை இந்த விண்ணப்ப படிவங்களை மேற்படி இடங்களில் இலவசமாகப் பெற்றுக் கொள்ள முடியும்.

(16)

**பிரத்தியேக வகுப்பு**

தரம் 4, 5 இற்கான புலமைப்பரிசில் வகுப்பு, தரம் 6 - 11 வரையான கணித வகுப்புக்கள் ஆசிரியரால் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.

தொடர்புகளுக்கு: 0728065351
(23783)(3.6.7)

**IELTS** A1 B1 B2
Knowledge Universe Sri Lanka
October/27th Exam in Jaffna Call: 0777302882
Visit: http://edu.kugroup.info/ielts
தனிப்பட்ட முறையில்,உங்கள் நேர வசதிக்கேற்ப கற்கக்கூடிய,அதிக அளவிலான சிறந்த பெறுபேறுகளை யாழ்மாவட்டத்தில் வழங்கிவரும் ஒரே நிறுவனம்.
K.U Education,No 75,Temple Road,Jaffna. IELTS Centre

**Hatton National Bank**
Hatton National Bank PLC (PQ82)

## அடகுப் பொருள்கள் ஏலவிற்பனைக்கான அறிவித்தல்

ஹற்றன் நஷனல் வங்கி யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி, ஸ்ரான்லி வீதி, மானிப்பாய், கிளிநொச்சி தெற்கு, சாங்கானை, திருநெல்வேலி, பருத்தித்துறை, வேலணை, சாவகச்சேரி ஆகிய கிளைகளில் 31.07.2011 இற்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத, காலாவதித் திகதியை நீடிக்க ஆவன செய்யாத வாடிக்கை யாளரின் அடகுநகைகள் 09.10.2012 செவ்வாய்க்கிழமை மாலை 3 - 6 மணிவரை இல. 212,214 ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள யாழ். கிளையில் ஏலத்தில் விடப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

உங்களின் பெறுமதி மிக்க பொருள்களை உடனே மீட்க முடியாவிட்டால்....

* கடனுக்குரிய வட்டியையும் கடனின் ஒரு பகுதியையும் (ரூ.500) செலுத்தி)

**அல்லது**

* தற்போதைய சந்தைப் பெறுமதிக்கும் அதிகரித்த கடன் தொகைக்கும் ஏற்ப உங்கள் அடகுப் பொருள்களை மீள அடகு வைத்து காலாவதித் திகதியை நீடித்துக் கொள்ளலாம்.


ஏல விற்பனைத்திகதியினை பிற்போடும் மற்றும் ஏலத்தினை இரத்துச் செய்யும் உரிமைகள் வங்கிக்கு உண்டு.

ஹற்றன் நஷனல் வங்கி

(சி/3851) (45.6.9)

**COSY Vege**
கொசி
Buy 02 Get 01 Free

ஏதேனும் ஒரு உணவில்



02 எடுத்தால்
01 முற்றிலும் இலவசம்

100% தூய சைவ | இந்திய மற்றும் சீன உணவு வகைகள்

# 272, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்
021 2227100

valid till 31.10.2012
(சி/3924) (15-14-6)

## பிரதேச சபை, நல்லூர்
## பொதுமக்களுக்கான முக்கிய அறிவித்தல்கள்

01. சபையின் அனுமதியின்றி எந்த ஒரு கட்டடமும் அமைக்கப்பட்டாலும் அல்லது ஒப்பந்தங்களை மீறி அமைக்கப்பட்டாலும் சட்ட நடவடிக்கை மூலம் அவை அகற்றப்படும்.

02. வியாபார உரிமம் இதுவரை பெற்றுக் கொள்ளாதவர்கள் உடனடியாகச் சபையுடன் தொடர்பு கொண்டு அனுமதியை பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். தவறின் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். வியாபார உரிமம் பெற்றவர்கள் அதை வியாபார நிலையங்களில் பார்வைக்காக வைக்கப்பட வேண்டும்.

03. சபைக்குச் சொந்தமான கடை உரிமையாளர்கள் வாடகையைச் செலுத்தாவிடின் உடனடியாக அதனைச் செலுத்தவேண்டும். தவறின் சபையினால் மீளவும் கடைகள் பாரமெடுக்கப்படும்.

04. சபையின் கடைகள் சம்பந்தமாக மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றது. இதுவரை மீளாய்வு செய்யாத சபையின் குத்தகைக் கடைக்காரர் ஒரு கிழமைக்குள் சபைக்கு சமுகமளிக்க வேண்டும். தவறின் சபையினால் மீளவும் கடைகள் பாரமெடுக்கப்படும்.

05. மூன்று மாதங்களுக்கு மேலாகப் பூட்டப்பட்டுள்ள சபையின் கடைகள் யாவும் எதுவித முன்னறிவித்தலுமின்றி சபையினால் பாரமெடுக்கப்படும்.

06. நடைபாதைகளைத் தடை செய்யும் வகையில் நடந்து கொள்வோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும். கடைகளின் எல்லைப்பரப்பினை மீறி பொருள்களை வைத்து வியாபாரம் செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. நடைபாதையில் வைத்து வியாபாரம் செய்யப்படும் பொருள்கள் யாவும் சபையினால் பறிமுதல் செய்யப்படும்.

07. சுகாதாரத்தைப் பேணி நடப்பது மக்களின் கடமையாகும். சுகாதாரப் பரிசோதகர்களின் அறிவுரைகளுக்கு மாறாக நடந்து கொள்வோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அன்பான பிரதேச வாழ் மக்களே மேற் கூறப்பட்ட அறிவுரைகளின் அடிப்படையில் நடந்து கொண்டு சபையின் நடவடிக்கைகளுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்கும்படி தங்களை மிகவும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

தலைவர்,
நல்லூர் பிரதேச சபை.

(சி/3854)(3.6.7)

## நல்லூர் பிரதேச சபை கொக்குவில் உப அலுவலகம் ஆதனப் பெயர் மாற்றம்

வட்டாரம் - 08, ஞானபண்டித வித்தியாசாலை வீதி, ஆதன இலக்கம் 102/10 நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட கொக்குவில் உப அலுவலக வட்டாரம் - 08, ஞானபண்டித வித்தியாசாலை வீதி, 102/10 என்ற இலக்க ஆதனம் சொந்தக்காரர் உரிமை கோருபவர் எஸ். சோமநாதன் எனும் பெயரில் எமது ஆதன பதிவேட்டில் காணப்படுகின்றது.

இந்த ஆதனத்தை அரியகுட்டி நாகராசா என்பவர் நொத்தாரிசு மா. தியாகராசா என்பவரது 2371 ஆம் இலக்க 23.09.1996 ஆம் திகதிய வெளிப்படுத்தல் உறுதி மூலம் தனது பெயருக்கு வெளிப்படுத்தல் செய்து நொத்தாரிசு சு.வ.கணேசன் என்பவரது 1664 ஆம் இலக்க 29.01.2009 ஆம் திகதிய உறுதி மூலம் தனது பேர்த்தி இரத்தினச பாபதி குகதாசன் மகள் பிரவின்ஜாவிற்கும் 6417 ஆம் இலக்க 29.10.2003 ஆம் திகதிய உறுதி மூலம் நாகராசா மகள் கோசலையிற்கும் நன் கொடையாக வழங்கியுள்ளார்.

இந்த ஆதனத்தின் ஒரு பகுதியை இரத்தினசபாபதி குகதாசன் மகள் பிரவின்ஜா என்ற பெயருக்கும் மிகுதியை நாகராசா மகள் கோசலையிற்கும் எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார்கள். இந்த ஆதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் 30 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத் தரு மாறும், அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனத்தின் ஒரு பகுதியை இரத்தினசபாபதி குகதாசன் மகள் பிரவின்ஜாவிற்கும் மிகு தியை நாகராசா மகள் கோசலையிற்கும் பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன், இந்த ஆதனப் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் நல்லூர் பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ப. வசந்தகுமார்
தலைவர்,
நல்லூர் பிரதேச சபை.

(சி/3853)(45.6.7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அரச அதிபர் வெற்றிக் கிண்ண சுற்றுப் போட்டிகளில் சிறப்பாக ஆடிய யாழ்.மாவட்ட செயலக அணி அனைத்துப் போட்டிகளிலும் மொத்தமாக 35 புள்ளிகளைப் பெற்று சகலதுறைச் சம்பியனாகத் தெரிவானது, தாம் பெற்ற வெற்றிக் கிண்ணங்களின் நடுவே வெற்றிக் களிப்புடன் மாவட்ட செயலக அணிகளின் வீரர்களும், வீராங்கனைகளும். (ந-23)

# கொழும்பு சாஹிராக் கல்லூரி 'சுப்பர்–16'' உதைபந்தாட்டத் தொடர் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஒக்.6

கொழும்பு சாஹிராக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் 8ஆவது வருடமாகநடத்தும் அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான ''சுப்பர் 16 ''உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு சாஹிராக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது. இந்தச்சுற்றுப் போட்டியில் கொழும்பு ஆனந்தாக் கல்லூரி, டி. எஸ். சேனநாயக்கா கல்லூரி,டி மைனஸ் கல்லூரி, கொழும்பு இந்துக் கல்லூரி, களுத்துறை திருச்சிலுவைக் கல்லூரி, யாழ்ப்பாணம் மானிப்பாய் இந்துக் கல்லூரி, கொழும்பு சென். ஜோசப் கல்லூரி, கொழும்பு சென். பெனடிற் கல்லூரி, கேகாலை சென். மேரிஸ் கல்லூரி, மாத்தறை சென்.தோமஸ் கல்லூரி, நீர்கொழும்பு மரியஸ்ரலாக் கல்லூரி, கொழும்பு சாஹிராக் கல்லூரி, மானவெல சாஹிராக் கல்லூரி, கொழும்பு லுமினிக் கல்லூரி, கொழும்பு கிஸ்பத்தானைக் கல்லூரி ஆகிய கல்லூரி அணிகள் பங்குபற்றவுள்ளன.

மேற்படி போட்டியில் பங்கு கொள்வதற்காக யாழ். மாவட்டத்தில் இருந்து மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியினர் நேற்று கொழும்பு பயணமாகினர்.

கடந்த வருடம் கொழும்பில் நடை பெற்ற பிளேட் கிண்ணப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி சம்பியன் ஆனமை குறிப்பிடத்தக்கது.

(ந-23)

# வல்வைக்கு வெற்றி

யாழ்ப்பாணம்,ஒக்.6

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் சிவானந்தா அணியை வென்றது வல்வை அணி.

இந்த ஆட்டத்தில் சிவானந்தா விளையாட்டுக்கழக அணிக்கு தன்னை எதிர்த்து விளையாடிய வல்வை அணியின் அபார ஆட்டத்துக்கு முன்னால் ஈடு கொடுக்க முடியவில்லை.

இதனால் ஆட்ட நேர நிறைவில் வல்வை விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது.

(ந-23)

# நியூபைட்டை இலகுவில் வீழ்த்தி மருத நிலா அரையிறுதிக்கு தகுதி

யாழ்ப்பாணம்,ஒக்.6

வவுனியா உதைபந்தாட்ட லீக் அங்கத்துவ கழகங்களுக்கிடையே நடத்தும் 11 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டித் தொடரின் காலிறுதியாட்டம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை வவுனியா நகர சபை மைதானத்தில் இடம் பெற்றது.

இதில் நியூ பைட் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மருதநிலா விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இந்தப் போட்டியில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய மருத நிலா விளையாட்டுக்கழக அணி கோல் மழை பொழிந்தது. அந்த அணியின் ஆட்டத்தில் திணறிய நியூபைட் அணி,நிலை தடுமாறிப் போனதால், இறுதி வரை அந்த அணியால் கோல்கள் எதனையும் பெறமுடியவில்லை. ஆட்ட நேர இறுதியில் 4:0 என்ற கோல்கணக்கில் நியூபைட் அணியை வீழ்த்தி அரையிறுதியாட்டத்துக்கு மருதநிலா அணி தகுதி பெற்றது.

(ந-23)

# வவுனியா மாவட்ட உதைபந்து இன்று

யாழ்ப்பாணம்,ஒக்.6

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனமும், விளையாட்டுத்துறை அமைச்சும் இணைந்து தேசிய உதைபந்தாட்ட அணிக்கான வீரர்களைத் தெரிவு செய்வதற்காக முதற்கட்ட போட்டிகள் பிரதேச செயலக பிரிவுகளுக்கு இடையே நடத்தியிருந்தன.

இதன் இரண்டாம் கட்டமாக வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு, வவுனியா நகரம், செட்டிகுளம் ஆகிய பிரதேச செயலகங்களுக்கு இடையிலான 21 வயதுப் பிரிவு அணிகளுக்கான மாவட்ட மட்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி இன்று சனிக்கிழமை காலை 9 மணியளவில் வவுனியா நகரசபை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

(ந-23)

# கிளித்தட்டில் இயக்கச்சி ஆதவன் சம்பியன்

யாழ்ப்பாணம்,ஒக்.6

புதிய பாரதி விளையாட்டுக்கழகத்தினால் புதிதாக அமைக்கப்பட்ட மைதானதிறப்புவிழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட ஆண்களுக்கான கிளித்தட்டுச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை புதிய பாரதி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றது.

இந்த இறுதியாட்டத்தில் இயக்கச்சி ஆதவன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பொன்னகர் கண்ணன் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் இயக்கச்சி ஆதவன் விளையாட்டுக்கழக அணியே ஆரம்பம் முதல் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியது.அந்த அணியின் வீரர்கள் கண்ணன் அணி வீரர்களை ஏய்த்துவிட்டு பழங்களை எடுக்கத் தொடங்கினர். இந்த முயற்சியை தடுக்க பொன்னகர் கண்ணன் அணி தவறிவிட்டது. அதே நேரம் ஆதவன் அணியினர் எதிர் அணியின் வீரர்களை தம்முடைய வியூகங்களுக்குள் கட்டுப்படுத்தி, அவர்கள் எடுக்கும் பழங்களின் எண்ணிக்கையை இயன்ற வரை தடுத்தனர். ஆட்ட நேர இறுதியில் இயக்கச்சி ஆதவன் அணி 4:1 என்ற பழங்கள் அடிப்படையில் பொன்னகர் கண்ணன் விளையாட்டுக்கழகத்தை வெற்றிகொண்டு சம்பியனானது.

(ந-23)



பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்டப் போட்டிகளில் பங்குபற்றவுள்ள தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை அணிகளின் வீர வீராங்கனைகளைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இதில் சாவகச்சேரி நகர் பரம்ஸ் நிறுவனத்தினர் சாவகச்சேரி கைத்தொழில் வணிக மன்றத் தலைவர் [illegible] களை வழங்கினர். (ந-23)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இன்றைய ஆட்டங்கள்

கலட்டி நியூஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடத்தும், நியூஸ்ரார் பிறிமியர் வெற்றிக் கிண்ணத்திற்கான '20/20' கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று சனிக்கிழமை யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறுகின்ற ஆட்டத்தில் பங்கு பற்றும் அணிகளின் விவரங்கள் வருமாறு-

காலை 8 மணி

ஓல்ட்கோல்ட்ஸ் விளையாட்டுக்கழகம் எதிர் சென்றல் விளையாட்டுக்கழகம்.

* * *

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் ஆதிசக்தி விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு-

பி.ப.3 மணி

நியூட்டன் விளையாட்டுக்கழகம் எதிர் நெடியகாடு விளையாட்டுக்கழகம்

பி.ப 4 மணி

கருணாகரன் விளையாட்டுக்கழகம் எதிர் சென்.சேவியர் விளையாட்டுக்கழகம்

* * *

வவுனியா உதைபந்தாட்ட லீக் அங்கத்துவ கழகங்களுக்கிடையே நடத்தும் 11 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இரண்டாம் கட்ட ஆட்டத்தில் இன்று சனிக்கிழமை வவுனியா நகர சபை மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பங்குபற்றவுள்ள அணியின் விவரம் வருமாறு-

பி.ப 4 மணி

அல்கிஜிறா விளையாட்டுக்கழகம் எதிர் ஈகிள் விளையாட்டுக் கழகம்.

(ந-23)

# ரூபவாகினி கரப்பந்தாட்டத் தொடர் கிளிநொச்சியில் இன்று ஆரம்பம்

மாங்குளம்,ஒக்.6

ரூபவாகினியின் நிறுவனத்தின் 28 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இளைஞர் சேவைகள் மன்றத்தினால் நடத்தப்படும் கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு கிளிநொச்சி இளைஞர் சேவைகள் மன்றத்தில் நடைபெறவுள்ளது.

வடமாகாணத்தில் உள்ள கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் மாவட்டங்களில் இருந்து இளைஞர் சேவைகள் மன்றத்தின் பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கு இடையே இந்த கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி நடத்தப்படவுள்ளது

இந்தச் சுற்றுப் போட்டியின் இன்றைய ஆரம்ப நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் கலந்துகொள்ளவுள்ளார்.

(ந-422-23)

# மானிப்பாய் இந்து– யாழ்ப்பாணக் கல்லூரி சிநேகபூர்வ உதைபந்தாட்ட முடிவுகள்

மானிப்பாய் இந்துக்கல்லூரிக்கும் வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் இடையிலான 14, 16,18,21 வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டிகள் கடந்த புதன்கிழமை இடம் பெற்றன.

இதில் 14 வயதுப் பிரிவு அணியினருக்கான ஆட்டத்தில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

16 வயதுப் பிரிவு அணியினருக்கான ஆட்டத்தில் மானிப்பாய் இந்துக்கல்லூரி அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

18 வயதுப் பிரிவு அணியினருக்கான ஆட்டத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியினர் 4:0 என்ற கோல்கணக்கில் வெற்றியீட்டினர்.

21 வயதுப் பிரிவு அணியினருக்கான ஆட்டத்தில் மானிப் பாய் இந்துக்கல்லூரி அணி 2:0 என்ற கோல் கணக்கில் மத்திய கல்லூரியை வீழ்த்தியது. (ந-23)

# ஆதிசக்தி வெற்றிக்கிண்ண ஆட்டங்களின் முடிவுகள் சில

யாழ்ப்பாணம்,ஒக.6

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் ஆதிசக்தி விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம், கொலின்ஸ் விளையாட்டுக் கழகம் ஆகியன வெற்றிபெற்றுள்ளன.

முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் பருத்தித்துறை ஐக்கியம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நவசக்தி விளையாட்டுக் கழக அணி மோதிக்கொண்டது.

பரபரப்பான இந்த ஆட்டத்தில் பருத்தித்துறை ஐக்கியம் விளையாட்டுக் கழக அணி 3:2 என்ற கோல்கணக்கில் வெற்றியீட்டியது.

இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் கொலின்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கற்கோவளம் உதய தாரகை விளையாட்டுக் கழகம் மோதிக்கொண்டது.

இதில் கொலின்ஸ் விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் இலகுவாக வெற்றிபெற்றது.

(ந-23)

இந்தப் பக்கத்துக்கான அனுசரணை
HONDA WORLD
வடமராட்சியில் Stafford motor co.இன்
அங்கிகாரம் பெற்ற Hero Honda, Honda ஏக
விநியோகஸ்தர்
HONDA WORLD
உங்கள் தெரிவுக்கு முந்துங்கள்
HONDA
HONDA WORLD
பருத்தித்துறை வீதி, நெல்லியடி
Email- hondaworld@gmail.com
web- www.honda.lk
T.P- 0212264416, Hotline-0770387444

'ரி-20'-2012, உலகக் கிண்ணத் தொடர் நாயகன் விருதை வெல்லப்போகும் வீரர் யார்?

.......................................................

பெயர்- ........................................

முகவரி-........................................

........................................

உதயனில் வெளியாகும் கூப்பனை மாத்திரம் கத்தரித்து 07.10.2012 ற்கு முன்னர் அனுப்புதல் வேண்டும்.

உதயனின் யாழ். அலுவலகம், நெல்லியடி, சாவகச்சேரி, கரடிப்போக் குச் சந்தி, வவுனியா, மன்னார் ஜோதி புத்தக-சாலை, சிவசாந்தி தேநீர்ச்சாலை- தாழ்வுப்பாடு அலுவலக-ங்களில் வைக் கப்பட்டுள்ள பெட்டியில் கூப்பனை இடலாம்.




# கங்காருகளை ஓட ஓட விரட்டியடித்தன தீவுகள்

ஆஸ்திரேலிய அணியின் உலகக் கிண்ண கனவுக்கு வேட்டு வைத்த மேற்கிந்தியத்தீவுகள் அணி நடப்புத் தொடரின் அதி உச்ச ஓட்ட எண்ணிக்கையையும் பதிவு செய்து அசத்தியது. ஆஸ்திரேலிய அணியிடம் லீக் ஆட்டத்தில் மழையின் குறுக்கீட்டால் தோற்றதற்கு நேற்றைய தினம் மேற்கிந்தியத்தீவுகள் நெத்தியடி கொடுத்து முதல் முறையாக இறுதி ஆட்டத்துக்கு தகுதி பெற்றது.

இலங்கையில் இடம்பெற்று வரும் 'ரி-20' உலகக் கிண்ணத் தொடரின் இரண்டாவது அரையிறுதி ஆட்டம் ஆர்.பிரேமதாஸ மைதானத்தில் நேற்று இரவு இடம்பெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

கெய்ல் - சார்ள்ஸ் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கினர். கெய்ல் மந்தமாக துடுப்பெடுத்தாட மறுமுனையில் அதிரடியைத் தொடக்கிய சார்ள்ஸ் நீண்ட நேரம் களத்தில் நிலைக்காமல் ஆரம்பத்திலேயே ஆட்டமிழந்தார். அதன் பின்னர் களமிறங்கிய சாமுவேல்ஸ் வானவேடிக்கை காட்ட மறுமுனையில் கெய்லும் வெளுத்து வாங்கினார். இவர்களது சரவெடிகள் சராசரியாகவே இருந்தன. இந்த இணைப்பை குமின்ஸ் பிரித்து வைத்தார்.

அதன் பின்னர் ஆஸிக்கு வில்லங்கம் தோன்றியது. பிராவோ, கெய்ல் இணை சிறப்பான ஓட்ட வேகத்தை அணிக்கு வழங்கி மிகப்பெரிய இலக்கை நோக்கி முன்னேறியது. பிராவோவும், கெய்லுக்கு இணையாக அதிரடியில் போட்டுத்தாக்கினார். கெய்ல் வழமை போல 29 பந்துகளில் தனது அரைச் சதத்தை பூர்த்தி செய்தார். மிகச் சிறப்பாக மூன்றாவது இலக்குக்கு 83 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் பிராவோ ஆட்டமிழந்தார்.

இந்தத் தொடரில் தொடர்ந்து சொதப்பி வரும் பொலாட் அடுத்து களமிறங்கினார். யாருமே எதிர்பாராத வகையில் அதிரடியில் முழங்கித் தள்ளினார் அவர். கெய்லின் சரவெடியை அவரது அதிரடியான முழக்கம் இறுதிக் கட்டத்தில் முந்தியது. ஆஸி.யின் பந்து வீச்சுக்கு தயவு தாட்சணியம் இன்றி இந்த இணை வெளுத்து வாங்கியது. இறுதி 4 பந்துப் பரிமாற்றங்களில் 65 ஓட்டங்கள் குவித்ததுடன் இந்தத் தொடரில் அதிகூடிய ஓட்ட எண்ணிக்கையாக 205 ஓட்டங்களைப் பதிவு செய்தது.







இமாலய இலக்கை விரட்டினால்தான் இறுதி என்று களமிறங்கிய ஆஸி.க்கு முதலாவது பந்துப் பரிமாற்றத்திலேயே முகஞ்சுழிக்க வைத்தது மேற்கிந்தியத்தீவுகள். அதிரடியாக பத்ரீ முதலாவது பந்துப் பரிமாற்றத்தை வீசி வோணரை வெளியேற்றி வைத்தார். தொடர்ந்து நுழைந்த மை ஹஸி சிறிது நேரம் அதிரடியில் வெளுத்து வாங்கினாலும் அவராலும் நிலைத்து நிற்க முடியவில்லை. அதன் பின்னர் ஆஸி.யின் ரன் மெஷின் வொட்ஸனின் இலக்கை பத்ரீ இலகுவாக கைப்பற்ற ஆஸி.யின் நிலை பரிதாபத்துக்குரியதாகியது.

தொடர்ந்த வந்த வீரர்களும் ஒற்றை இலக்க ஓட்டங்களுடன் அடுத்தடுத்து பவிலியன் திரும்ப மேற்கிந்தியத்தீவுகளின் வெற்றி உறுதியானது. 43 ஓட்டங்களுக்கு 6 இலக்குகளை இழந்து ஆஸி.யின் தோல்வி நெருங்கிய நேரத்தில், அணித் தலைவர் பெய்லி திடீரென வெளுத்து வாங்கினார். ருஷெலின் ஒரு பந்துப் பரிமாற்றத்தில் 25 ஓட்டங்கள் விளாசி மேற்கிந்தியத்தீவுகளுக்கு சிறியதொரு மனகிலேசத்தைக் கொடுத்தார்.

தொடர்ந்தும் வெளுத்து வாங்கி 23 பந்துகளில் தனது அரைச் சதத்தைப் பூர்த்தி செய்து கொண்டார். 6 பந்துப் பரிமாற்றங்களில் 68 ஓட்டங்கள் ஏழாவது இலக்குக்காக பகிரப்பட்ட நிலையில், செய் அல்லது செத்து மடி என்ற கட்டத்தில் பெய்லி அதிரடியாக ஆட முற்பட்டு ஆட்டமிழந்தார். அதன் பின்னர் ஆஸி.யின் பின்வரிசையும் சரிய மேற்கிந்தியத்தீவுகள் அணி முதல் முறையாக இறுதி ஆட்டத்துக்கு தகுதி பெற்றது.

74 ஓட்டங்களால் அபார வெற்றியைப் பதிவு செய்த மேற்கிந்தியத்தீவுகளின் கெய்ல் ஆட்டநாயகனாக தெரிவானார்.

(5)




## 2012 ஆம் ஆண்டு உலகக் கிண்ண ரி-20 ஆட்டம்

மேற்கிந்தியத்தீவுகள் எதிர் ஆஸ்திரேலியா நாணயச் சுழற்சி: மே.தீவுகள்
முடிவு: 74 ஓட்டங்களால் மே.தீவுகள் வெற்றி ஆட்டநாயகன்: கெயில்

### மேற்கிந்தியத்தீவுகள்

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| சார்ள்ஸ் | c வேட் b ஸ்ராக் | 10 | 13 | 2 | 0 |
| கெய்ல் | ஆட்டமிழக்காமல் | 75 | 41 | 5 | 6 |
| சாமுவேல்ஸ் | b குமின்ஸ் | 26 | 20 | 2 | 2 |
| டுவைன் பிராவோ | c பெய்லி b குமின்ஸ் | 37 | 31 | 1 | 3 |
| பொலாட் | c வோணர் b டொஹேட்டி | 38 | 15 | 3 | 3 |
| ருஷல் | | | | | |
| ராம்டின் | | | | | |
| சமி | | | | | |
| நரைன் | | | | | |
| பத்ரீ | | | | | |
| ராம்போல் | | | | | |
| உதிரிகள் | | 19 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| ஸ்ராக் | 4 | 32 | 1 | 0 |
| வொட்ஸன் | 4 | 35 | 0 | 0 |
| குமின்ஸ் | 4 | 36 | 2 | 0 |
| டொஹேட்டி | 3 | 48 | 1 | 0 |
| ஹொக் | 3 | 21 | 0 | 0 |
| டேவிட் ஹஸி | 2 | 22 | 0 | 0 |

TOTAL - 205/4 (20)
1-16 (சார்ள்ஸ்), 2-57 (சாமுவேல்ஸ்), 3-140 (பிராவோ), 4- 205 (பொலாட்)

### ஆஸ்திரேலியா

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| வொட்ஸன் | b பத்ரீ | 01 | 03 | 0 | 0 |
| டேவிட் வோணர் | b பத்ரீ | 07 | 09 | 1 | 0 |
| மைக் ஹஸி | c & b சாமுவேல்ஸ் | 18 | 12 | 3 | 0 |
| கம்ரான் வைட் | c ராம்டின் b ராம்போல் | 05 | 06 | 0 | 0 |
| பெய்லி | c ருஷல் b பொலாட் | 63 | 29 | 6 | 4 |
| டேவிட் ஹஸி | c & b ராம்போல் | 00 | 02 | 0 | 0 |
| வேட் | c பத்ரீ b நரைன் | 01 | 05 | 0 | 0 |
| குமின்ஸ் | c சார்ள்ஸ் b பொலாட் | 13 | 15 | 1 | 0 |
| ஸ்ராக் | b ராம்போல் | 02 | 05 | 0 | 0 |
| ஹொக் | st ராம்டின் b சுனில் நரைன் | 07 | 07 | 0 | 0 |
| டொஹேட்டி | b ஆட்டமிழக்காமல் | 09 | 07 | 1 | 0 |
| உதிரிகள் | | 05 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| பத்ரீ | 4 | 27 | 2 | 0 |
| சாமுவேல்ஸ் | 3 | 26 | 1 | 0 |
| ராம்போல் | 3.4 | 16 | 3 | 0 |
| நரைன் | 3 | 17 | 2 | 0 |
| ருஷல் | 1 | 25 | 0 | 0 |
| சமி | 1 | 11 | 0 | 0 |
| பொலாட் | 1 | 06 | 2 | 0 |

TOTAL - 131/10 (16.4)
1-2 (வோணர்), 2-22 (மைக் ஹஸி), 3-29 (வொட்ஸன்), 4-42 (வைட்), 5-42 (டேவிட் ஹஸி), 6-43 (வேட்), 7-111 (பெய்லி), 8-111 (குமின்ஸ்), 9-121 (ஹொக்), 10-131 (ஸ்ராக்).

c - பிடியெடுப்பு b - பந்துவீசியவர் st - ஸ்ரொம்



இறுதிப் போட்டியிலும் இது நிலைக்குமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரட்டை ஆண்டுகளில் உலகக் கிண்ணம் இதனால் இலங்கை கிண்ணம் வெல்லும்

## பெரும்பான்மையின சோதிடர் கணிப்பு

ஐ.சி.சி. 'ரி-20' உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் இலங்கையில் நடைபெற்றுவருகின்றது. இதன் இறுதியாட்டத்துக்கு இலங்கை அணி தகுதி பெற்றுள்ளது.

கடந்த ஐந்து வருடங்களில் இலங்கை அணி ஐ.சி.சியின் மூன்று உலகக் கிண்ண இறுதியாட்டங்களுக்குத் தகுதி பெற்றிருந்தது. இருப்பினும் அந்த மூன்றுஆட்டங்களிலும் இலங்கை அணி தோல்வியையே தழுவியிருந்தது.

இந்த நிலையில் நான்காவது தடவையாகவும் இலங்கை அணி ஐ.சி.சியின் உலகக் கிண்ண இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றுள்ளது.

இந்த நிலையில் தென்னிலங்கையைச் சேர்ந்த பெரும்பான்மையின எண் சோதிடர் இந்த ஆண்டு இலங்கை அணியே 'ரி-20' உலகக் கிண்ணத்தை கைப்பற்றும் என்று ஆரூடம் கூறியுள்ளார்.

இலங்கை அணி கடந்த மூன்று உலகக் கிண்ண இறுதியாட்டங்களை ஒற்றை இலக்க ஆண்டிலேயே எதிர்கொண்டது. (2007, 2009, 2011) அதேவேளை இலங்கை அணி இரட்டை இலக்க ஆண்டான 1996ஆம் ஆண்டு ஐ.சி.சியின் உலகக் கிண்ணத்தை வெற்றிகொண்டது.

இலங்கை அணிக்கு இரட்டை இலக்க ஆண்டுகளே ராசியானது. அதனால் நடப்பு 'ரி-20' உலகக் கிண்ணமும் இரட்டை ஆண்டுகளில் நடப்பதால் உலகக் கிண்ணத்தை இலங்கை அணி வெற்றி கொள்ளும் என்று நம்பிக்கையாக அந்தச் சோதிடர் தெரிவித்துள்ளார். (5)





# இறுதிக்கு தகுதி
## பெருமையடைகின்றோம்



இலங்கை அணி அண்மைக்காலத்தில் நான்காவது உலகக் கிண்ணமொன்றின் இறுதி ஆட்டத்துக்குத் தகுதிபெற்றுள்ளமை தொடர்பாகப் பெருமையடைவதாகவும் இதே உணர்வையே அணியிலுள்ள அனைவரும் கொண்டிருப்பதாகவும் இலங்கை அணியின் தலைவர் மஹேல ஜெயவர்தன தெரிவித்துள்ளார்.

இலங்கை அணி மஹேல ஜெயவர்தனவின் தலைமையில் 2007 ஆம் ஆண்டு உலகக்கிண்ண இறுதி ஆட்டம் தகுதிபெற்றிருந்ததோடு, 2009 ஆம் ஆண்டு உலக 'ரி-20', 2011 ஆம் ஆண்டு உலகக்கிண்ண இறுதி ஆட்டத்துக்கு குமார் சங்ககாரவின் தலைமையில் தகுதிபெற்றிருந்தது.

தற்போது இலங்கை அணி நான்காவது உலகத் தொடரொன்றின் இறுதி ஆட்டத்துக்குத் தகுதிபெற்றுள்ளது.

இந்த நிலையில் இது குறித்துக் கருத்துத் தெரிவித்த மஹேல ஜெயவர்தன, வெற்றிகரமான குழுவொன்றின் அங்கமாகக் காணப்படுவதில் இலங்கை வீரர்கள் அனைவரும் பெருமையடைவதாகவும், இதுவரை உலகக் கிண்ணமொன்றை வெற்றிகொள்ளாத போதிலும், நான்கு இறுதி ஆட்டங்களுக்குத் தகுதிபெற்றுள்ளமை குறித்துப் பெருமையடைவதாகவும் அவர் தெரிவித்தார்.

நான்கு இறுதி ஆட்டங்களுக்குத் தகுதிபெற்றமை ஆச்சரியமானது எனத் தெரிவித்த மஹேல ஜெயவர்தன, ஒரு வீரரின் காலத்தின் ஓர் இறுதி ஆட்டத்துக்குத் தகுதிபெறுவதே அதிர்ஷ்டகரமானது எனத் தெரிவித்தார்.இலங்கை அணி இதுவரை பங்குபற்றிய 3 இறுதி ஆட்டங்களில் ஒன்று பார்படோஸிலும், ஒன்று இங்கிலாந்திலும், ஒன்று மும்பையிலும் இடம்பெற்றிருந்த நிலையில், முதன்முறையாக இலங்கையில் ஓர் இறுதி ஆட்டத்தில் பங்குபெறவுள்ள நிலையில் இந்த இறுதி ஆட்டத்தை வித்தியாசமான முறையில் எதிர்கொள்ள எதிர்பார்ப்பதாக மஹேல ஜெயவர்தன தெரிவித்தார். (5)


**மணமகன் தேவை**

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1984 இல் பிறந்த, 8 இல் செவ்வாய் 50 பாவமுடைய, லண்டனில் வசிக்கும் பட்டப் படிப்பு முடித்து தொழில் புரியும் மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை.

தொடர்பு:-
004747944944
mathusena@yahoo.com
(23606)(3,6,7)

**படிவங்கள் விற்பனையாகிறது**

கிராம அலுவலகர் - தரம் III
முடிவு. தி. 2/11/2012

தாதியர் பயிற்சி
முடிவு. தி. 28/10/2012

புள்ளி விபரவியலாளர் - III
முடிவு. தி. 19/10/2012

குடிவரவு, குடியகல்வு உத்தியோகத்தர் (திறந்த/ மட்டுப்படுத்தப்பட்ட)
30/10/2012 (சி/3857)(3.14)

பதிவாளர் சேவை உத்தியோகத்தர்
முடிவு. தி. 30/10/2012

**பூபாலசிங்கம் புத்தகசாலை**

பஸ் நிலையம் யாழ்ப்பாணம். வேம்படி சந்தி யாழ்ப்பாணம்.

**SKY இல் HP Core i3 Laptop**

தற்பொழுது 72500/= இல் மட்டுமே.

Free - 7.2 mps Dongle, Laptop bag, 4GB pendrive, Head phone, Hp mouse
10% கட்டணக் கழிவு
One Year International Warranty
Three Years Service Warranty

**Sky Computer**
162, பிரதான வீதி, யாழ்ப்பாணம்
021-2221417, 0777-271645
(சி/3722)(9.14)

**கணினி மலிவு விற்பனை**

HP 3.0 GHZ Full set Computer 17" LCD Monitor அதனுடன் கூடிய அனைத்து பொருள்களும்
Free - web cam/ 4GB Pendrive/ Head phone
ஒரு வருட உத்தரவாதம்
24,750/= மட்டுமே
ST. ANTONY'S .COM
187, K.K.S. Road, Jaffna.
0212224865, 0750698608
(ANNAI NAGA FOOD CITY அருகில்)
(சி/3858)(3.14)

**Personal Class**
364, Stanly Rd, (Near DMI)
GAQ, B.A I, B.A Final
யாழ்- பேராதனை
தமிழ்
K. தர்மராஜா
English - GAQ, B.A I
Revision & Paper
9.30-11.30 / 12-1.30
ஆரம்பம்: இன்று சனி
(23613)(3.14)

**கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலய பழைய மாணவர் சங்க மாதாந்த கூட்டம்**

கிளிநொச்சி மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் மாதாந்த பொதுக்கூட்டம் பாடசாலை பிரதான மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. தாங்களும் இக்கூட்டத்தில் கலந்து பழைய மாணவர் சங்கத்தினதும் பாடசாலையினதும் வளர்ச்சியில் பங்குபற்றுமாறு தாழ்மையுடன் கேட்டு கொள்கின்றோம்.

திகதி:- 07.10.2012
நேரம்:- மு.ப 11 மணி
(10345)(3,6,7)

கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கம்.

**PHYSICS** By.Kajan
முத்தட்டுமடலேன், கோண்டாவில் மேற்கு. (0213734114)
Day Class 9.30 am
2013 A/L மின்னியல் (செவ்வாய்,வியாழன்) ( 6.15am )
2014 A/L (செவ்வாய்,வியாழன்) (சனி,ஞாயிறு) (6.00pm)
வெலிங்டன் சந்தி அருகில் Jaffna.

**கார் விற்பனை**

HD XXXX தொடரிலக்கமுடைய Toyato Camy Jeep Model Silver Colour கார் விற்பனைக்கு உண்டு. சனி, ஞாயிறு தினங்களில் மட்டும் பார்வையிடலாம்.
தொடர்பு: 0773747825, 0212228984
(23780)(3,6,7)

**DEUTSCH, DUTCH, FRENCH, ITALIAN வகுப்புகள்**

திருமணபந்தம் மற்றும் sponsor மூலம் வெளிநாடு செல்ல இருப்பவர்களுக்கான தூதரகப் பரீட்சைக்குத் தயார்ப்படுத்தும்
ஆங்கிலம்-A1
ஜேர்மன்- deutsch (டொச்)
நெதர்லாந்து- dutch(டச்)
French, Italian புதிய வகுப்புகள் இவ்வாரம் ஆரம்பமாகின்றன.
vivekanantha academy
221, 1/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
Tel-021-321-6928, 077-4842464
(23188)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.10.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க
வையகம் வாழ்க
வளமுடன்
-மகரிஷி வேதாத்ரி



வார வசந்தம் 01

உதயன் 06 ஒக்டோபர் 2012 சனிக்கிழமை பக்கங்கள்: எட்டு

# இயற்கை வளம் மீட்டிட... 03




அ. காசி

***சமதள வயல்வெளியையே, நீரின் சிக்கனம் கருதி, அறிவியல் சொல்லும் அதிக விளைச்சல் கருதி மாற்றியமைத்துக் கொள்ள வேண்டிய நிலைமைக்குத் தள்ளப்பட்டுவிட்டோம்.***

சமதள வயல் வெளியில் நெல், விளைவிப்பதில் மிகச்சரியான விவசாயமுறைக்கு மாற்றிக் கொள்ளவேண்டும் என்ற நிலைக்கு வந்து விட்டோம். பொதுவாக எந்தப் பயிருக்கும் அதன் தண்டு முழுகும்படி நீர் பாய்ச்சுதல் என்பதே கூடாத ஒன்று. வேர் உறிஞ்சி நீரை எடுத்துக்கொள்ளும் படியான முறை வேண்டும்; வேர் நீரைக்குடிக்கக்கூடாது. நெற் பயிரின் வேர் நீரைத் தாங்கிக் கொள்ளும் திறன் படைத்துள்ளதால் நாம் கட்டும் நீரையும் சமாளித்து வளர்ந்து விளைகிறதே ஒழிய, நெற்பயிருக்கு மேல் தண்ணீர் நிறுத்தி வைக்க வேண்டிய அவசியம் இல்லை. குடிக்க தண்ணீர் கேட்கும் குழந்தையின் தலையை நீருக்குள் மூழ்கடித்தல் அறிவார்ந்த செயலா? செடியின் நுனி முதல் அடிவேர் வரை சுவாசிக்க காற்று வேண்டும். காற்றைத் தடுத்து நீரை நிரந்தரமாக நிரப்பி விட்டால் சுவாசமே இல்லாமல் எப்படி உயிர் வாழ்வது சாத்தியப்படும்?

வாழைக்கு எப்படி கான் வெட்டி, நீர்தேக்கி, வேர் உறிஞ்சி எடுத்துக் கொள்ளும் நிலையில் செய்கையில் ஈடுபடுகிறோமோ, அப்படித்தான் எல்லாவித, பயிர்களையும், விளைவிக்க வேண்டும் என்பது பொதுவிதி.

வேர்களுக்கு முதலாவதாக சுவாசிக்க காற்று வேண்டும். பிறகுதான் இரண்டாவதாக நீர் வேண்டும். வரப்பு ஓரத்தில் விளைச்சல் நன்றாக இருக்கும் காரணம் வேருக்கு காற்றோட்டம் நன்றாகக் கிடைத்துள்ளது என்பதுதான்.

ஆக, நம்முடைய சமதள வயல் வெளியையே, நீரின் சிக்கனம் கருதி, அறிவியல் சொல்லும் அதிக விளைச்சல் கருதி மாற்றியமைத்துக் கொள்ள வேண்டிய நிலைமைக்குத்தள்ளப்பட்டுவிட்டோம்.

இன்னொன்றும் கவனத்தில் இருக்க வேண்டியது உண்டு. நீர் தேங்கியுள்ள பகுதியில் முளைக்கும் களைகள் ஒரு விதம். நீர்ப் பிடிப்பு இல்லாத பகுதியில் முளைக்கும் களைகள் மறு விதம். காய்ச்சலும், பாய்ச்சலும் மாறி மாறி அமையும்போது, இரண்டு விதக் களைகளும் ஓரளவு கட்டுப்பட்டு விடுகிறது. மேல் மண்ணில் முளைக்கும் சிறு சிறு புற்களும், தரையில் படரும் செடிகளும், பயிருக்கான





நீரை,சத்தை உறிஞ்சிவிட முடியாது. பொதுவாகக் களைகள் என்றாலே வறட்சியைத் தாங்கக் கூடியது. "நீர்பசை" இருந்தாலே போதும் அதன் உயிர் வாழ்கைக்கு. அப்பா, தாத்தா சாப்பிடும் சாப்பாட்டை குழந்தை, பேரக்குழந்தை சாப்பிட்டு விட முடியுமா? பேரன் சாப்பிட்டு, தாத்தாவுக்கு பற்றாக்குறை ஏற்படுத்தி பசியில் தத்தளிக்க விட்டுவிட முடியாது அல்லவா! அப்படியே களை... கூடுதலாகக் காணப்ப...

முறைகளை எடுக்கும் செலவோடு மூன்று முறைகளை எடுத்தால் தான் என்ன பெரிய இழப்பு ஏற்பட்டு விடப்போகிறது.

1) இந்தப் புதிய முறை இயற்கை விளைச்சலால் அதிக வருமானம் கிடைக்கும் போது, இரசாயன உரச்செலவு, பூச்சி மருந்து செலவு, களைக் கொல்லி செலவு, பாசன நீருக்கான அதிகச்செலவு என்று எதுவும் இல்லாத நிலையில் மூன்றாம் முறைகளை எடுக்கும் செலவினைப் பெரிதாகக் கருதக் கூடாது என்பது சொல்ல வேண்டுமா என்ன!

2) அன்று கொல்லும் களைக் கொல்லிகளைக் பயன்படுத்தி, நின்று நிலைக்கும் பயிர்களையும் கொலை செய்திருக்கிறோம்.

3) பயிர்களை வளர்ப்பதாக எண்ணிக்கொண்டு, களைகள் செழித்து வளர அடியுரமிட்டிருக்கிறோம். (அடியுரம்தான் களைகளை வளர்க்கிறது)

4) பூச்சி தாக்குதலிருந்து பயிர்களைக் காப்பதாக எண்ணிக் கொண்டு, மருந்து அடித்து, ஆயிரக்கணக்கான பறவை இனங்களை கோடிக்கணக்கான நன்மை செய்யும் உயிர்க் கிருமிகளை கொன்றழித்திருக்கிறோம்.

5) வீரிய விளைச்சல் என்ற பெயரில், விவசாயிகளுக்குக் கற்றுக் கொடுத்த தொழில் நுட்பம் முழுவதும், விவசாயிகளுக்குத் துரோகம் செய்வதாக ஆகி விட்டதை இனியும்கூட காலம் கடத்தாமல் புரிந்து கொள்ள வேண்டிய நிலைமைக்கு வந்து விட்டோம்.

மனிதனுக்கு நெல்லும் வேண்டும், கால்நடைகளுக்கு வைக்கோலும் வேண்டும் என்கிற ... நீண்ட தாள் கொண்ட நெல் ரகம் வைத்திருந்ததை மாற்றி, கால் நடை உணவையே மறந்து, வைக்கோல் தாளை குறைத்து, அந்தக் குறைவால் சற்றுக் கூடுதலாக விளைந்த நெல்மணிகளை அறுவடை செய்தோம். அவ்வளவுதான்.

சற்று வேறு விதமாகச் சொன்னால், மனிதனுக்கான நெல் மணி 5 பகுதி, கால்நடைகளுக்கான வைக்கோல் 5 பகுதி, என இருந்ததை வீரிய விளைச்சலில் நெல் மணி 7 பகுதி , வைக்கோல் 3 பகுதியாக மாற்றி விளைவித்துக் கொண்டோம். வைக்கோலின் அளவு குறைந்ததால், தீவனம் இன்மையால், பால் கொடுக்கும் பசுக்களை மட்டும் வைத்துக் கொண்டு, காளைக் கன்றுகள் விற்று, கால்நடைகளைக் குறைத்துக் கொண்ட விவசாயி காலப்போக்கில், பால் வற்றிய பசுக்களையும் விற்கத் தொடங்கி, கால்நடை வளர்ப்பே, பால் உற்பத்திக்கு மட்டும்தான் என்ற அளவில் நிறுத்திக் கொண்டான். எருதுகளின் உழைப்பு, கால்நடைகள் கொடுத்து வந்த இயற்கை உரமாகிய சாணம், தொழுவக் கழிவு, சிறுநீர் அறவே மறக்கடிக்கப்பட்டு நிலம் வறண்ட நிலமாக - மலடாகப் போய்விட்டது. வீரிய விளைச்சல் என்பது இருக்கட்டும். இனி விளைச்சலே கொடுக்குமோ என்று வினா எழுப்பும் நிலைமைக்கு வந்து விட்டது நிலவளம்.

6) பயிர்களுக்குத் தேவையானது வெறும் ஈரம் தான் என்பதைப் புரிந்து கொள்ளாமல், ஆயிரக் கணக்கான ரூபாய் மதிப்புடைய உணவுப் பொருளை விளைவிக்க, லட்சக்கணக்கான ரூபாய் மதிப்புடைய தண்ணீர் வளத்தை வீணாகச் செலவிட்டு, மண்ணுக்கும் மக்கள் சமுதாயத்திற்கும் துரோகம் செய்திருக்கிறோம். அதிகமான நீர் தேக்கத்தினால் மேல் பரப்பு நிலத்தில் உள்ள தாது உப்புகள் கரைந்து பூமிக்கு உள்ளே சென்று விடுவதால், நிலம் "உவர்" நிலமாக மாறி விடுகிறது: வெள்ளத்தில் ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக அடித்துச் செல்லப்பட்ட "தாது உப்புகள்" (Major Minerals) கடலோடு கரைந்து போனபின், எச்சமுள்ள சிறு தாது உப்புகளில் (Minor Minerals) "மங்கனீசு" மட்டுமே இங்கு விளையும் பயிர் வகைகளில் நிறைந்து காணக் கிடைப்பதால், இப்பகுதியில் குழந்தை பிறப்பு மட்டும் குறைவேஇல்லை. தின்று விட்டு கொழுப்பு அடைத்துக் கருக்கூடல் தடைபட்டால் ஒழிய மலடு என்பது வரவே வராது. (நோய் விதி விலக்கு).

ஆக அறியாமையினால், ஆராய்ச்சியாளர்கள் சொல்லித் தராததனால் அரசு அறிவியலை நம்பாததனால், அறிவியல் அறிவு அரச எந்திரத்திற்கு அறவே இல்லாததனால், தேவைக்கு மேலான நீர் பாய்ச்சலால் நிலத்தின் வளத்தை இழந்து, நமக்கு நாமே தீங்கு செய்து வருகிறோம்.

7) தீவிர உணவுப் பெருக்கம் செய்வதாக எண்ணிக்கொண்ட, ரசாயன உரங்களைப் பயன்படுத்தக் கற்றுக் கொடுத்து, மண்ணை நஞ்சு ஊட்டி சாகடித்து விட்டோம், இயற்கை உழவு செய்யும் மண் புழுக்களை கொன்றழித்து விட்டோம். பொல பொலப்பா - புழுதியாக - இருக்க வேண்டிய உயிருள்ள மண்ணை, கட்டி பட்ட பாறையாக்கி உயிரிகள் இல்லாத "செத்தமண்" ணாக்கி விட்டோம்.

இரசாயன உரங்களும், மற்றபடி விவசாயத்திற்குப் பயன்படுத்தும் அனைத்து வித மருந்துகளும் பூச்சிகளை அழிக்க அல்ல, மனித குலத்தை அழிக்க என்பதாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

மாந்தோப்பு, தென்னந்தோப்பு போன்ற தோட்டங்களில், களை எடுத்தல், அல்லது தோப்பினை தூய்மையாக பராமரித்தல் என்ற பெயரில் களைச் செடிகளை வேருடன் பிடுங்கி அழித்து, மரத்திற்குக் கிடைக்ககூடிய இயற்கையான (இலை மக்கு) உரத்தையும் நீக்கி அழித்திருக்கிறோம்.

8) தோல் பதனிடும் தொழிற் சாலை, சாயப்பட்டறை போன்ற தொழிற் சாலைகளிலிருந்து வெளி வரும் "நச்சுக் கழிவு நீர்" கலந்து ஓடிப்பாயும் ஆயிரக்கணக்கான ஏக்கர் பயிர்களையும் நஞ்சு ஏற்றி நாசம் செய்திருப்பதோடு, இந்த வித நீரால் நிலத்தடி நீரையே பயன் படுத்த முடியாத "உதவாக்கரை நீராக" உருமாற்றி வைத்து விட்டோம்.

இது விவசாய நாடு என்று சொல்லிக்கொள்வது உண்மையாக இருந்தால், விவசாயத்திற்கு ஊறு விளைவிக்காத தொழிலாக தொடங்க அரசு விழிப்புடன் செயலாற்றியிருக்க வேண்டும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சார்லி சாப்ளினின் சில பதிவுகள்

■ வினோ

**மாடர்ன் டைம்ஸ் படத்தில்...**

அதன்பிறகு ஒரே ஆண்டில் 35 படங்களில் நடிக்கும் சூப்பர் நடிகராக மாறிவிட்டார் சாப்ளின். இவை அனைத்துமே கிட்டத் தட்ட வெற்றிப் படங்கள்தான். 1916 ஆம் ஆண்டில் சாப்ளின் வாங்கிய சம்பளம் வாரம் 10000 டொலர்கள்!

இன்னொன்று அன்றைக்கே, குறும்படம், இரண்டு ரீல் சினிமா எனப் பெரிய திரைப் புரட்சியையே நடத்திக் காட்டியவர் சாப்ளின்.

நடிகராக இருந்தவர் பின்னர் இயக்கு நராகவும் உயர்ந்தார்.

1919 இல் யுனைட் ஆர்ட்டிஸ்ட்ஸ் நிறு வனத்தைத் தொடங்கினார், நண்பர்களுடன் இணைந்து இந்த பேனரில் வெளிவந்த படம்தான் சிட்டி லைட்ஸ் (1931).

மௌனப் படங்களுக்கு மவுசு குறைந்து, பேசும் படங்கள் வரத் தொடங்கியிருந்த காலகட்டத்தில்தான் (1936) இந்த மாடர்ன் டைம்ஸ் வெளியானது. இந்தப் படத்தில் மற்றவர்கள் பேசினாலும், சாப்ளின் பேசவே மாட்டார். ஆனால் சரித்திரத்தில் பேச வைத்தார் அந்தப் படத்தை.

**கிரேட் டிக்டேட்டர்**

சாப்ளின் சாதனைகளுக்கு சிகரம் என்றால், சர்வாதிகாரி ஹிட்லரைக் கிண்டலடித்து அவர் தயாரித்து இயக்கி 1940 ஆம் ஆண்டு வெளியான தி கிரேட் டிக்டேட்டர். இந்தப் படத்தில்தான் முதல்முதலில் அவர் வசனம் பேசினார்.

ஹிட்லர் சர்வ பலம் மிக்க சர்வாதிகாரி யாக கோலோச்சிக் கொண்டிருந்த கால கட்டத்தில் வெளியான படம் இது என்ப திலிருந்தே, சாப்ளின் என்ற கலைஞனின் ஆளுமை என்ன என்பது புரிந்திருக்கும்.

உலகம் முழுவதும் இந்தப் படம் திரை யிடப்பட்டு, பெரும் பரபரப்பை உண்டாக் கியது. 1952 இல் அவர் லைம் லைட் என்ற படத்தில், சீரியசான வேடத்தில் நடித்தார்.

அவரது கடைசிப் படம் A Countess from Honk Kong (1967). நடித்தவர்கள் மார்லன் பிராண்டோ, சோபயா லாரன். இந்தப் படத்தில் ஒரு சிறிய வேடத்தில் தோன்றுவார் சாப்ளின். அதுதான் அவரது கடைசி திரைத் தோற்றமும் கூட.

**மாடர்ன் டைம்ஸ் சர்வதேச சிறப்புக் காட்சி**

பின்னர் தனது பழைய படங்களுக்கு புத்தம் புதிதாய் இசை சேர்த்து மறு வெளியீடாகக் கொண்டுவந்தார். அப்போதும் அவை பெரும் வெற்றி பெற்றன.

சாப்ளின் மிகச் சிறந்த இசையமைப் பாளர். லைம்லைட் (1952) படத்தின் ஒரிஜினல் ஸ்கோருக்காக சார்லி சாப்ளி னுக்கு ஆஸ்கர் தரப்பட்டது.

இது தவிர 1929 மற்றும் 1972 ஆம் ஆண்டுகளில் அவருக்கு கௌரவ ஆஸ்கர் விருது தரப்பட்டது.

ஆனாலும் உள்ளுக்குள் அவரது ஏக்கம், தனது படங்கள் மூலம், தனது நடிப்புக்காக அந்த ஆஸ்கர் கிடைக்கவில்லையே என்று. அதுவே பல தருணங்களில் ஆஸ்கர் கமிட்டி மீதான கிண்டலான விமர்சனமாகவும் அவரிடமிருந்து வெளிப்பட்டுள்ளது.

**ஆல்பர்ட் ஐன்ஸ்டீனுடன்...**
**லண்டனில் சாப்ளின் சிலை**

உலகம் முழுக்க பெரும் வரவேற்பைப் பெற்ற சிட்டி லைட்ஸ், கிரேட் டிக்டேட்டர் போன்றவை ஓர் ஆஸ்கர் விருதுக்குக் கூடப் பரிந்துரைக்கப்பட வில்லை. காரணம், அவரது அரசியல் நிலைப்பாடுகள் என்கிறது சரித்திரம். இருந்தாலும் பிரிட்டிஷ் அரசு அவருக்கு சேர் பட்டம் வழங்கி கௌரவித்தது.

சாப்ளின் முழுக்க முழுக்க கம்யூனிஸ சித்தாந்தத்தின் ஆதரவாளர். மேற்கத்தேய நாடுகள் அவரை ஒரு கம்யூனிஸ்டாகவே பார்த்தனர். தனது படங்கள் பெரும் பாலானவற்றில் கம்யூனிஸக் கருத்துக் களை போகிறபோக்கில் நச்சென்று



சொல்லிவிட்டுப் போயிருப்பார் சாப்ளின்.

சொந்த வாழ்க்கையில் அவருக்கு நிறைய சோகங்கள். நிம்மதியற்ற குடும்ப வாழ்க்கை. 1918 இல் நடந்த முதல் திருமணம், இரண்டு வருடம் மட்டுமே நீடித்தது. சார்லி சாப்ளின் ஒரு கம்யூனிஸ்ட் தீவி ரவாதி என அமெரிக்க அரசுகுற்றம் சாட் டியது. இரண்டாவது மனைவி ஜோன் பெர்ரியும் சாப்ளின் மீது குற்றச்சாட் டுகளைப் பதிவு செய்திருந்தார்.சாப்ளின் தரப்பு நியாயங்களை அமெரிக்க அரசு கேட்காததால், வேறுவழியின்றி, 1952 இல் சுவிட்சர்லாந்தில் அடைக்கலமானார் சாப்ளின்.

ஆனால் காலம் மாறியது. 1972 இல் அதே அமெரிக்க அரசு, உலகின் தலைசிறந்த நகைச்சுவை நடிகர் விருது பெற சாப்ளினை அழைத்தது. பரிசை ஏற்றுக் கொண்டார். ஆனால் அமெரிக்க குடியுரிமையை மறுத்துவிட்டு, அடைக்கலம் கொடுத்த நாட்டுக்கே திரும்பினார்.

இந்தச் சோகங்களை அவர் காட்டிக் கொண்டதில்லை. 1977 இல் ஒரு கிறிஸ்துமஸ் தினத்தன்று தனது இறுதி மூச்சு அடங்கும் வரையிலும் மக்களைச் சிரிக்க வைத்து சிந்திக்க வைக்கும் பெரும் முயற்சியைத் தொடர்ந்து கொண்டே இருந்தார் அந்த ஒப்பற்ற கலைஞன்.

(முற்றும்)

# பெற்றோர்களைப் பிள்ளைகளே பராமரிக்க வேண்டும்

06

(நாம் ஒவ்வொருவரும் எமது பெற் றோரைப் பாதுகாக்கவும், மகிழ்ச்சிப்படுத் தவும் நேரத்தை ஒதுக்கி தயார்படுத்தலில் ஈடுபடவேண்டும். ஏனெனில் முதிய வர்கள் பிள்ளைகளைத் திருமணம் செய்து கொடுத்த பின்னர் அவர்களில் ஒருவருடன் சேர்ந்து வாழும்போது அல்லது தனித்து வாழும்போது அதிக பிரச்சினைகளுக்கு சமூகத்தில் முகங் கொடுக்கின்றனர் என்பதை மனம் கொண்டு சிந்திக்கவேண்டும். ஆரோக் கியமான வளர்ச்சிமிகு சமுதாயத்தின் திறவுகோலாக நாகரிகம் உள்ளது. இந்த நாகரிகத்தின் தூண்கள் என மார்தட்டிக் கொள்ளும் நாம் இதைச் செய்ய முடியாவிடில் அனுதாபத்திற்குரியவர்கள்.

எண்ணிப்பார்க்கும் சிந்தனையுடன் ஆறாம் நாள் முதியோர் வார இறுதிப் பயணத்தின் பயணிப்பில் இணைந்து கொள்வோம்.)

வைகாசி மாதத்தின் அனல்காற்று அலங்கோலமாக வீசிக்கொண்டிருந்தது. கண்களினுள் மண்துகள்கள். அமர்ந்து கொள்ள இடம்தேடிக்கொண்டிருந்தன. முதியோர் இல்லத்தின் வாயில் கதவு களையும் புழுதிமழை விட்டுவைக் கவில்லை. கடும் காற்றில் தங்களது அங்கங்களை முறுக்கியபடி மரங்கள் வளைந்து நெளிந்து கொண்டிருந்தன. படுத்தபடுக்கையாகி ஒருமாதத்தை நிறைவு செய்யும் அந்த முதியவரின் இறுதி மூச்சு நின்ற செய்தி அவ்விடம் வரை கொண்டு சென்று நிறுத்தியது.

திருகோணமலையிலிருந்து நான்கு வருடங்களுக்கு முன் வந்தவர் வெளி நாட்டு வாழ்க்கையை முடித்து வந்த வருக்கு குடும்பம் இடம்தரவில்லை. குடும்பத்தின் விரட்டியடிப்புடன், வருமான மற்றவன் என்ற பட்டத்தையும் சூடிக்கொண்டு இங்கு வந்தவர். திருமணம் முடிக்க முடி யாத சூழலுக்கு அவருக்கு பட்டமளிப்பு ஊரில் விமர்சையாக நடத்தப்பட் டுள்ளது. வறண்டு போன இதயமும், ஒடிந்து போன ஒரு கையும் அவரின் நிரந்தரமான சொத்துக்களாக இருந்தன.

உறவுகளின் முகவரிகளைத் தேடும் முயற்சிகள் பயனற்று முற்றுப்பெறு கின்றன. யாரும் இல்லை. வண்ணார் பண்ணையிலிருந்து நண்பன் என ஒருவர் வந்து சென்றார் என்கிறார்கள். அவரும் நட்பின் எல்லைக் கோட்டுடன் மட்டும் நின்றுவிட்டார் என அறியமுடிகிறது.

இப்போது ஒலிபெருக்கியில் இறந்த வரின் விவரங்கள் ஒலியாக உருமாறிக் கொண்டிருக்கின்றன. அனைத்து முதிய வர்களும், உத்தியோகத்தர்களும் எழுந்து நிற்கின்றார்கள். கண்களை மூடிக் கொண்டு யாருமில்லை என்று எண்ணிய அந்த ஆத்மாவின் சாந்திக்காக ஒருநிமிட மௌன அஞ்சலி செலுத்தப்படுகின்றது. இல்லத்தின் மூலைமுடுக்குகளில் கிடந்த நாய்களும், பூனைகளும் கூட அண்ணார்ந்து பார்த்துக்கொண்டன. அவருடன் அந்த அறையில் இருந்த மற்றைய ஐந்துபேரும் என்னைப்பார்த்த பார்வை என்னுள் ஆயிரமாயிரம் உணர்வுகளை ஊறவிட்டது போலிருந்தது. அமைதியின் அத்தியாயம் முடிக்கப்ப டுகின்றது, அடுத்த செயலமர்வின் விட யங்கள் உயிர்ப்பித்துக் கொள்ளப்படு கின்றன. பூதவுடலை சுமந்து தீர்த்த அந்த சிறியரக டிராக்டர் இயந்திரம் வாசல்வரை வந்து உறுமிவிட்டு மரணித் துக்கொண்டது. சிறிய பிள்ளையை தூக்குவதைப் போல உத்தியோகத்தர்கள் அந்த உடலை தூக்கியபடி லான்ட் மாஸ ரரில் ஏற்றுகிறார்கள். சவஅறை அவரது உடல் இறுதியாத்திரைக்கு தயாராவதற்காக இப்போது காத்திருக்கின்றது.

அரச செலவில் தகனக்கிரியைக்கான வேலைகள் முனைப்படைகின்றன. கட்ட ளைகள் அங்குமிங்கும் பிறக்க உத்தியோ கத்தர்களின் வேலை வீச்செல்லை நீண்டு போகின்றது. அனைவரினதும் உடல்கள் அங்குமிங்கும் அலைந்து திரிகின்றன. இறுக்கமான முகமும், சிந்தும் வியர்வைத் துளிகளும் நடந்து சென்ற சோக நிகழ்விற்கு மெருகேற்றிக் கொண்டிருந்தன. அங் கொன்றும் இங்கொன்றுமாக முதியவர்கள் தூண்களின் மறைவுகளில் நின்று கொண்டு தேவாரங்களை முணுமுணுத்துக் கொண்டி ருந்தார்கள்.

எத்தனையோ வேடங்களை தாங்கிய மனித வாழ்க்கை இன்று கிளைமெக்ஸ் காட்சிக்காக அலங்கரிக்கப்பட்டுக் கிடந்தது. இறுதிக் காலத்துக்காக காத்திருக்க இங்கு வந்தோம் என்ற முதியவர் ஒருவரின் குரல் என்னுள் வந்தமர்ந்து மரணித்துக் கொண்டது. தொகை வகையான ஏக்கங்கள் அனைவரின் - முகங்களிலும் தொக்கி நின்றது. மரணித்த அந்த மனிதனின் உதடுகள் மட்டும் மகிழ்வாகக் கிடந்தன.

கொடூரமான மனிதனை இறுதியில் நினைத்தாரா? தனக்கு பட்டமளிப்பு விழா நடத்தி துரத்தியடித்த மனிதர்களை நினைத்தாரா? இல்லை இதுவரை தனக்கு பணிவிடை செய்த உத்தியோகத்தர்களை நினைத்தாரா? புரியவில்லை.

ஏதோ ஒருவித உணர்வில் மறைந்து போன அந்த உயிர், தனது இறுதி மூச்சி லேனும் மகிழ்வைக் கண்டுகொண்டு விட்டது. இறைவனின் படைப்பில் பொது [illegible] இல்லாமல் போவது வேதனையைத் தருகிறது. மனிதனின் இயலுமை என்பது



க.கிருபாகரன் அத்தியட்சகர்
அரச முதியோர் இல்லம் கைதடி.

முதுமையில் முற்றுப்புள்ளியாகி விடு கின்றது. இந்தத் தருணத்தில் மனிதகுலம் பாராமுகம் காட்டுவது தான் நாகரிகமா? சிந்தித்துப் பார்க்க வேண்டும். உயிர்களை மதித்து, உணர்வுகளை பிரித்து வேதனைகளை ஒறுத்து வாழ்வதற்கு வழிகாட்ட வேண்டும். இது ஒவ்வொரு மனிதனினதும் கடமையாகும். இயலாமை என்பதை அழித்து இயலுமை என்பதை நுழைத்து இதுகாலும் வாழாவிட்டாலும், இனியாவது வாழத் தலைப்படுவோமா? என்ன செய்வது எனச் சலித்துக் கொள்ளாதீர்கள். என்ன செய்யலாம் என எண்ணிப்பாருங்கள்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(கடந்த வாரத் தொடர்ச்சி)



# மாயக் கிழவி

செய்தி அறிந்த பலரும் அந்தச் சூனியக்காரியைத் தேடி அலைந்தார்கள். ஆனால், எவராலும் கண்டுபிடிக்க முடியவில்லை. அப்போதுதான் வெளிநாட்டில் வசிக்கும் ஷாகித் என்ற இளைஞன் அந்தத் தகவலை அறிந்தான். ஷாகித் அன்றே சூனியக்காரியைத் தேடிப் புறப்பட்டான். அவனுக்கு அதிர்ஷ்டமும் இருந்தது. அவன் நீரூற்றை நெருங்கியபோது பாட்டி அங்கே இருப்பதைப் பார்த்தான். பாட்டி ஒரு பாறையில் சாய்ந்து தூங்கிக்கொண்டு இருந்தாள். பக்கத்தில் இருந்த மூட்டையில் முத்துமாலையும் இருந்தது.

இப்படிப்பட்ட ஒரு முத்துமாலைதான் இளவரசியைக் கிழவியாக மாற்றி இருக்கும். நான் இந்த மாலையை அணிந்து ஒரு கிழவன் ஆகிறேன் என்று நினைத்தான் ஷாகித். நொடிப் பொழுதில் அந்த மாலையை எடுத்து அணிந்துகொண்டு கிழவன் ஆகிவிட்டான்.

அப்போது பாட்டி கண் விழித்தாள். முத்துமாலையையும் இளைஞனையும் பார்த்து ''நீ ஏன் இந்த மாலையை அணிந்து கிழவன் ஆனாய்?'' என்று கேட்டாள்.

ஷாகித் தந்திரமாகப் பேசினான் ''மன்னிக்க வேண்டும். நான் ஒரு ஏழை. எனக்கென்று யாரும் இல்லை. எனவே மிகவும் சீக்கிரம் இறந்துவிட விரும்புகிறேன். கிழவன் ஆகிவிட்டால் சீக்கிரம் இறந்துவிடலாம் என்று முத்துமாலையை அணிந்துகொண்டேன். ஆனால் இப்போது நான் செய்தது தவறு என்று புரிகிறது'' என்று சொல்லி போலியாக அழுதான்.

பாட்டிக்கு அவன் மீது இரக்கம் ஏற்பட்டது. ''தம்பி வருத்தப்படாதே. உனக்கு நான் உதவி செய்கிறேன்'' என்று சொல்லி வேறு ஒரு முத்துமாலையைக் கொடுத்தாள். அவன் அதை அணிந்ததும் முன்பு இருந்ததுபோன்று இளைஞனாக மாறினான். பிறகு பாட்டிக்கு நன்றி சொல்லி புறப்பட முற்பட்டான்.

அப்போது பாட்டி ''நீ இப்போது எங்கே செல்கிறாய் என்று எனக்குத் தெரியும். ஆனால், இளவரசியின் கழுத்தில் இந்த முத்துமாலையை அணிவிப்பதற்கு முன்பு அவளுக்குச் சாட்டையால் பத்து அடி கொடுக்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் அவள் பழைய உருவத்தைப் பெறுவாள்'' என்றாள்.

அரண்மனையை அடைந்த ஷாகித் ''ராஜாவே, எனக்கு அனுமதி கொடுங்கள். உங்கள் மகளை முன்பு இருந்தது போன்று அழகி ஆக்குகிறேன்'' என்று ராஜாவிடம் சொன்னான்.

ராஜா உடனடியாக அவனைத் தன் மகளிடம் அழைத்துச் சென்றான். ஷாகித் தன் கையில் இருந்த சாட்டையால் இளவரசியை அடிக்கத் தொடங்கினான். பாவம் இளவரசி! வேதனை தாளாமல் துடித்தாள்.

மகள் படும் துன்பத்தைப் பார்த்து மனம் கலங்கிக் கண்ணீர் வடித்தார் ராஜா. அடிபட்ட இளவரசி மயங்கி விழுந்தாள். அந்த நேரத்தில் ஷாகித், பாட்டி கொடுத்த முத்துமாலையை இளவரசியின் கழுத்தில் அணிவித்தான். அடுத்த நொடியே அவள் பேரழகியாக எழுந்தாள்.

ராஜா மகிழ்ந்தார். ''இளைஞனே, நீ அந்த சூனியக்காரியையும் பிடித்துக்கொண்டு வந்தால் உனக்கு ஆயிரம் தங்க நாணயங்கள் பரிசளிக்கிறேன்'' என்றார்.

அப்போது இளவரசி முன்னால் வந்து ''வேண்டாம் அப்பா. என் ஆணவப் பேச்சுதான் ஆபத்தில் சிக்க வைத்தது. அந்தப் பாட்டிக்குத் தண்டனை கொடுக்க வேண்டாம். என்னைக் காப்பாற்றிய இவருக்கு உடனே பரிசு கொடுக்க வேண்டும். அதோடு, இவரையே நான் திருமணம் செய்துகொள்ளவும் விரும்புகிறேன்'' என்று சொன்னாள்.

அவள் விருப்பத்துக்கு ராஜாவும் சம்மதம் தெரிவித்தார். ஷகானா மற்றும் ஷாகித்தின் திருமணம் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

# காலத்தை வென்ற காந்தி அடிகள்



★ 1869 ஆம் ஆண்டு ஐப்பசி 2 ஆம் நாள் மோகன் தாஸ் கரம் சந்த் காந்தி போர்பந்தரில் பிறந்தார்.
★ அவரது தந்தை காபாகாந்தி போர்பந்தரின் பிரதம மந்திரியாக இருந்தார்.
★ மோகன் தாஸின் தாய் புத்திலி பாய் மதப்பற்று மிகுந்தவர்.
★ ராஜ் கோட்டில் மோகன் தாஸின் பள்ளி வாழ்க்கை ஆரம்பமானது.
★ காந்தியின் வயது ஏழாவதற்குள் 3 முறை நிச்சயதார்த்தம் செய்யப்பட்டதாம்.
★ 19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் 7 பஞ்சங்களும் பிற்பகுதியில் 22 பஞ்சங்களும் ஏற்பட்டு பாரத மக்களைத் துன்பத்துக்குள்ளாக்கியது.
★ காந்தி அடிகள் 110 நாள்கள் சத்தியாக்கிரகப் போராட்டத்தை நடத்தினார்.
★ 1924 செப்டெம்பரில் கோஹாத் என்ற இடத்தில் இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் கலவரம் ஏற்பட்டது.
★ டில்லியில் இருந்த முகம்மதலி வீட்டில் 21 நாள்கள் உண்ணாவிரதம் இருந்தார்.
★ மகாத்மாகாந்தி 20 நூற்றாண்டின் மா மனிதராய் திகழ்ந்தார்.

கு.அஸ்வினி,
தரம் - 5 சி, யா/ புனித ஜோண் பொஸ்கோ வித்தி.

# மிருகங்கள் பறவைகள் பற்றி அறிந்து கொள்வோமா?

1. கால்கள் அற்ற பிராணிகள்?
   மண்புழு, நத்தை, பாம்பு
2. மண்ணுள் வாழும் பிராணிகள்?
   மண்புழு, கறையான், எறும்பு
3. உணவைச் சேமித்து வைக்கும் பிராணிகள்?
   எறும்பு, தேனீ
4. இரவு வேளையில் நடமாடும் பிராணிகள்?
   வெளவால், நுளம்பு, ஆந்தை, மின்மினிப்பூச்சி
5. வெள்ளை நிற முட்டை இடும் பிராணிகள்?
   பல்லி, ஆமை, முதலை, உடும்பு, கிளி
6. மஞ்சள் நிற முட்டை இடும் பிராணிகள்?
   நத்தை, எறும்பு
7. மிகப் பெரிய முட்டை இடும் பிராணி?
   தீக்கோழி
8. பறக்க முடியாத பறவைகள்?
   தீக்கோழி, கிவி, பென்குயின்
9. நீரில் முட்டையிடும் பிராணிகள்
   தவளை, நுளம்பு
10. சமூகமாக வாழும் பிராணி?
    தேனீ, கறையான், எறும்பு, குளவி
11. முட்டையிட்டு குஞ்சு பொரிக்க கூடுகட்டும் பறவைகள்?
    காகம், புறா, தூக்கணாங்குருவி, கொக்கு, கழுகு
12. குட்டியீனும் மீன்கள்?
    திருக்கை, டொல்பின், திமிங்கிலம்
13. நீரிலிலும் நிலத்திலும் வாழும் விலங்குகள்?
    தவளை, தேரை, முதலை, ஆமை
14. மிக வேகமாக ஓடக்கூடிய பறவை?
    தீக்கோழி
15. மனிதனின் குருதியை உறிஞ்சும் பிராணிகள்?
    நுளம்பு, மூட்டைப்பூச்சி, பேன்.

சா.ஜிந்துஜா,
கோண்டாவில்.

# அறிந்து கொள்ளுங்கள்

1.வாகன புகையில் அதிகம் உள்ள வாயு
காபன் மொனக்சைடு
2.பழங்களை பழுக்க வைக்க பயன்படும் வாயு
எதெலின்
3.பற்பசையில் பயன்படும் இரசாயனப் பொருள்
கல்சியம் காபனேற்
4.பலூன்கள் பறக்கதேவையான வாயு
ஹீலியம்
5.சாணம் எரிக்கும் போது வெளியேறும் வாயு
மீதேன் ,காபன் டையக்சயட்

சி.ஹரிகரன்
யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை.



# இயற்கை வளம்







நட்பினைப் போல் நம்முடன் பின்னிப்பிணைந்ததும்
நமது துன்பம் போக்குகின்றதும்-இயற்கையே
மரஞ்செடி கொடிகள் மட்டுமன்றி
மலைகள் ஆறுகள் நீர்வீழ்ச்சிகளும் இயற்கையே
இயற்கை வளம் கொழிக்கும் அழகை
இரசிப்பதன் மூலமும் பாதுகாப்போம்
அன்னை தந்தை நம்மை அரவணைக்க
அன்பான சிறுவர்கள் நாம் இயற்கையே அரவணைப்போம்
துர்ப்பாக்கிய வேளைகளிலும் -அதிலிருந்து
துல்லியமாய் தப்பிடவே துணை புரியும்
மலைகள் முதல் மரங்கள் வரை
மருவி வரும் இயற்கை வளங்களை
இல்லை இல்லை இயற்கை போன்ற
இனிமை அழகு இறைவன் படைப்பிலே -என
இரங்கி இயற்கை வளத்தை காத்திடுவோம்.

நா.விபீசண்யா, யா.சாவகச்சேரி இந்துக்கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(கடந்தவாரத் தொடர்ச்சி.....)



■ அருணா.தர்மலிங்கம்

சுண்டுவிரல் கட்டையாக இருக்குமானால் தான் போட்ட திட்டத்தை எப்படியும் நிறை வேற்றியே தீருவார் . மனி தர்களில் பெரும்பாலானோருக்கு கைகளின் அமைப்பு வெவ்வேறாகவே அமைந்து காணப்படும்.

# விசித்திரப் பெருவிரல்

எதிர்காலத்தில் இது குற்றவாளிகளை இலகுவில் இனங்கான உறுதுணை புரிகின்றது என்பது வெள்ளிடை மலை. சிலவேளைகளில் சம்பந்தப்பட்ட திணைக்களத்தினரால் இடது, வலது கைகளில் உள்ள எல்லா கைவிரல் ரேகைகளையும் பதிவு செய்வதுமுண்டு. ஆனால் எச்சந்தர்ப்பத்திலும் உள்ளங்கை ரேகைகளை பதிவு எடுத்ததாகத் தெரியவில்லை.

பெருவிரலை மட்டுமே அறிந்து கொண்டால் போதாது. மற்றைய நான்கு விரல்களின் வடிவங்களையும் அறிந்து வைத்திருப்பது நமக்கு நல்லது. முதலில் ஆள்காட்டி விரலை பார்ப்போம். ஆள்காட்டி விரலானது ஏனைய விரல்களை விட நீளமாக இருக்குமானால் அவர்களுக்கு பிறரை ஆட்டிப் படைக்க வேண்டும் என்ற ஆதங்கம் உள்ள வல்லமை இருக்கும். தானே உயர்ந்தவன் என்ற இறுமாப்பு கொண்டவராக திகழ்வர். எதிலும் புரட்சி வேண்டும் என்ற மனப்பான்மை உள்ளவராக இருப்பர். ஆள்காட்டி விரல் மற்றைய விரல்களை விட குட்டையாக இருந்தால் இவர்கள் எந்தப் பொறுப்பையும் ஏற்க மாட்டர். எதிரியைக் கண்டு கிலி கொள்வர் எதிர்த்து நிற்கப் பயப்படுவர். நடுவிரல் நீளமானதாக இருக்குமானால் அவர்களுக்கு சூட்சும புத்தியிருக்கும். மோதிர விரல் நீளமானதாக இருக்குமானால் அவர்கள் எந்தக் காரியத்திலும் மற்றையவர் தன்னை புகழ வேண்டும் என்ற விருப்பத்தை கொண்டிருப்பர். மற்ற விரல்களை விட சுண்டு விரல் சற்று நீளமாகக் காணப்படின் பேச்சுத் திறமை இருக்கும். நல்ல அறிவு மனோநிலை மேலோங்கிய நிலை ஏற்படும்.

சுண்டுவிரல் கட்டையாக இருக்குமானால் தான் போட்ட திட்டத்தை எப்படியும் நிறை வேற்றியே தீருவார் . மனி தர்களில் பெரும்பாலானோருக்கு கைகளின் அமைப்பு வெவ்வேறாகவே அமைந்து காணப்படும். அவைகளை ஏழு பிரிவுகளில் உள்ளடக்கலாம். அவையாவன அடிப் படைக் கை, சதுரக்கை, நீள் சதுரக்கை, தத்துவக்கை, கூர் மைக்கை, மனோபியல் கை, கலப்புக்கை என்பனவாகும் விரல்களின் முனைகளில் தெய்வீக சக்தி நிறைந்துள்ளதாக ஞானிகள் கூறுவார்கள். அதன் காரணமாகவே பெரியோர் விரல் நுனியினால் தலையைத் தொட்டு ஆசி கூறி வருவதைக் கடைப்பிடிக்கின்றனர். இந்து ஆன்மிகவாதிகள் ஆள்காட்டி விரலை குருவிரல் என்றும், சனிவிரலென்று நடுவிரலையும், மோதிரவிரல் சூரியவிரலென்றும், சுண்டுவிரல் வீரவிரலென்றும் கணித்துள்ளனர்.

ஒருவரது கரத்தில் சிறு விரலானது மோதிர விரல் அளவுக்கு நீண்டிருக்குமானால் அவர் ஆயுள் நூறு ஆண்டுகள் வரை நீடிக்கலாம். நடுமத்திக்கு கீழாக விரலின் அளவு இறங்க இறங்க அவருடைய வயதில் பத்து வருடங்கள் குறைத்துக் கணக்கிடப் படுகின்றன.

எனவே பெருவிரல் அடையாளம் குற்றவாளிகளைக் கண்டு பிடிக்க ஏதுவாக அமைகின்றது என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகும். அதே வேளை விரல்களின் தோற்றம் மனிதனின் எதிர்காலத்தை நன்கு வெளிப்படுத்துகின்றது.

எது எப்படியோ விசித்திர உருவமைப்பை தன்னகத்தே கொண்டுள்ள கை பெருவிரல் ரேகையானது, மனித குலத்தின் இயக்கத்திற்கு மிகவும் இன்றியமையாது எனவும் கொள்ளலாம்.

■ நன்றி: தினமணி

# 'ஒரு நொடி'

## ஒஷோ சொன்ன ஜென் க



ஒரு ஊரில் ஒரு முரடன் இருந்தான். ஒரு நாள் அவன் தன் மனைவியை ஒரு
செய்ததற்காக கிணற்றில் தள்ளி கொன்று விட்டான். அவனிடம் எவரும் பேச
அவனுக்கு அவன் தவறை எடுத்து சொல்லும் தைரியம் எவருக்கும் இல்லை. தம்
பயந்து எல்லோரும் வாயை மூடிக் கொண்டார்கள். ஒருநாள் அந்த வழியால் ஒரு
போனார். சொத்து என எதுவும் வைத்துக்கொள்ளக்கூடாது என்பதால், அவர் உ
உடுக்காமல் நிர்வாணமாக வாழ்பவர்.

அவன் அவரிடம் ஓடி வந்து ''நான் தவறு செய்து விட்டேன், என் கோபத்தால்
மனைவியை கொன்று விட்டேன். எனக்கு இந்த கோபத்தை குறைக்க வழி தெரி
நீங்கள் சொல்லுங்கள்'' என்றான். அவர் சிரித்துக் கொண்டே அவன் பெயரைக் கே
அவன் 'சாந்தன்' என்றான். அவர் சிரிப்பு இன்னும் பெரிதானது. அவனுக்கு கோ

# பறவைகள் பற்றி

நாம் பார்த்து பொறாமைப்படும் இனங்களில் பறவை இனம்தான் முதலில் இருக்கும். சுதந்திரத்திற்கு பெயர்போன பறவை இனங்களைப் பற்றிய சில தகவல்களை இங்கே காணலாம்.

பொதுவாக பறவைகள் பற்றிய ஆராய்ச்சியில், பறவைகளின் கால்களில் சிறு வளையத்தை மாட்டிவிட்டு, அதன் மூலம் பறவையினங்களின் வாழ்வியல் முறை, நடமாட்டம், ஆயுள், இனவிருத்தி போன்றவற்றை ஆய்வு செய்கின்றனர்.

கால்களின் அளவுக்கு ஏற்ப சிறிய மெட்டி போன்று இந்த வளையம் அமையும். இந்த வளையத்தில் சில குறியீட்டு தகவல்கள் இருக்கும். இதுபோன்று வளையமிட்ட பறவையைப் பார்க்கும் பறவை ஆர்வலர்கள், இந்த வளையத்தில் இருக்கும் குறியீட்டைக் கொண்டு, வளையத்தை மாட்டியவர்களை தொடர்பு கொண்டு பேசும் போது பறவை தற்போது, எந்த இடத்தில் இருக்கிறது

என்பதை அறிந்து கொள்ள

இனி பறவைகளைப் ப

ஆஸ்திரேலியாவில் எ

பறவை ஒன்பது நிறத்தில்

கடல் புறாக்கள் நீரி

தூங்கும்.

பச்சோந்தியின் கண்க

கொண்டே இருக்கும்.

மரங்கொத்திப் பறவை

20 தடவைகள் கொத்தும்.

குவாரின் என்ற பறவை

புறா ஓய்வெடுக்காமல்

வரை பறக்கும் திறன் பை

ராஜஸ்தான் பறவைக

வீதத்தில் 4 பறவை இன

நீரை உறிஞ்சிக் குடிக்கு

ஒரே சமயத்தில் நூ

முட்டைகளை இடும் பற

மிகப் பெரிய நீர்ப்பற

வெட்டுக் கிளியை வே

மைனா. வான்கோழிக

பூர்வீகமாகக் கொண்டவை.

நியூசிலாந்து நாட்டில் கா

பறவைகளின் மன

திரைப்படப் பாடல் ஒ

# வாழ்க்கை சுமையல்ல



உன் நண்பர்களைச் சொல்; உன்னைப் பற்றிச் சொல்கிறேன் என்பார்கள். ஒருவன் படிக்கும் புத்தகங்களை வைத்து அவனைப் பற்றிச் சொல்லிவிட முடியும் என்றும் சொல்வார்கள்.

இவ்விரண்டு அற்புத வார்த்தைகளும், தனி மனிதர்களின் பண்புகளையும் குணங்களையும் இலட்சியங்களையும் வரையறுப்பதை மையக் கருத்துகளாகக் கொண்டுள்ளன. மேலும், நண்பர்களையும் புத்தகங்களையும் ஒரே தகுதியாக்கி, வாழ்க்கைப் பாதையில் புத்தகங்களின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றன. இங்கே புத்தகங்கள் என்னும் சொல்லில், இதழ்களையும் உள்ளடக்கிக் கொள்வது, இன்றைய சூழலுக்கு ஏற்புடையதாகும்.

சில இதழ்களும் புத்தகங்களும் படித்துவிட்டு எடைக்குப் போடப்படும். அவை அத்தகைய தன்மைகளைக் கொண்டிருக்கும். சில, பிடித்த பிறகு, மறுபடியும் படிக்கவும் பயன்பெறவும் பாதுகாத்து வைக்கப்படும். அவை ரசனை மற்றும் தொழில் அடிப்படையில் அவசியமானவையாக இருப்பன. சில அடுத்த தலைமுறைக்கும் சேகரித்து வைக்கப்படும். அவை வாழ்வியல், கலாசாரம், அரசியல், அறிவியல், சமூக அக்கறை ஆகிய பன்முக அறிவுத் தேடலின் தளமாக இருக்கும்.

சில புத்தகங்கள் மகிழ்ச்சியைத் தரும். சில கண்ணீரை வரவழைக்கும். சில கோபமூட்டும் அல்லது எழுச்சியூட்டும். ஆனால், நல்ல புத்தகம் எதுவும் சோம்பலைக் கொடுக்காது; [illegible] தலைக்காது; தன்னம்பிக்கையைத் [illegible]களுக்குத் தூண்டாது; நாடு மற்றும் மக்கள் மீதான பற்றினைக் குறைக்காது

லட்சியவாதிகளில் மி

வாரிசுகளுக்கான சொத்தாக, ந

புத்தகங்களையும் மட்டுமே

விதிவிலக்கானதாகச் சொல்லப்

சுயநலமற்ற உயர்ந்த செய

விமர்சிக்கப்படவும் வேண்

பணத்தால் பெற முடியாத

கொள்கைகளையும் புத்தகங்க

அனைத்து கலைகள

இலக்கியத்திலும் நல்லது உ

மற்ற ஊடகங்களைப் போன்றே

நன்மை, தீமை ஆகிய இரண்டு

இவ்விரு முரண்பாடுகளையும்

படிப்பறிவு மட்டுமே போதும

பகுத்தறிவும் பட்டறிவும் அ

அவற்றைப் பெற வேண்டுமெ

தைப் பற்றிய ஆழ்ந்த புரிதலும்

பண்படுத்தலும் முன்தேவை

தேவைகளை நிறைவு செய்

னைகளாக, தேசபக்தியும் மக்க

நாட்டமும் அடிப்படை அம்ச

அந்த வகையில், நாம் தே

புத்தகங்கள், நமது கொள்கை

யாக இருக்கலாம்; நமது சி

னதாகவும் இருக்கலாம். பல்வே

கொள்ளும் முகமாக, பரவ

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அடக்கிக் கொண்டான். ''கோபத்தை வெல்ல வேண்டுமானால் நீ எல்லாவற்றையும் துறக்க வேண்டும். இந்த உலகத்தில் இருக்கும் எதுவுமே உனக்கு சொந்தமானதல்ல'' என்றார்.

அவன் உடனே அனைவரும் ஆச்சரியப்படும்படி, அவன் தன் உடை அனைத்தையும் கழற்றி அதே கிணற்றுக்குள் போட்டான். இனி அவர் போலவே வாழ்வதாக சபதமேற்றுச் சென்றான்.

அதன் பின் அவனைப் பற்றிய விதவிதமான செய்திகள் வெளிவந்தன. அவனைத் தரிசிப்பதே புண்ணியம் என உலக மக்கள் எண்ணினார்கள். 20 வருடங்கள் கடந்தன. அதே ஊரில் இருந்து ஒருவன் தூர தேச பயணம் ஒன்று மேற்கொள்ளும் வழியில் சாந்தன் தங்கியிருப்பதாக கேள்விப்பட்டு அவனைக் காணச் செல்கிறான்.

இவனுக்கு சாந்தன் முகம் இன்னும் குரூரமாகவே பட்டது. சாந்தன் அவனை அடையாளம் கண்டு கொண்டாலும் தன் தகுதிக்கு குறைவென எண்ணி கண்டுகொள்ளாதது போல நடித்தான். அவன் அகத்திரையை கிழிக்க வேண்டும் என நினைத்தான்.

''உன் பெயர் என்ன'' என கேட்டான்

இப்போது சாந்தன் நடிக்க விரும்பவில்லை.

''நான் தான் சாந்தன்'', என்றான்.

''அட சொன்ன உடன் உங்கள் பெயர் நினைவில் நிற்க மறுக்கிறதே, திரும்ப சொல்லுங்கள்'' என்றான்.

''நான் சாந்தன், உன் ஊர்க்காரன் தான்'',

''ஓ என்ன பெயர் சொன்னீர்கள்?''

என்று கேட்டதும் , கத்தியை எடுத்த சாந்தன் ''இன்னொரு முறை கேள் நான் யாரென்று காட்டுகிறேன், நான் என் மனைவியைக் கொன்ற அதே சாந்தன்'' என்றான். ''ஆம் அதே சாந்தன் தான்'' என சொல்லிவிட்டு இவன் எழுந்து போய் விட்டான்.

நீதிக்கான பல வருட உழைப்பு வீணாகப்போக ஒரு நொடி கோபமே போதுமானது



போடாதே என்ற திரைப்படத்தில் வரும் பாடலின் ஒரு சில வரிகள்.

**''கடல் தாண்டும் பறவைக்கெல்லாம்**
**இளைப்பாற மரங்கள் இல்லை.**
**கலங்காமலே கண்டம் தாண்டுமே..''**

இதை நினைத்துத்தான் நாம் நமக்கு வரும் சோதனைகளைச் சாதனைகளாக மாற்றிக் கொள்ள வேண்டும்.

படிப்பதே, உயர்தர வாசிப்புப் பண்பாடாகும்.


இது, 'களவும் கற்று மற' என்பதைப் போன்ற சீரழிவுக்கான தூண்டுதல் அல்ல. மாறாக, 'சென்றிடுவீர் எட்டுத் திக்கும்; கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்' என்னும் மகாகவி பாரதியின் பாடல் வரிகளை வழிமொழிந்து, நம்மைச் சீர்படுத்திக் கொள்ளவும் நேர்படுத்திக் கொள்ளவும் முன்மொழிவதாகும்.

எனவே, புத்தகங்களைப் படிப்பதற்காகக் காலத்தைச் செலவழிப்பது, வீணாகப் பொழுதுபோக்குவதல்ல. புத்தகங்களை வாங்குவதற்காகப் பணத்தை இழப்பது, பணத்தை விரயமாக்குவதல்ல. ஏனெனில், புத்தகங்களைப் படிப்பது, மனிதர்களைப் படிப்பதாகும்.

ஆகவே, வருமானத்தில் ஒரு பகுதியை, புத்தகங்களுக்காக ஒதுக்க வேண்டும்; மற்றவர்களுக்கும் படிக்கத் தர வேண்டும். உறவினர்கள் மற்றும் நண்பர்கள் ஆகியவர்களுக்கு, அன்பளிப்போ நினைவுப் பரிசோ வழங்க வேண்டிய சந்தர்ப்பங்களில், புத்தகங்களைக் கொடுத்து, வாசிப்புப் பண்பாட்டினை வளர்த்தெடுக்க வேண்டும். சமுதாயத்தைச் சீரழிக்கும் நுகர்வுக் கலாசாரத்திலிருந்து விடுபட்டு, நல்ல புத்தகங்களைப் போற்றும் நாகரிக சமூகத்திற்கான வழி காணவேண்டும்.

ஏனெனில், நல்லவற்றை விரும்பும் எவருக்கும், புத்தகங்கள் சுமையல்ல; சுகமானவையாகும். மேலும், வாழ்க்கைத் தேவைகளில் முதல் வரிசையில் இடம் பெறத்தக்க வகையில், புத்தகங்கள் இன்றியமையாதவையாகும்.

# அழியாத கோட்டுருவங்களும்... அழிந்துபோன நாஸ்க்கா இனமும்...




மரங்களை வெட்டி காடுகளை அழிப்பது. இயற்கை வளங்களை சுயநலத்திற்காக சுரண்டுவது. ஆறுகளை குப்பை மேடாக்குவது.

நமது நிலமும் இதுபோல நீரில்லாத பாலைகளாக மாறாமல் காக்கப்பட வேண்டும். 'நாஸ்க்கா' பெரு நிலப்பகுதியில் வாழ்ந்த பூர்வகுடி இனத்தவர்கள். 'பெரு' தென் அமெரிக்காவின் மேற்கு கரையோர நாடு. இவர்களை இகா வம்சா வளியினர் எனவும் சொல்கிறார்கள்.

நாஸ்கா எனும் நதி பெருவில் மேற்கிலிருந்து கிழக்காக பாயும் நதிக்கூட்டம் என்று சொல்லலாம். இந்த நதிகள் மற்ற நதிகளில் இருந்து வித்தியாசமானது. திடீரென்று நிலத்தினுள் சென்றுவிடும், இன்னோர் இடத்தில் நிலத்தில் இருந்து வெளியில் புறப்பட்டு செல்லும் விநோதம் மிக்கது. கற்பனை செய்து பாருங்கள் நிரந்தரமான நதியல்ல பல இடங்களில் புற்றீசல் போல புறப்பட்டு மறையும். இந்தப் பெரும் பள்ளத்தாக்கில் வாழ்ந்த இனமே நாஸ்க்கா என அழைக்கப்படுகிறது.



■ வலையவன்

இன்றைக்கு 2800 ஆண்டுகளுக்கு முன் இருந்த இனம் எனச் சொல்லலாம்.

ஒரு நாகரிகம் எந்த அளவுக்கு சிறப்பாக இருந்திருக்கிறது என்று பார்த்தால் அவர்கள் உபயோகித்த பொருள்களைவைத்து ஓரளவிற்கு மதிப்பிட்டுவிடலாம். இவர்கள் உருவாக்கிய செராமிக் கைவினைப் பொருள்கள் மிக அழகானவை மட்டுமல்ல தொழிற்சிறப்பு வாய்ந்ததாகவும், துணி வகைகள் தரமிக்கதாகவும் அகழ்வாராட்ச்சியினர் மதிப்பிடுகின்றனர்.

'ப்யூகியோஸ்' என்ற நிலத்தடி நீர் ஊற்றுக்களை அமைத்திருந்தனர். நமது ஊர் கிணறு போல, ஆனால் சுழற்படியில் கீழே இறங்கி செல்லவேண்டும். இது இன்றும் செயல்பாட்டில் இருக்கிறது. 'ப்ரோசோபஸ் பாலிடா ' எனும் ஒருவகை மரங்கள் தான் பஞ்சு உற்பத்திக்கும் நிலத்தின் உறுதி தன்மைக்கும் காரணமாயிருந்தன. ஒரு கட்டத்தில் இந்த மரங்கள் முற்றாக அழிக்கப்பட்டு விட்டன. இதனால் திடீர் வெள்ளப் பெருக்கினால் இந்த இனத்தின் ஒரு பகுதியினர் அழிந்து போயிருக்கலாம்.

மனிதன் இயற்கை வளங்களை சுரண்டுவதாலும் சீரழிப்பதாலும் விளைவு என்னவாகும் ? ... ஆம், ஒரு கால கட்டத்தில் அற்புதமான நிலப்பகுதி அற்பமான நிலப்பகுதியாக மாறியது.

அது ஒரு வறண்ட பூமியாக சொற்பமான தண்ணீருடன் ஏறக்குறைய பாலைவனப் பூமியாக போய்விட்டது. ஆனாலும் எஞ்சிய இந்த இனம் தொடர்ந்து பல இடர்பாடுகளுடன் அங்கேயே வாழ்ந்து வந்திருக்கின்றனர். இவர்களின் தீவிர இயற்கை கடவுள் வழிபாடும் இந்த இனத்தின் அழிவுக்கு ஒரு காரணம் எனச் சொல்கின்றனர்.

அது என்ன தீவிர வழிபாடு ?...நரபலி தான்.

குவியல் குவியலாக தலை வெட்டப்பட்ட மண்டை ஓடுகள் அகழ்வாராட்ச்சியினருக்கு கிடைத்தன. அதிலும் சில மண்டை ஓடுகள் நடு நெற்றியில் துளையிடப்பட்டுக் கிடந்தன. நெற்றிப் பொட்டுக்கு பதில் ஓட்டை என கற்பனை செய்து கொள்ளுங்கள் எதற்கு ? லாவகமாக கழுத்தில் மாட்டிக் கொள்ளலாம் அல்லது இடுப்பில் கட்டிக்கொள்ளலாம்.

இவை ஒரு பரிசுப்பொருள் போல பாதுகாக்கப்பட்டிருந்தன. பெரும்பாலான மண்டை ஓடுகளின் நடுப்பகுதிகள் இல்லை. அவைகள் வண்ணம் தீட்டப்பட்ட அழகிய செறாமிக் கிண்ணங்களாக கிடைத்திருக்கின்றன. இன்றும் உயர் பாலைவனப்பகுதியாக இருக்கும் இந்தப் பகுதியில் நாஸ்க்கா இன மக்கள் உருவாக்கிவிட்டுப் போன பல உருவங்கள், வரைப்படங்கள் போன்ற கோடுகள் என 1500 சதுர கிலோ மீட்டர் நிலப்பரப்பில் இறைந்துகிடக்கின்றன.

தரையில் இருந்து இவைகளைப் பார்த்தால் உருவங்கள் புலப்படுவதில்லை. ஒவ்வொரு படமும் 200 முதல் 500 அடி நீள அகலங்களில் விஸ்தாரமாக இருக்கின்றன.

ஆயிரத்திற்கும் மேற்பட்ட கோட்டுப் படங்கள், திமிங்கிலம், மீன், சுருள் வட்டங்கள், சிட்டுக் குருவி, கருடன், கடற்பாசி, சிலந்தி, குரங்கு, மரம், பூ, உடும்பு, ஓணான், கொக்கு, கைகள், ஏலியன்ஸ் இப்படி இதன் உருவங்கள் நீள்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீடுழி வாழும் சங்கர் எனும் நாமம்




வாழ்ந்தார் என்பதற்கு அடையாளமாக வாழும் வகை தெரிந்து வாழ்ந்தவர்கள் என்றும் காலத்தால் வாழ்த்தப்படும் பண்புடையோராவர். அத்தகைய புகழோர் வரிசையில் சங்கர் என அன்புரிமையுடன் அழைக்கப்பட்ட இந்திரராசா செங்காரபிள்ளை அவர்களுக்குச் சிறப்பான அழியா இடம் உண்டு.

செட்டியார் அச்சகத்தினது வளர்ச்சியில் ஈடுபட்டவர் பாரதி அச்சகத்தின் முகாமையாளராகப் பலராலும் அறியப்பட்டிருந்தவர். தொல்புரம் சண்முகநாயக முதலியார் வழிவந்த இந்திரராசாவுக்கும் சுழிபுரம் சேதுகாவல முதலியார் வழிவந்த செல்லம்மாவுக்கும் மகனாகப் பிறந்தவர். ஆரம்ப இடைநிலைக்கல்வியை சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியிலும் உயர்தரக் கல்வியை யாழ். மத்திய கல்லூரியிலும் பெற்றார். தமிழ் நாட்டின் காரைக்குடி அழகப்பாக் கல்லூரியில் பட்டப்படிப்பை மேற்கொண்டார். தமிழரசுக்கட்சி தொண்டனாக அதன் வாலிப முன்னணியின் செயலாளராய்ச் சிறந்த சேவைகளை ஆற்றினார்.

நேர்மையும் நற்பண்புகளும் ஒளிர அனைவரும் விரும்பும் ஒரு மனிதராக வாழ்ந்தார். அனைவருக்கும் உதவும் உள்ளத்தோடு ஊர் போற்ற யாவரையும் அணைத்திருந்தார். பலருடைய நெருங்கிய உறவினுள்ளே அவர் நேசமிகுந்த நண்பராய், நினைவை விட்டகலாத உழைப்பாளியாய் மொழி இனப்பற்று மிகுந்த இலட்சியவாதியாக வாழ்ந்தார். உண்மையோடும் உரிமையோடும் உறுதியோடும் அவர் செயற்பட்ட வேளைகள் அவரது கடமை உணர்வுடன் செழித்த வலிமையின் வெளிப்பாடுகளாய்த் திகழ்ந்தன.

பத்திரிகைத் துறையில் அவர் கொண்டிருந்த ஈடுபாட்டின் வளத்தால் ஊடகவியலாளர்களுள் சிறப்புடையவராய் சுதந்திரன் பத்திரிகையின் உதவி ஆசிரியராய் பணியாற்றிவர். பூங்குன்றன், சங்கர் ஆகிய புனை பெயர்களில் அவர் எழுதிய அரசியல் விமரிசனப்பகுதி பிரபல்யம் மிக்கதாகும். அவர் எழுதிச் சேகரித்த இலக்கியச் செல்வங்கள் யாவும் இல்லையென்றான போதும்அவரை நினைவுபடுத்தும் 'ராஷ்டிரபதி'பவன் எனும் ஆக்கமொன்று நூலுருப் பெற்றுள்ளது.

வீரகேசரி பத்திரிகையின் செய்தி ஆசிரியராகப் பணியாற்றிவர், உதயன் பத்திரிகையின் ஊடக செயற்பாடுகளோடு இணைந்து செயற்பட்டவர். சிறந்த ஊடகவியலாளராகச் செயற்பட்டதன் வழி யாழ். பல்கலைக் கீழகப் புறநிலை அலகின் இதழியல் விரைவுரையாளராகித் தமது அறிவின் சிறப்பாலும் அனுபவப் பங்களிப்பாலும் பலருடைய மனங்களிலும் நிறைந்தவர்.

கல்விப் புலத்தில் அவரது பங்கு அளப்பரியது. கல்வித் திணைக்களங்கள், தொண்டமானாறு வெளிக்கள நிலையம், தமிழாசிரியர் சங்கம், வட இலங்கை சங்கீத சபை, சைவபரிபாலனசபை, யாழ். இந்துக்கல்லூரிச் சமூகம் என்பவற்றுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டு ஆலோசனைகளையும் வேண்டிய அச்சக உதவிகளையும் நிறைவாகச் செய்தவர். சங்கர் நேசித்த தாய் மண்ணினதும் மக்களினதும் மேன்மைக்காக அஞ்சாது முன்னின்றுழைத்தவர். உழைப்பவர் கரத்தையும் மனத்தையும் உயர்வாக மதித்தவர். 21 ஆம் திகதி ஐப்பசி மாதம் 1937 ஆம் வருடம் பிறந்தவர். 23 ஆம் திகதி ஆவணி மாதம் 2012 ஆம் திகதி 75 ஆவது அகவையில் எம்மைவிட்டு மறைந்தார்.

விளம்பரங்களை விரும்பாத ஓர் உன்னதமான சேவையாளனை நாம் இழந்தோம் என்று சொல்ல மனம் ஒப்பவில்லை. நின்று நிலைத்த அவரது நன்மனத்தின் எண்ணங்களால் ஒளிவிரியும் பிள்ளைகளின் உயர்வும் வாழ்வும் அவரின் எண்ணத்தின் விரிவை எமக்கு என்றும் நினைவுபடுத்தும் என்ற நம்பிக்கையுடையோம்.

வாழ்வு மரணத்தோடு முடிந்து விடுவதில்லை. வாழ்வோர் அவரது வாழ்வை வாழ்த்தும் காலமெல்லாம் அவர் உலகில் உயிர்ப்புடனிருந்து வாழ்வார் என்பதே நிச்சயமாகும். சங்கர் அவர்களது வாழ்வும் நீடூழி வாழ்வே.

நெடுந்தீவு மகேஷ்

# தான் சார்ந்த சமூகத்துக்கு தன்னையே அர்ப்பணித்தவர் அமரர் திருநாவுக்கரசு



"என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற தாரக மந்திரத்தைத் தனது இலட்சியமாகக் கொண்டு இவ்வுலக வாழ்வை நகர்த்தி தான் சார்ந்த சமூகத்தவர்களின் வளர்ச்சிப் பாதைக்கு வழி காட்டியவர் பொன்மனச்செம்மல் வட இலங்கை சர்வோதய அறங்காவலர் அமரர் க.திருநாவுக்கரசு.

புங்குடுதீவுக் கிராமத்தில் பிறந்த இவர் தொண்டர் பாடசாலைக் கல்வியைப் பூர்த்தி செய்த காலத்தில் அதாவது 1950 களின் பிற்பகுதிகளில் தந்தை செல்வாவின் பாசறையில் இணைந்து தமிழர்களின் வாழ்வுரிமைக்காகக் களம் பல கண்டவர். ஆளுமை, பேச்சாற்றலினால் தமிழ் இளைஞர்கள் மத்தியில் செல்வாக்கையும் மதிப்பையும் பெற்ற நிலையில் தமிழரசுக்கட்சியின்வாலிப முன்னணிச் செயலாளராகத் தன்னை வெளிப்படுத்தியவர்.




தமிழ் மக்களின் அன்றாடத் தேவைகளின் அவசியத்தை உணர்ந்தவர். அரசியலில் இருந்து ஓய்வைப் பெற்ற கலாநிதி ஏ.ரி.ஆரியரட்ணாவின் 'இலங்கைச் சர்வோதயம்' என்ற அமைப்பில் இணைந்து வடமாகாணப் பொறுப்பாளராக உயர்ந்து வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் மக்களின் தேவைகளை இனம்கண்டு சேவையாற்றினார். பின்னர் 1972 ஆம் ஆண்டு வட இலங்கை சர்வோதயம் என்ற அமைப்பை நிறுவி அதன் அறங்காவலராக இருந்து மிகச் சிறப்பான சமூகப் பணியை மேற்கொண்டவர். சிரமதானப் பணிகள், கிராமங்கள் தோறும் தூயநீர் கிடைக்கச் செய்தல், மழை நீரைத் தேக்கி வைத்தல், குளங்களைத் தூர்வாரல், புதிய குளங்களை நிர்மாணித்தல், நியாய விலைக் கடைகளை ஏற்படுத்தல், மாதிரிக் கிராமங்களை உருவாக்கல், குடும்பப் பாதுகாப்புக் காப்புறுதித்திட்டம், குடும்பநிதியச்சேவைத்திட்டம், அங்கவீனர் சேவைத் திட்டம், விதவைகள், கைவிடப்பட்ட பெண்களுக்கான சேவைகள், வெள்ள, வறட்சி நிவாரணப் பணிகள், மயான அபிவிருத்தித் திட்டம், முதியோர் பராமரிப்புத் திட்டம், ஆன்மிகக் கலை, கலாசாரப் பணிகள் போன்ற பல்வேறு நலத் திட்டங்களையும் தன்னந்தனியே இருந்து வடமாகாணத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட கிராம மக்களின் வாழ்வுக்கு உதவியவர். அதாவது சாட்டியில் நன்னீர்ப் பிரதேசக் காணி ஒன்றைக் கொள்வனவு செய்து அதில் கிணற்றை நிர்மாணித்து புங்குடுதீவு மக்களின் அடிப்படைத் தேவையான நீரை வழங்க வழி செய்தவர்.

யோகர் சுவாமிகளிடம் நேரடியாக ஆசிபெற்ற இவர் ஆன்மிகப்பணிகள்பலவற்றைச் செய்தவர்.

'இளமையில் கல்வி சிலையில் எழுத்து' என்பதற்கு ஏற்ற வகையில் மாணவர்களுக்காக சிறுவர் பாடசாலைகளை அமைத்தல், அறநெறிப் பாடசாலைகளை ஸ்தாபித்தல், நூலகங்களை உருவாக்குதல் போன்ற கல்விப் பணியில் பெருநாட்டம் கொண்டு வடமாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட கிராமங்களில் நிறுவி கல்விப் பசியை தீர்த்தவர்.

நிலத்தில் விழும் ஒரு துளி மழையாயினும் கடலில் சென்றடையக் கூடாது என்பதைக் கருத்தில் கொண்ட அரச நிர்வாகங்களை அணுகி நிதி பெற்று அணைகட்டி நீரைச் சேமிப்பதற்கு முன்னுரிமை கொடுத்துச் செயற்பட்டவர். 1990 ஆம் ஆண்டு தீவகத்தில் குறிப்பாகப் புங்குடுதீவிலிருந்து ஒட்டுமொத்த வெளியிடப் பெயர்வும் 1996 இல் மட்டுப்படுத்தப்பட்ட மீள் இடப்பெயர்வும் நிகழ்ந்தபோதெல்லாம் பாதுகாப்பு, போக்குவரத்து மற்றும் அடிப்படை வசதிகளற்ற நிலையில் வாழ்ந்து வந்த மக்களுக்குப் பாதுகாவலராகவும் வழிகாட்டியாகவும் செயற்பட்டவர்.

**கா.குகபாலன்,**
**புவியியற் பேராசிரியர் யாழ். பல்கலைக்கழகம்.**

# மறைந்தும் மறையாத அஞ்சல் திணைக்கள அத்தியட்சகர் எஸ்.தர்மராஜன்



ஈழநாட்டில் வடபால் அமைந்து, எண்சாண் உடம் பிறக்கும் சிறந்திடும் வெள்ளிபோல் விளங்கிடும் யாழ். கோப்பாய் வடக்கு கிராமத்தில் சின்னத்தம்பி சின்னத் தங்கம் தம்பதிகளுக்கு சிரேஷ்ட புதல்வனாக 1939 ஆம் ஆண்டு அமரர் தர்மராஜன் அவதரித்தார். அவர் நீண்டு உயர்ந்த கம்பீரமான தோற்றம் அறிவின் புகலிடமாக சாதனையின் மன்னனாகத் திகழ்ந்தார். 1960 ஆம் ஆண்டு தபாற்திணைக்களத்தில் இரவு நேரத் தொலைத்தொடர்பு இயக்குநராகச் சேர்ந்தார். பின்பு தபால் அதிபராகத் தரம் உயர்த்தப்பட்டு அதன் பின் நுண்ணாய்வுப் பரிசோதகராகக் கடமையாற்றினார். பின்பு தபால் அத்தியட்சகர் தேர்வில் விசேடமாகச் சித்தியடைந்து அதி உயர் தரத்துக்கு உயர்த்தப்பட்டுத் தபால் அத்தியட்சகராக முல்லைத்தீவு மாவட்டத்திலும் யாழ்ப்பாண மாவட்டத்திலும் கடமையாற்றினார். அன்னாரின் உத்தியோக உயர்விற்கு அவரின் தொழிற்திறன், கடமையுணர்வு, ஆளுமை போன்ற அரிய குணங்கள் உதவியாக இருந்தன. தபால் திணைக்களத்தில் 35 வருடங்களுக்கு மேலாகப் பணிபுரிந்து ஓய்வுபெற்றவர்.

"எண்ணிய எண்ணியார்க்கு எய்துப எண்ணியார்" என்ற வள்ளுவரின் குறளுக்கு இலக்கணமாக வாழ்ந்தவர். "வெள்ளத்தனைய நீர்மட்டம் மாந்தர்தம் உள்ளத்து அணையது உயர்வு என்பதற்கிணங்க" என்றும் எதிலும் ஊக்கத்துடன் ஈடுபடும் பெரும் குணம் அன்னாரின் உயர்வுக்குக் காரணமாக அமைந்தது. மனச்சாட்சியிடம் மனதை ஒப்படைக்கத் தவறுபவன் தன்னை இறைவனிடம் ஒப்படைப்பதில்லை என்பதை தனது இலட்சியமாக வாழ்ந்து காட்டியவர். நன்றே செய் அதனை இன்றே செய் என்பதற்கிணங்க எதையும் சோர்வின்றிச் செய்வதோடு முன்வைத்த காலைப் பின்வைக்காது வாழ்ந்து காட்டிய பெருமகன் இவர். முல்லைத்தீவு மாவட்டத்தில் சேவை செய்த காலம் போர்க்காலமாக இருந்தபடியால் மிகுந்த கஷ்டங்களுக்கு மத்தியில் செய்யும் தொழிலே தெய்வம் என்று கடமையே கண்ணாகத் தியாக மனப்பான்மையுடன் ஏழை மக்களுக்குப் பணிபுரிந்தவர் என்று கூறினால் அது மிகை ஆகாது.

''நவில்தொறும் நூல்நயம் போலும் பயில் தொறும்
பண்புடையாளர் தொடர்பு''

என்று திருக்குறள் கூறுகின்றது. சிறந்த நூல்கள் எப்படி படிப்பவர்களுக்கு வழிகாட்டியாக இருக்கின்றதோ அது போல் இவரும் பழகியவர்களுக்கு சிறந்த வழிகாட்டியாக வாழ்ந்தவர். இவரது இழப்பு இவரது குடும்பத்துக்கு மாத்திரமல்லாமல் அதற்கு அப்பால் அஞ்சல் திணைக்களத்தில் பணிபுரியும் ஊழியர்கள், நல்ல ஆலோசகரை, சிறந்த நிர்வாகியை இழந்துவிட்டனர். இவர் ஓய்வுபெற்ற பின்பும் இவரது அறிவுரைகள் இன்று பணிபுரியும் ஊழியர்களுக்கு ஊக்கமளித்த வண்ணம் உள்ளன. இந்த உலகில் எவ்வளவு காலம் வாழ்ந்தாலும் எப்படி வாழ வேண்டும் என்பதை வாழ்ந்து காட்டியவர். இவரது ஆன்மா ஈழத்துச் சிதம்பரத்தில் வீற்றிருக்கும் சௌந்தராம்பிகை அம்பாள் சமேத சுந்தரேஸ்வர பெருமானுடைய திருவடிகளில் நிரந்தர சாந்தியடைய அவன்திருத்தாள்என்றென்றும்வணங்கிவேண்டுகின்றேன்.

**ஆ.முருகேசு, ஓய்வுபெற்ற தபாலதிபர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்தவரும் வாழ வேண்டும்

இந்த உலகத்தில் தான் மட்டும் வாழ்ந்தால் போதும் என்று நினைப்பவர்கள் தான் அதிகமானோர். எனினும் தானும் வாழவேண்டும், அடுத்தவர்களும் வாழவேண்டும் என்று நினைப்பவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

முதலாவதாகச் சொன்ன வகையைச் சேர்ந்த மனிதர்கள் எப்படியானவர்கள் தெரியுமா?

எப்படியாவது தான் மட்டும் வாழ்ந்தால் போதும் என்ற சிந்தனைதான் அவர்களுக்கு இருக்கும். தங்களுடைய வளர்ச்சிக்கு எது தடையாக இருந்தாலும் சரி, யார் தடையாக இருந்தாலும் சரி, அதை அழித்து விட்டுத்தான் மறுவேலை பார்ப்பார்கள். அவர்களெல்லாம் பாவ காரியங்களுக்குத் தயங்கவே மாட்டார்கள். அவ்வாறான வாழ்க்கை அவர்களுக்கு இடையூறாக அமைந்துவிடுவது உண்டு. இதை விளக்க ஒரு சிறந்த கதை உண்டு.

ஓர் ஊரில் மேற்கூறப்பட்ட வகையைச் சேர்ந்த மனிதர் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் அதிகமான பாவங்களைச் செய்தவர். அதன்காரணமாக ஒரு நரகப்படுகுழியிலே விழுந்து விட்டார்.

நரகப்படுகுழி என்பது ஒரு பெரியகிணறு மாதிரி. ஏற்கனவே பாவம் செய்தவர்கள் அதிகமானோர் அதற்குள்ளே விழுந்து கிடக்கின்றனர். அதற்குள்ளிருந்து அதிக சத்தம். எல்லாம் அந்தப் பாவ ஆத்மாக்கள் போடும் சத்தம் தான். இப்போது விழுந்த இவரும் சத்தம் போட்டார். அவர் போடும் சத்தம் சிறிது அதிகமாகத்தான் கேட்டது.

அந்தக் கிணற்றுக்கு அருகில் புத்தர் அமர்ந்திருந்தார். அவருக்கு அவன் போடும் சத்தம் கேட்டது. உடனே அந்த கிணற்றடிக்குப் போனார். குனிந்து கிணற்றைப் பார்த்தார்.

''சுவாமி.... என்னைக் காப்பாற்றுங்கள்!'' என்று அவன் கத்தினான்.

புத்தர் அவனை சிறிது நேரம் கவனித்துப் பார்த்தார். மனித சமுதாயத்துக்கு அவன் என்னென்ன கெடுதல் செய்திருக்கின்றான் என்பதெல்லாம் அவரது மனக்கண்ணுக்கு தெரிந்தது. அவருக்கு எல்லாம் புரிந்தது. எனினும் அவனைக் காப்பாற்றுவதற்கு ஏதாவது வழி உண்டா என்று சிந்தித்தார். அவன் தன்னுடைய வாழ்நாளில் ஏதாவது நன்மை செய்துள்ளானா என்று சிந்தித்துப் பார்த்தார்.

ஒரே ஒரு சமயம் அவன் தன் காலடியில் மிதிக்கப்பட இருந்த சிலந்தியை மிதிக்காமல் தாண்டிப் போயிருக்கின்றான். இந்த ஒரு விடயத்துக்காக அவனை கரையேற்ற முடியுமா என்று நினைத்தார். அப்போது அவரது கையில் சிலந்தி ஒன்று வந்து உட்கார்ந்திருந்தது. அதிலிருந்து நூலிழை வெளிவரஆரம்பித்து அந்த நூலிழை கிணற்று ஆழம் வரை நீண்டு கொண்டு சென்றது.

புத்தர் பார்த்தார். ''இந்த நூலைப்பிடித்து மேலே ஏறிவா'' என்று அவனுக்குச் சொன்னார். ''என்ன சொல்லுகிறீர்கள்... இந்த நூல் என்னைத்தாங்குமா?...'' என்று கத்தினான்.

''எல்லாம் தாங்கும்; அதைப்பிடித்து ஏறிவா!'' என்றார். சந்தேகத்துடன் அந்த நூலைப்பிடித்து இழுத்துப் பார்த்தான். வலுவாக இருந்தது. அவனுக்கு ஆச்சரியம். அதைப்பிடித்துக் கொண்டு மெதுவாக மேலே ஏறிவர ஆரம்பித்தான். அரைவாசித்தூரம் ஏறி வந்திருப்பான் அப்போது அவன் காலுக்கு கீழே ஏதோ சத்தம். என்னவென்று குனிந்து பார்த்தான் கீழே கிடந்தவர்கள் சிலரும் அந்த நூலைப் பிடித்தபடி மேலே வந்துகொண்டிருந்தனர். அவனுக்கு கோபம் வந்தது. தனது இடுப்பில் செருகிவைத்திருந்த கத்தியை எடுத்து தன் காலுக்கு கீழே உள்ள நூலிழையை வெட்டிவிட்டான். இனிமேல் நாம் மட்டும் மேலே ஏறி வந்து விடலாம் என்று நினைத்தான்.

ஆனால் நடந்தது வேறு...

மொத்த நூலிழையும் அறுந்து விழுந்தது. அவனும் பொத்தென்று கீழே வந்து விட்டான். மறுபடியும் கத்த ஆரம்பித்தான். ஏற்கனவே அவன் செய்திருந்த ஒரு கருணை அந்த நூலிற்கு உறுதியைக் கொடுத்தது. இப்போது அவன் செய்த பாவம் அந்த நூலிழையை வலுவிழக்கச் செய்து விட்டது.



அடுத்தவர்களும் வாழ வேண்டும் என்ற எண்ணம் அவனுக்கு இருந்தால்.... இப்போது அவனும் கரையேறி வந்திருப்பான். அதனாலே நாமும் வாழ வேண்டும் அடுத்தவர்களும் வாழ வேண்டும் என்று நினைப்பவன் வாழ்வில் விரைவாக முன்னுக்கு வந்து விடுவான்.

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# வாசகர் திருமுகம்

## விஞ்ஞானப் பட்டதாரிகள் நியமனத்தில் புறக்கணிப்பு

உதயன் பத்திரிகையில் கடந்த 28.09.2012 அன்று வெளியான 5 ஆம் பக்கச் செய்தியில் வடமாகாண கல்வி அமைச்சு அதிகாரிகளால் வடமாகாண விஞ்ஞான பட்டதாரிகள் மீது சில குறைபாடுகள் குறித்து குறிப்பிடப்பட்டன. எனவே அதனைத் தெளிவுபடுத்துவது விஞ்ஞான பட்டதாரிகளாகிய எங்களது கடமையாகும்.

வடமாகாண விஞ்ஞானப் பட்டதாரிகள் ஆசிரியர் சேவையில் நாட்டங்கொள்ளவில்லை என்பதையும் அதேபோல் பரீட்சையில் சித்திபெறத் தவறிவிட்டனர் என்பதையும் ஏற்றுக் கொள்ளமுடியாது.

ஏனெனில் பரீட்சையில் சித்தியடைந்து 100 இற்கும் மேற்பட்டவர்கள் நேர்முகத் தேர்வுக்கு சென்றார்கள் என்பதைஉறுதியாகக் கூறமுடியும்.

ஏனெனில் யாழ்.பல்கலைக்கழகத்தில் இருந்து மட்டும் 2008, 2009, 2010 ஆண்டிலிருந்து வெளியேறிய விஞ்ஞான பட்டதாரிகள் தொகை 220ஐத் தாண்டும். அவர்களில் 150 பேருக்கு குறையாமல் பரீட்சைக்குத் தோற்றி அதில் 100 பேருக்கு குறையாதவர்கள் பரீட்சையில் சித்தியடைந்து நேர்முகத் தேர்வுக்கு தெரிவாகியிருந்தார்கள்.

1000 ஆசிரியர்களில் 09 மாகாணத்தின்படி பார்த்தாலே குறைந்தது தலா 110 பேரையாவது வடமாகாணத்திற்கு நியமித்திருக்க வேண்டும். சரி நாம்தான் சித்திபெறவில்லை என்று வைத்துக்கொள்வோம் நீங்கள் தேசிய ரீதியில் சித்தியடைந்த 110 பேரை வடமாகாணத்தில் நியமிக்க வேண்டியது தானே?

சரியாகச் சொன்னால் வடமாகாண விஞ்ஞானப் பட்டதாரிகள் இந்த நியமனத்தில் புறக்கணிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதே உண்மையாகும். ஏனெனில் நேர்முகத் தேர்வின்போது விஞ்ஞான பாடங்களுக்கு வெற்றிடம் அதிகமாக காணப்படுவதாகவும் நிச்சயம் நியமனம் வழங்கப்படும் எனவும் எமக்கு தெரியப்படுத்தப்பட்டது.

தற்போது என்ன நடைபெற்றுள்ளது? நம்பவைத்துக் கழுத்தறுக்கப்பட்டோம். எவ்வளவு எதிர்பார்ப்புடன் இருந்தோம். தற்போது கற்ற கல்வியை பயன்படுத்த முடியாத பரிதாப நிலையில் இருக்கின்றோம். ஆனால் இது அடிக்கடி கூட்டம் போட்டு கொண்டாடும் எமது அரச அரசியல்வாதிகளுக்கு எங்கு விளங்கப் போகிறது.

மற்றைய மாகாணங்களைப் பொறுத்தவரை அநேகமான மாகாணங்களில் (கிழக்கு மாகாணம் உட்பட) விஞ்ஞான பட்டதாரிகளுக்கு அந்தந்த மாகாண சபையினால் நியமனங்கள் வழங்கப்பட்டு விட்டன. எமக்கும் மாகாண சபை இருந்தால் அவர்கள் வழங்கக்கூடிய சாத்தியக்கூறுகள் இருந்திருக்கும்.

சரி இவ்வளவு கதைக்கும் வடமாகாண கல்வி அமைச்சின் அதிகாரிகளால் மாகாண கணித, விஞ்ஞான ஆசிரியர் வெற்றிடத்தை நிரப்புவதற்கு ஆட்சேர்ப்பு செய்ய ஆவன செய்ய முடியுமா? இவர்களுக்கு ஆளுநருடன் கதைப்பதற்குப் பயம். பிறகு எப்படி சாத்தியமாகும்?

இவர்களால் ஆகக்குறைந்தது ''ஏன் 37 விஞ்ஞான பட்டதாரிகளை மட்டும் வடமாகாணத்திற்கு நியமித்தீர்கள்'' என்று எழுத்து மூலமான வினாவினை இசுறுபாயவிடம் தொடுக்க முடியுமா?

இவ்வளவு கேள்விக்கும் வடமாகாண கல்வி அமைச்சிலுள்ள அதிகாரிகளில் யாராவது பதில் கூறுவார்களா?

**[illegible] விஞ்ஞான பட்டதாரி.**

## ஆலயங்களில் பக்திப் பாடலை மட்டும் ஒலிபரப்புவார்களா?

''இசையால் வசமாகா இதயம் உண்டா'' இறைவனே இசைவடிவமாகத் திகழும் போது, இந்த இசைக்கு அடிமைப்படாதவர்கள் எவருமில்லை. அந்த வகையில் யாழ்.குடாநாட்டு ஆலயங் களில் தற்போது பெரும் திருவிழாக்கள், உற் சவங்கள், வேள்விகள் என்று நடந்துமுடிந் துள்ளன . 2006 ஆம் ஆண்டிலிருந்து 2009 ஆம் ஆண்டுவரை கிடப்பிலே இருந்த இசைக் கருவிகள், மேளக்கச்சேரிகள் இந்த வருடம் ஆலயங்களில் தமது திறமைகளை வெளிப்படுத்தி மக்கள் மனதில் இடம் பிடித்தன. மூத்த கலைஞர்களோடு, இளம் கலைஞர்களும் உருவாகி இருப்பது வரவேற்கத்தக்க விடயமாகும். இதில் மனதுக்கு வேதனை தரும் விடயமாக ஆலய இசை நிகழ்வுகள் ஓரிரண்டு பக்தி கானங்களுடன் ஆரம்பித்து மிகுதிப் பாடல்கள் சினிமாப்பாடல்களுடன் முடிவடைகின்றன. இறைவனைப் பாட எத்தனையோ பக்திகானங்கள் இருக்கின்றன. நாதஸ்வர தவில் மேதைகள் பக்திப்பாடல்களை ஆலயங்களில் வாசித்து இறை அருளினை ஏற்படுத்துங்கள். இப்படிப்பட்ட செயல்களுக்கு ஆலய நிர்வாகம் மற்றும் அடியார்கள் ஒத்துழைப்பு வழங்கினால் கலைஞர்கள் பக்திப் பாடல்களைப் பாடி, தமது திறமைகளை வெளிக்காட்டுவார்கள்.

ஆண்டவரை நினைத்து அருள் வேண்டி மன்றாடும் ஆலயங்களில் முன்னையவர்கள் தேவாரம், திருவாசகம், பாடி இறையருள் பெற்றனர். இன்று எமக்கு நவீனகாலத்திற்கேற்ற இசைக்கருவிகள் பல கிடைத்துள்ளன. எனவே பக்தி கானங்களை ஆலயங்களில் இசைக்கும்படி அடியார்கள் கேட்டு நிற்கின்றனர்.

**மு. அருமைச்சந்திரன், வடவரணி**

## பொற்பதி வீதியை புனரமைப்பார்களா?

பொற்பதி வீதி நீண்ட காலமாக புனரமைப்பு இன்றி சேதமடைந்து காணப்படுவதால் அந்த வீதியூடாகப் பயணம் செய்யும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

கடந்த 2009ஆம் ஆண்டில் இந்த வீதியை முழுமையாக புனரமைப்பதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வேலைகள் நடைபெற்றன. ஆனாலும் சில இடங்கள் தவிர மற்ற இடங்கள் மேலோட்டமாக தார் ஊற்றப்பட்ட நிலையில் புனரமைப்பு வேலைகள் இடைநிறுத்தப்பட்டன. புனரமைப்புக்குக் கொண்டுவரப்பட்ட மூலப் பொருள்கள் மீள எடுத்துச் செல்லப்பட்டன.

நல்லூர் பிரதேச அபிவிருத்திக் குழு கூட்டத்தில் பலமுறை சுட்டிக்காட்டியும் சம்பந்தப்பட்டவர்களுக்குக் கடிதம் அனுப்பியும் எந்த வித பலனும் இதுவரை ஏற்படவில்லை.

இப்பொழுது இந்தவீதி படுமோசமான நிலையில் சேதமடைந்து காணப்படுவதால் இந்த வீதி சம்பந்தமாக பல முறை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு எடுத்துக் கூறியும் எந்தவிதமான நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த விடயத்தில் அக்கறை எடுத்து வீதியை திருத்தித் தருமாறு மக்கள் கேட்டு நிற்கின்றனர்.

**பொற்பதி இந்து விளையாட்டுக்கழகம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை மூலிகைகளைக் கொண்டு எளிய முறையில் முகத்தின் அழகை மெருகூட்டச் செய்யலாம்

*இரவு உணவுக்குப் பின் வாழைப்பழம், பழுத்த கொய்யா மற்றும் அந்த அந்த சீசனில் அதிகளவு விளையும் பழங்களைச் சாப்பிடுவது நல்லது. பழங்களில்தான் நார்ச்சத்து மிகுந்துள்ளது.*



நெல்லி வற்றலை இரவு முழுவதும் தண்ணீரில் ஊற வைத்து காலை எழுந்தவுடன் அந்த நீரில் முகம் கழுவி வரவேண்டும். அப்போது முகத்தில் உள்ள வெப்பக் கட்டிகள், பருக்கள், தழும்புகள் வடுக்கள் கொஞ்சம் கொஞ்சமாக மாற ஆரம்பிக்கும். நாளடைவில் உங்கள் முகம் அழகான தோற்றத்தைப் பெறும். உடலும் முகமும் வசீகரம் அடைய சில வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

★ மலச்சிக்கல் இருந்தால் முகத்தின் பொலிவு கெட்டுவிடும். எனவே மலச்சிக்கல் இருப்பவர்கள் தினமும் கீரையை உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். எளிதில் ஜீரணம் ஆகக் கூடிய உணவுகள் நல்லது.

★ நீர் அருந்த வேண்டும். சீரகம் கலந்து நன்கு காய்ச்சிய கொதிநீரை ஆறவைத்து குடிக்க வேண்டும்.

★ இரவு உணவுக்குப் பின் வாழைப்பழம், பழுத்த கொய்யா மற்றும் அந்த அந்த சீசனில் அதிகளவு விளையும் பழங்களைச் சாப்பிடுவது நல்லது. பழங்களில்தான் நார்ச்சத்து மிகுந்துள்ளது.

★ கொழுப்புச் சத்து நிறைந்த உணவுகளைத் தவிர்க்க வேண்டும்.

★ எண்ணெயில் பொரிக்கப்பட்ட உணவுகளைத் தவிர்ப்பது நல்லது.

★ அதிகம் குளிர்ந்த நீரிலோ அல்லது அதிக சூடான நீரிலோ முகத்தைக் கழுவக் கூடாது.

★ முகத்தைத் துடைக்க மென்மையான பருத்தித் துணியை உபயோகப்படுத்த வேண்டும்.

★ வெள்ளரிப் பிஞ்சை வாங்கி தோல் சீவி சிறு சிறு துண்டுகளாக நறுக்கி காய்ச்சாத பசும் பாலில் ஊறவைக்க வேண்டும். அரைமணி நேரம் கழித்து அதை எடுத்து முகத்தின் மீது தடவினால் முகம் பொலிவுறும்.

★ முகத்தில் பருக்கள் தோன்றினால் அதைக் கிள்ளக் கூடாது.

★ இரவு படுக்கைக்கு முன் முகத்தைக் கழுவி துடைக்க வேண்டும். பின் சுத்தமான சந்தனத்தோடு எலுமிச்சம் பழச்சாறு கலந்து முகத்தில் தடவி வந்தால் முகம் பளபளக்கும்.

★ தக்காளிப் பழத்தை மிக்ஸியில் அரைத்து எடுத்து அதனுடன் எலுமிச்சம் பழச்சாறு கலந்து முகத்தில் தடவி மெது வாக மசாஜ் செய்ய வேண்டும். இவ்வாறு பதினைந்து நாள்கள் செய்துவந்தால் உங்கள் முகமும் கண்ணாடி போல் ஜொலிக்கும் .

★ மன அழுத்தம், அடிக்கடி கோபம், பயம், எப்போதும் ஒரே சிந்தனை போன்றவற்றின் தாக்கம் முதலில் முகத்தில்தான் ஆரம்பிக்கும்.

★ திருநீற்றுப் பச்சிலையுடன் சிறிது வசம்பு, ஜாதிக்காய் சேர்த்து அரைத்து பருக்கள் மீது தடவிவந்தால் பருக்கள் மாறும்.

★ சுத்தமான தேனை முகத்தில் தடவி வந்தால் முகம் பளபளக்கும்.

★ மது, புகை மற்றும் போதைப் பொருள்களைத் தவிர்க்க வேண்டும்.

★ உணவில் அதிககாரம், உப்பு சேர்க்கக்கூடாது.

★ தினமும் யோகா, தியானம், உடற்பயிற்சி செய்வது நல்லது.

# பேஷியல் செய்யும் முன்னும், பின்னும்

ஒருசில சருமத்தினருக்கு மட்டுமே அந்த பேஷியல் சரிபடும். மேலும் பேஷியல் செய்யும் முன்னும், பின்னும் ஒரு சிலவற்றை செய்தால், சருமம் நன்கு பாதுகாப்போடு இருக்கும். அது என்ன என்று பார்ப்போம்.

## பேஷியல் செய்யும் முன்



✱ எப்போதும் பேஷியல் செய்யும் முன் சருமத்தை செக் பண்ண வேண்டும். சருமம் பேஷியல் செய்வதற்கு சரியாக உள்ளதா, இல்லையா என்று பார்க்க வேண்டும். அதிலும் சென்சிட்டிவ் சருமம் உள்ளவர்கள் பேஷியல் செய்யும் முன் அழகு நிபுணர்களை நாட வேண்டும்.

✱ முகத்தில் பருக்கள் இருந்தால் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். ஏனெனில் அந்த நேரத்தில் பேஷியல் செய்தால், முகம் கெட்டுவிடும். மேலும் பரு முகம் முழுவதும் பரவி, அழகை கெடுத்துவிடும்.

✱ பேஷியல் செய்யும் முன் வெயிலில் செல்லக் கூடாது. ஏனெனில் சூரியனிடமிருந்து வரும் புறஊதாக் கதிர்கள் சருமத்தில் பட்டால், பேஷியல் செய்த பின்னர், அதன் விளைவு தெரிய வரும். ஆகவே பேஷியல் செய்யப் போகும்முன் நீண்ட நேரம் வெயிலில் செல்லாமல் இருப்பது நல்லது. சொல்லப் போனால் வெயில் படாதவாறு ஒரு வாரம் இருந்தால், நல்லது.

## பேஷியல் செய்த பின்னர்

✱ பேஷியல் செய்த பின்னர், முகத்தை விரல்களால் தேய்க்கக்கூடாது.

✱ பேஷியல் முடிந்த பின்பு 2 மணிநேரத்துக்கு முகத்தை கழுவ கூடாது. வேண்டுமென்றால் முகம் எண்ணெய் பசையுடன் இருந்தால் மட்டும்தான் முகத்தை குளிர்ந்த நீரால் கழுவ வேண்டும்.

✱ இந்த நேரத்தில் புருவத்தை வடிவமைத்தல், முகத்துக்கு ஆவி பிடித்தல் போன்றவற்றை செய்யக் கூடாது. ஏனெனில் பேஷியல் செய்த பின்னர், சருமம் மிகவும் சென்சிடிவ்வாக இருக்கும். அந்த நேரத்தில் புருவத்தை வடிவமைத்தால், ஈஸியாக வந்துவிடும். ஆகவே அவற்றை எல்லாம் செய்யாமல், சருமத்தை சற்று ரிலாக்ஸ் ஆக விடுங்கள்.

✱ பேஷியல் செய்தப் பின்னர், 2-4 மணிநேரத்துக்கு வெயிலுக்குள் செல்ல வேண்டாம். இதனால் புறஊதாக்கதிர்கள் சருமத்தை பாதிப்பதோடு, சருமத் துளைகளையும் பாதிப்படைய செய்யும். இதனால் பேஷியல் செய்ததே வீணாகிவிடும்.

# உங்களுக்கு உலர்ந்த சருமமா?

★ உலர்ந்த சருமம் உள்ளவர்கள் கிளிசரினுடன் ரோஸ் வாட்டர் மற்றும் எலுமிச்சை சாறு கலந்து முகத்தில் தடவி வரலாம்.

★ முகம் மிருதுவாகவும், ரோஸ் நிறத்துடனும் இருக்க ரோஜாப் பூ (பன்னீர் ரோஜா)இதழ்களை அரைத்து, அதோடு பால், பச்சை பயறு மா, மற்றும் ரோஸ் வாட்டர் கலந்து முகம் மற்றும் கழுத்தில் தடவி வர வேண்டும்.இவ்வாறு செய்து வந்தால் பளபளப்பாக மாறுவதைக் காணலாம்.

★ கரும்புள்ளிகள் உள்ள இடத்தில், பச்சை பயறுடன் சிறிது தயிர் சேர்த்து தடவி வர வேண்டும். பின் அது காய்ந்ததும் கைகளால் மேலும் கீழும் நன்கு தேய்த்த பின்னர் முகத்தை கழுவ வேண்டும். இவ்வாறு செய்தால் முகத்தில் உள்ள கரும்புள்ளிகள் நாளடைவில் மறையும்.



★ கடலை மா ஆறு கரண்டி, பாலாடை இரண்டு கரண்டி, எலுமிச்சம் பழச்சாறு 10 சொட்டு, கிளிசரின் ஒரு கரண்டி கலந்து தினமும் ஒருமுறை முகம், கை, கழுத்து பகுதிகளில், தடவி வந்தால் வெயிலால் ஏற்படும் கருமை நிறம் மறையும்.

★ வெள்ளரிச்சாறு ஒரு கரண்டி, சந்தனப்பொடி ஒரு கரண்டி, கடலைமா ஒரு கரண்டி எடுத்து மூன்றையும் நன்கு கலந்து முகம், கை கால்களுக்கு தினமும் போட்டு வந்தால் முகம் பிரகாசமாக மாறுவதை பார்க்கலாம்.

★ ஒரு லீற்றர் தேங்காய் எண்ணெயில் நெல்லிக்காய் பொடி, தான்றிக்காய் பொடி, மருதாணி பொடி, கறிவேப்பிலை பொடி, கரிசலாங்கண்ணி பொடி, வெட்டிவேர், ரோஜா இதழ்கள், சந்தனப் பொடி ஆகியவை தலா 10 கிராம் அளவு சேர்த்து, எண்ணெயில் போட்டு கொதிக்க வைக்கவும். இந்த கலவையை நாலு நாள் வெயிலில் வைத்து வர வேண்டும். சூரிய கதிர்கள் பட்டு எண்ணெயில் எசன்ஸ் இறங்கும். பின் அதை வெள்ளைத் துணியில், வடிகட்டவும். குளிக்கும் முன் இதை தலையில், தேய்த்து வந்தால், முடி உதிர்தலும் நரைமுடியும் குறையும், செம்பட்டை முடி கருமையாகும், பொடுகு தொல்லையும் நீங்கும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org